# சக்தி

மாத வெளியீடு

OFFICE OF ... MADRAS
8 NOV 1939



'காணி நிலம் வேண்டும்' — பாரதி

(121-ம் பக்கம் பார்க்க)

விரைவில் வெளிவருகிறது !

எதிர்பாருங்கள் !!

சக்தி மலர் - 4

ருஷிய மகான்

டால்ஸ்டாய் எழுதிய

# போரும் காதலும்

(1)

என்ற அற்புதமான நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பு.

மிக இனிய எளிய தமிழில் ஸ்ரீ. பொ. திருகூடசுந்தரம் பிள்ளை மொழி பெயர்த்திருக்கிறார்.

அச்சில் இருக்கிறது. விரைவில் வெளிவரும்.

விலை. ரூ. 0 12 0

**சக்தி காரியாலயம்,**

**51/C, 52, அரமனைக்காரத் தெரு, சென்னை.**



## ஸண்டே டைம்ஸ் பிராஸஸ் ஸ்டுடியோ

லைன் பிளாக்குகள்
ஆப்டோன் பிளாக்குகள்
நவீன முறைகளில்
செய்து தரப்படும்

வியாபாரிகளுக்கு சகாய
மாகவும் துரிதமாகவும்
சேவைகள் செய்யும்

விவரங்களுக்கு :

மானேஜர், "**ஸண்டே டைம்ஸ்**", சென்னை.

போன் : 2678.

## சந்தா விகிதம்

உள் நாடு

| | | | |
|---|---|---|---|
| வருடச் சந்தா | ... | ரூ. | 3 0 0 |
| 6 மாதம் | ... | ,, | 2 0 0 |
| தனிப்பிரதி | ... | ,, | 0 4 0 |

| | பர்மா | மலேயா |
|---|---|---|
| வருடச் சந்தா | ரூ. 4 0 0 | ரூ. 5 0 0 |
| 6 மாதம் | ,, 2 4 0 | ,, 2 12 0 |

சிலோன் 25 சதம்

மாதிரிப் பிரதி வேண்டுவோர் தபாற் செலவு சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

## "சக்தி" மாத வெளியீடு
### விளம்பர விகிதம்

அட்டை

| | | | |
|---|---|---|---|
| 2-வது பக்கம் | ... | ரூ. | 20 |
| 3 ,, | ... | ,, | 20 |
| 4 ,, | ... | ,, | 30 |

உள் பக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கம் | ... | ரூ. | 15 |
| ½ ,, | ... | ,, | 7-8 |

மற்ற விளம்பர விவரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர், "சக்தி",
51/C, 52, அரமனைக்காரத் தெரு,
சென்னை.

---

## ஆசிரியர் அறிவிப்பு

'சக்தி'க்குக் கதை, கட்டுரை, கவிகள் அனுப்புவோர், காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதி யனுப்ப வேண்டுகிறோம்.

கதை, கட்டுரை, கவிகளைத் திருத்தவோ, கூட்டவோ, குறைக்கவோ, மாற்றவோ ஆசிரியருக்குப் பூரண உரிமையுண்டு.

பிரசுரிக்கப்படாத கதை, கட்டுரை, கவிகளைத் திரும்பப் பெற வேண்டுவோர், தங்கள் விஷயத்தை அனுப்பும்போது கூடவே போதிய தபால் தலை வைத்து அனுப்ப வேண்டும்.

ஆசிரியர்,
'சக்தி'

# பொருளடக்கம்


காலச்சுழல் ... 97
லியோன் ட்ராட்ஸ்கீ — 'ஸரவி' ... 99
காந்தி வாக்கு — ('ஹரிஜ'னிலிருந்து) ... 101
பொய்யர்கள் சங்கம் — (உல்லாஸி) ... 103
அன்பு வித்தை — (ஹீலன் கெல்லர்) ... 104
என் தாயார் — பண்டித முத்துசாமி ... 105
காவலன் தீபம் — (ஹரீந்திரநாத சட்டோபாத்தியாயா) ... 106
பாரத சக்தி மஹாகாவியம் — சுவாமி சுத்தானந்த பாரதியார் ... 109
புது டில்லிப் பிச்சைக்காரன் — ஆர். பி. மகாதேவ சிங் ... 113
புலன்கள் எத்தனை? — 'வசு' ... 115
விமான யுத்தம் ... 117
எமனுக்கு அழைப்பா? — 'பிக்ஷு' ... 118
சமஸ்தானங்களில் பெண்ணுரிமை — எஸ். விசாலாக்ஷி ... 119
புதுமைக்கவி பாரதி — தி. ஜ. ர. ... 120
முகப்புச்சித்திர விளக்கம் ... 121
வரிகள் — லியோ டால்ஸ்டாய் ... 122
கனவை நனவாக்கிய கிராமம் — சங்கு சுப்ரஹ்மணியம் ... 123
ஜெர்மன் குயில்: மொஜார்டு — ஆனந்தன் ... 125
பறித்த பூக்கள் ... 127
காலத்தேர் — சுவாமி சுத்தானந்த பாரதியார் ... 129
தினசரி வாழ்க்கை — அ. சீனிவாசராகவன் ... 133
ஸலூனில் கருமி — க. நா. சுப்ரமண்யம் ... 135
புருஷ விக்கிரகங்களுக்கு — வி. ரா. ராஜகோபாலன் ... 136
செட்டிமார் நாட்டிலே — கு. ப. ராஜகோபாலன் ... 137
'கிராம'க் காதல் — 'ஓ' ... 138
உடம்பும் மருந்தும் ... 138
இரு எண்ண மணிகள் — வி. ஆர். எம். செட்டியார் ... 139
குழந்தையைத் தாங்கும் அல்லி இலை — டாக்டர் ல. காமேசுவர சர்மா ... 140
பாலர் கதை: முதலைப் பாலம் ... 141
,, பாட்டு: எலிக் கலியாணம் — தே. வி. ... 142
புத்தக உலகம் ... 143

# எங்களிடம் கிடைக்கும் நூல்கள்

### சக்தி காரியாலய வெளியீடுகள்

#### சக்தி மலர்

| | | |
|---|---|---|
| இனி நாம் செய்ய வேண்டியது யாது? | 0 | 12 |
| உலகம் சுற்றும் தமிழன் | 0 | 12 |
| நிர்மல குமாரி | அச்சில் | |

### அன்பு நிலய வெளியீடுகள்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

| | | |
|---|---|---|
| பைந்தமிழ்ச் சோலை | 0 | 4 |
| இன்ப மாலை | 0 | 6 |
| உடலுறுதி | 1 | 0 |
| பொது நெறி | 0 | 2 |
| திருக்குற ளின்பம் | 1 | 4 |
| ,, கலிக்கோ | 1 | 12 |
| இன்று மனிதனும் இனிவரும் மனிதனும் | 0 | 6 |
| வரகவி தாகூர் | 0 | 3 |
| தியானமாலை | 1 | 0 |
| புதுமையும் பழமையும் (நாடகம்) | 0 | 8 |
| வசந்த சுந்தரி | 0 | 10 |
| சிவாஸ்திரம் | 0 | 8 |
| புத்தர் கருணை | 0 | 8 |
| அன்பின் அற்புதம் | 0 | 10 |
| திருநூல் அல்லது தூயவாழ்வு | 1 | 0 |
| தமிழுணர்ச்சி | 1 | 0 |
| யோகசித்தி | 2 | 8 |
| அரவிந்த யோக தீபிகை | 0 | 8 |
| மஹா கவி காளிதாசன் | 1 | 4 |
| நாடகக் கலை | 0 | 3 |
| மஹரிஷி தாயுமானுர் | 0 | 4 |
| ஏழை படும் பாடு | 1 | 8 |
| இளிச்சவாயன் | 1 | 0 |
| பக்திப் பரவசம் (பாமலர்-க) | 0 | 10 |
| குழந்தை யின்பம் ( ,, -உ) | 0 | 3 |
| பேரின்பம் ( ,, -ங) | 0 | 4 |
| திருமணப் பாட்டு ( ,, -ச) | 0 | 4 |
| அன்னை | 0 | 4 |
| சிலம்புச் செல்வம் | 1 | 12 |
| ஹிந்தி அவசியமா? | 0 | 4 |
| அருட்சுடர் | 0 | 12 |
| மகா கவி தாந்தே | 1 | 0 |

### பாரதி பிரசுராலய வெளியீடுகள்

#### சி. சுப்பிரமணிய பாரதியார்

| | | |
|---|---|---|
| தேசிய கீதங்கள் | 0 | 5 |
| தோத்திரப் பாடல்கள் | 0 | 5 |
| வேதாந்தப் பாடல்கள் | 0 | 3 |
| விநாயகர் நான்மணி மாலை | 0 | 2 |
| கண்ணன் பாட்டு | 0 | 3 |
| புதிய ஆத்திச்சூடி முரசு, பாப்பா, பாட்டு | 0 | 1 |
| பாரதி அறுபத்தாறு | 0 | 1½ |
| குயில் | 0 | 2½ |
| பாஞ்சாலி சபதம் | 0 | 8 |
| ஸ்வசரிதையும் பிறபாடல்களும் | 0 | 10 |
| ஞான ரதம் | 0 | 4 |
| பதஞ்சலியோக ஸூத்ரம் | 0 | 3 |
| வேத ரிஷிகளின் கவிதை | 0 | 2 |
| கீதை முன்னுரை | 0 | 2 |
| சந்திரிகையின் கதை | 0 | 8 |
| நவதந்திரக் கதைகள் | 0 | 6 |
| கதைக் கொத்து | 0 | 8 |
| தராசு, சித்தக்கடல் | 0 | 4 |
| கட்டுரைகள் தத்துவம் | 0 | 10 |
| ,, மாதர் | 0 | 8 |
| ,, கலைகள் | 0 | 8 |
| ,, சமூகம் | 0 | 12 |
| Agni & Other Poems | 1 | 0 |
| Essays and other prose fragments | 1 | 0 |
| பாரதி விளக்கம் | 0 | 4 |

### நவயுகப் பிரசுராலய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| கம்பன் கவிதை | 1 | 8 |
| புதுமைப் பித்தன் கதைகள் | 2 | 0 |
| கட்ட பொம்மு | 1 | 8 |
| பேஸிஸ்ட் ஜடாமுனி | 1 | 8 |
| தேவதாஸ் | 1 | 0 |
| உலகத்துச் சிறு கதைகள் | 1 | 0 |
| மாகாண சுயாட்சி | 0 | 8 |
| தேய்ந்த கனவு | 0 | 8 |
| சீனு—ஜப்பான் | 0 | 8 |
| மைக்கேல் காலின்ஸ் | 0 | 8 |
| எல்லோரும் ஓர் குலம் | 0 | 8 |
| வார்தா திட்டம் | 0 | 8 |
| இரட்டை மனிதன் | 0 | 8 |
| பொம்மையா, மனைவியா? | 0 | 8 |
| லெனின் | 0 | 8 |
| திரிபுரி காங்கிரஸ் | 0 | 6 |
| நாம் எங்கிருக்கிறோம் | 0 | 4 |
| கப்சிப் தர்பார் | 0 | 8 |
| மதனி | 0 | 4 |
| ஆறு கதைகள் | 0 | 4 |
| பக்த குசேலா | 0 | 3 |
| நாசகாரக் கும்பல் | 0 | 3 |
| அடிமைத்தாய் | 0 | 3 |
| சுகாதாரச் சட்ட விளக்கம் | 0 | 1 |

### Nature Cure Publishing House

| | | |
|---|---|---|
| Practical nature cure | 4 | 0 |
| Drugless healing | 0 | 6 |
| Fasting cure | 0 | 6 |
| Defective sight—its cause and cure | 0 | 3 |
| Mental healing | 0 | 2 |
| Pranayama | 0 | 2 |
| Maha Yoga | 1 | 0 |
| மருந்தில்லா வைத்தியம் | 0 | 4 |
| வாயு பலம் | 0 | 2 |
| உபவாச தத்துவம் | 0 | 4 |
| பூர்ண சக்தி அல்லது நோயற்ற இன்பவாழ்வு | 0 | 4 |
| பத்திய உணவு | 0 | 2 |

### புதுச்சேரி பாரத சக்தி நிலய வெளியீடு

சுவாமி சுத்தானந்த பாரதியார்

| | | |
|---|---|---|
| பாரத சக்தி | 1 | 8 |
| ,, (கலிகோ) | 2 | 0 |
| அரவிந்தப் பிரகாசம் | 0 | 12 |
| Mahatma Ramalingam | 1 | 0 |
| கீதை காட்டும் பாதை | 0 | 10 |
| The Yoga of Sri Aurabindo | 2 | 0 |
| பரமஹம்ச லீலை | 2 | 4 |
| ஞானத்திருமலை | 0 | 0 |
| வைராக்கிய கீதம் | 0 | 1 |
| அரவிந்த வாசகம் | 0 | 2 |

### சக்தி தாசன்

| | | |
|---|---|---|
| தமிழ் வெறி | 0 | 4 |
| பாரதி லீலை | 0 | 5 |

### Harindranath Chattopadhyaya

| | | |
|---|---|---|
| Five plays | 1 | 8 |
| Strange Journey | 3 | 0 |

### T. Lakshmana Pillai

| | | |
|---|---|---|
| இசை நூல் (சங்கீதம்) | 5 | 0 |

### மயிலை சீனி. வெங்கிடசாமி

| | | |
|---|---|---|
| பௌத்தமும் தமிழும் | 1 | 8 |
| கிருஸ்தவமும் தமிழும் | 1 | 0 |

### வெ. சாமிநாத சர்மா

‘பிரபஞ்ச ஜோதி பிரசுரம்’

| | | |
|---|---|---|
| அபிமன்யு வீரநாடகம் | 0 | 8 |
| பண்டித மோதிலால் நேரு | 0 | 12 |
| முஸோலினி | 1 | 4 |
| அபிசீனிய சக்ரவர்த்தி | 0 | 8 |
| ஹிட்லர் | 2 | 4 |
| ஸ்பெயின் குழப்பம் | 0 | 10 |
| ஜெக்கோ | 1 | 0 |

### மின்னொளிப் பிரசுரம்

பிரிக்கப்பட்ட பர்மா
பெடரல் இந்தியா
சமஸ்தான இந்தியா
இந்தியாவின் தேவை
உலகக் கண்ணாடி
காந்தியும் ஜவஹரும்
சார்லஸ் டார்வின்
ஐஸக் நியூடன்
பிரபுல்ல சந்திர ரே
தாமஸ் எடிசன்
ஜகதீச சந்திரபோஸ்
சி. வி. இராமன்

(ஒவ்வொன்றும் 2 அணா)

### சைவ எல்லப்ப நாவலர்

| | | |
|---|---|---|
| திருவருணைக் கலம்பகம் மூலமும் (உரையும்) | 1 | 0 |

### இதர வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| திருப்பெரு வடிவம் | 0 | 3 |
| உயிரின் உண்மை | 0 | 8 |
| Rupee Interest ready reckoner | 1 | 4 |
| English parallelr proverbs | 0 | 8 |

### ஸ்ரீ ப. கோதண்டராமன், M.A., B.L.

| | | |
|---|---|---|
| யோகம் செய்ய வேண்டுமா? | 1 | 0 |
| அரவிந்தரும் அவரது யோகமும் | 0 | 9 |
| உபாசினி பாபா | 0 | 6 |

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகளும், அலையன்ஸ் கம்பெனி, இதர பிரசுரங்களும் கிடைக்கும்.

**சக்தி காரியாலயம், 51/C, 52, அரமனைக்காரத் தெரு, சென்னை.**

# சக்தி

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

மலர் ௧ : இதழ் ௧ — விக்கிரம – புரட்டாசி

# காலச் சுழல்

### மகாத்மா தூது

கண்ணபிரான், துரியோதனனிடம் தூது சென்றார். பாண்டவர் பங்கு ராஜ்யத்தைக் கொடு என்று கேட்டார். இல்லையென்றான் நூற்றுவர் தலைவன். பாதி ராஜ்யம் பாண்டவருக் குண்டு. அதுகூட வேண்டாம், ஐந்து ஊர் கொடு என்று கேட்டார் கண்ணன். இல்லை யென்றே சொல்லி விட்டான் துரியோதனன். ஐந்துஊரும் வேண்டாம், ஐந்து வீடாவது கொடேன் என்று இரந்தார் பிரபு. அதற்கும் மறுத்துவிட்டான் அரவக் கொடியோன். பாரதப் போர் மூண்டது.

பகவான் கண்ணனைப் போல, மகாத்மா காந்தி, இன்று காங்கிரஸின் சார்பாக, வைஸிராய்ப் பிரபுவிடம் தூது செல்கிறார். சுயராஜ்யம் இந்தியர் பிறப்புரிமை. அதைக் கூட இப்போது பிரிட்டன் வழங்க வேண்டாம். பேச்சுச் சுதந்திரமாவது அளியுங்கள் என்று கேட்கச் செல்கிறார் ஐயன். காங்கிரஸுக்கு இந்த ஐரோப்பிய யுத்தத்திலே நம்பிக்கை யில்லை. அதைப் பகிரங்கமாக மக்களிடம் பிரசாரம் செய்ய, காங்கிரஸுக்கு உரிமை வேண்டும். இந்தப் பேச்சுரிமையைக் கேட்கவே காந்தி தூது செல்கிறார். வைஸிராய் அதை அளிப்பாரா? அல்லது பாரதக் கதையாய்த் தான் முடியுமோ?

### ராஜாஜி குற்றமல்ல

தேசீயப் போராட்டத்துக்கு மட்டிலுமே அஹிம்சை; தற்காப்புக்கும் உள் நாட்டு அமைதி காக்கவும் பலாத்காரம் வேண்டியதுதான் என்று டில்லியிலே காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானித்தது. இந்தத் தீர்மானத்தின் மூலகர்த்தா, ராஜாஜிதான். இத் தீர்மானத்தினால், சர்க்காருடன் ராஜி ஏற்பட வழி திறக்குமென்று ராஜாஜி கருதினார். வழி திறக்கவில்லை; பூர்ண அஹிம்சாவாதியான காந்திஜி தான் அடியோடு காங்கிரஸை விட்டு விலகினார். இப்போது அந்தத் தீர்மானம் காலாவதியாகி விட்டது. மகாத்மா காந்தி, காங்கிரஸ் கப்பலின் மாலுமி ஸ்தானத்தை ஏற்றுவிட்டார்.



ஆனால், ராஜாஜியை, அந்தத் தீர்மானத்துக்காகக் குறை கூறுவது தவறு என்று காந்திஜி இப்போது விளக்கியிருக்கிறார்; "நான் ராஜாஜியை வற்புறுத்தியிருப்பேனேகில், டில்லித் தீர்மானத்தை அவர் கொண்டுவந்தேயிருக்கமாட்டார்" என்கிறார். மேலும் காந்திஜி கூறுவதாவது:—

"நான் ராஜாஜியை நன்கறிவேன். அவர் மிகவும் தீர புருஷர். ஆகவே அவருக்கு எவருடைய அணைப்பும் தேவையில்லை. அவர் பெரும் வேதாந்தி. எனவே, எவர் மீதும் பல மணி நேரம், ஏன், சில நிமிஷங்கள் கூடப் பகைமை பாராட்டமாட்டார். அவரிடம் நேர்த்தியான ஹாஸ்ய உணர்ச்சி குடிகொண் டிருக்கிறது. அவரைப் பரிகாசமாகப் பேசிய போதிலும் அவர் அந்தத் தமாஷையும் ரசிப்பார் என்பதை நான் அறிவேன்.

"ராஜாஜி தாம் செய்த எல்லாக் காரியத்திலும் தைரியமாகவும் சரியாகவும் நடந்து கொண்டிருக்கிறார். நடந்த தவறுதலெல்லாம் என்னால்தான்.

"ஒரு பொதுஜன ஊழியரைத் தவறாக மதிப்பது பிசகாகும். அதிலும் ராஜாஜியைப் போன்ற ஒருவரைத் தவறாக மதிக்கும்போது பிசகு இரட்டிப்பாகும். ஆனால், ராஜாஜி இதனால் ஒருவித நஷ்டமும் அடையவில்லை. தன் உண்மையான ஊழியரைத் தவறி மதிப்பிடுவதால், தேசமே தனக்கு ஹானியைத் தருவித்துக் கொள்கிறது."

'என்னடியார் தவறு செய்யார்; செய்தாரேனும் அது தவறல்ல' என்று பகவான் அருள்வதாக ஓர் ஆழ்வார் பாடியிருக்கிறார். அதுபோல, ராஜாஜியை, மகாத்மாவும் ஆதரிக்கிறார். அவர் ஓர் உத்தமன்.

உண்மையில் தவறு ராஜாஜியிடமும் இல்லை; மகாத்மா விடமும் இல்லை. பிரிட்டிஷ் சர்க்காரின் தவறுதான் இப்படியெல்லாம் ரூப

மெடுக்கிறது. ராஜாஜியின் பெருந் தன்மையான உன்னத சமிஞ்ஞையை பிரிட்டன் ஏற்றிருந்தால், ஐயன் காந்திக்கு, இந்தத் தள்ளாத பருவத்திலே இவ்வளவு பெரும் பொறுப்பு நேரிட்டிராது. விதியின் இந்தச் சூழ்ச்சிகளெல்லாம், அந்த உத்தமனின் உன்னத தர்மத்துக்கு ஒளியும் பெருமை நல்குகின்றன. அது ஆண்டவன் திருவுள்ளம் என்றே நாம் உவகை கொள்ள வேண்டும். நமது இந்தப் பெரு மித நேரத்திலே, யாரையும் நாம் குறை கூறலாகாது; தவருக எண்ணலு மாகாது. இதைத் தான் வலியுறுத்துகிறது மகாத்மாவின் கட்டுரை.

## போட்டா போட்டி

“செப்டம்பர் மத்தியிலே, எனது புதிய நிர்வாக சபையை அமைத்துக் கொள்ள வேண்டும். ஆகையால், உடனே பதில் தாருங்கள்” என்று ராஷ்டிரபதி ஆஸாதை வைஸிராய் வேண்டினர். “தேசீய சர்க்கார் அல்லாத நிர்வாக சபையில் காங்கிரஸ் சேரமுடியாது” என்று ஆஸாது பதிலளித்து விட்டார். வைஸிராய் திணறிக்கொண் டிருக்கிறுர். செப்டம்பர் மாசமும் ஏறக்குறையக் கழிந்து, சில தினங்களில் அக்டோபரும் வரப் போகிறது. புதிய நிர்வாக சபை அமையும் குறி எதையும் காணும்.

ஆனல், அந்த நிர்வாக சபையிலே பதவிகள் பெற, முஸ்லீம் லீக்கும் ஹிந்து மகா சபையும் தவிக்கிற தவிப்பும் போடுகிற போட்டியும் சகிக்க முடியவில்லை.

“எங்களுக்கு அந்த நிர்வாக சபையிலே இரண்டு ஸ்தானங்கள் வேண்டும்” என்று ஏலங் கேட்டது முஸ்லீம் லீக். “அப்படியானல், எங்கள் ஜனத்தொகை விகிதாசாரப்படி எங்களுக்கு ஆறு ஸ்தானங்கள் வேண்டும்” என்று கேட்கிறது ஹிந்து மகா சபை. இந்த வகுப்பு வாதச் சபைகளுக்குத் தேசத்தைப் பற்றிக் கவலையில்லை; ஏழை ஜனங்களைப் பற்றிக் கவலையில்லை; ஜனநாயகத்தைப் பற்றிக் கவலையில்லை. தங்கள் தங்கள் வகுப்பாரில் பத்துப் பதினைந்து பேருக்குப் பெரிய உத்தியோகங்கள் கிடைப்பது பற்றித்தான் கவலை!

அட பகவானே! இவற்றின் தலைவர்களுக்கு நல்ல புத்தி அருள மாட்டாயா?

## பர்மாவில் தீவிர மந்திரி சபை

பர்மாவிலே யூ பூ மந்திரி சபை விழுந்து, யூ ஸா மந்திரி சபை அமைந்துள்ளது. மூன்று குற்றங்களுக்காக யூ பூ மந்திரி சபை வீழ்த்தப்பட்டது:

(1) ஹிட்லர் ஆக்ரமணத்தைக் கண்டித்தும், என்றாலும் பர்மிய ஜனங்களைக் கேட்காமலே பர்மாவை யுத்தத்தில் பிரிட்டன் மாட்டி விட்டதற்கு வருந்தியும் பர்மாச் சட்டசபை ஏற்கனவே ஒரு தீர்மானம் செய்தது. அந்தத் தீர்மானத்தை யூ பூ மந்திரி சபை புறக்கணித்து விட்டது; பிரிட்டனுக்கு நிபந்தனையற்ற ஒத்துழைப்புத் தருவதாக வாக்களித்தது.

(2) பர்மாத் தற்காப்புச் சட்டத்தைப் பிரயோகித்து, தேச பக்தர்களை யெல்லாம் யூ பூ மந்திரி சபை சிறையில் தள்ளியது.

(3) நிர்மாணத் திட்டம் எதையும் யூ பூ மந்திரி சபை கைக் கொள்ளவில்லை.

இந்த மூன்று காரணங்களுக்காகவே யூ பூ மந்திரி சபை கவிழ்க்கப்பட்டது. இதைப் பார்க்கும் போது, யூ ஸா மந்திரி சபை எத்தகைய கொள்கைகளைக் கடைப்பிடிக்கப் போகிறது என்பதை நாம் ஒருவாறு யூகித்துக் கொள்ளலாம். ஆயினும், பூரண சுதந்திரத்துடன் அது காரியம் செய்ய முடியுமா, பிரிட்டன்தான் அனுமதிக்குமா என்பது போகப் போகத் தான் தெரிய வேண்டும்.

## யுத்தம்

யுத்தம் அசையவில்லை; நின்ற விடத்திலேயே நிற்கிறது. இம்மாத யுத்த நிகழ்ச்சிகளைப் பின்வருமாறு சுருக்கிக் கூறிவிடலாம்:—

(1) லண்டனை ஜெர்மன் விமானங்களும் பெர்லினை பிரிட்டிஷ் விமானங்களும் தினந்தோறும் தாக்கின. ஒருநாள் பக்கிங்ஹாம் அரண்மனையிலே ஜெர்மன் குண்டுகள் விழுந்தன. பிரிட்டிஷ் ராஜ தம்பதிகளுக்கு எவ்வித விபத்தும் ஏற்படவில்லை. சர்ச்சிலின் கணக்குப்படி, நிரபராதிகளான 2000 பிரிட்டிஷ் மக்கள் மாண்டார்கள்.

(2) எகிப்தில் இதாலியப் படைகள் புகுந்து வருகின்றன. அவற்றை பிரிட்டிஷ் படைகள் தீரமாய்த் தாக்கி வருகின்றன.

(3) ருமேனியாவில் காரல் மன்னர் முடி துறந்தார். அவருடைய மகன் மைக்கேல் சிம்மாசனம் ஏறினர். ‘இரும்புக் காவலர்’ என்ற பாஸிஸ ஆட்சி ஸ்தாபிதமாயிற்று.

(4) ஸ்பெயினுடன் பிரிட்டன் ஓர் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்டது. அப்படியிருந்தும், எதிரிகளோடு யுத்தத்தில் கூட்டுச் சேர ஸ்பெயின் பேரம் பேசி வருகிறதாம். யுத்தத்திலே ஸ்பெயின் சேர்ந்தால், ஜிப்ரால்டரைப் பிடிப்பது சுலபமாகும்; ஜிப்ரால்டரைப் பிடித்தால், பிரிட்டனுக்கு மத்திய தரைக் கடல் வழி அடைபட்டு விடும். இதுதான் எதிரிகளின் நோக்கமெனத் தோன்றுகிறது.

(5) இந்தோ-சைன விஷயத்தில், ஜப்பானுக்கும் பிரஞ்சு விச்சி சர்க்காருக்கும் சமரசம் ஏற்பட்டு விட்டது. ஜப்பானியப் படைகள், அங்கு போயிறங்கி, அந் நாட்டைத் தங்கள் ராஜபாட்டையாக உபயோகிக்கின்றன.

(6) அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் கடற்படை உதவி ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. அதன்படி கீழ்த்திசையில் சில தீவுகளை அமெரிக்காவுக்கு பிரிட்டன் அளித்து, பல டெஸ்டிராயர்க் கப்பல்களை அதனிடமிருந்து வாங்கிக் கொண்டது.

(7) பிரஞ்சு மேற்காப்பிரிக்காவிலுள்ள டாகாரைத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டு வர, ஜெர்மானியர் முயற்சித்தார்களாம். இதையறிந்து, சுதந்திர பிரான்ஸ் இயக்கத்தலைவரான தளபதி டிகாலே லண்டனிலிருந்து, பிரிட்டிஷ் படைகளின் உதவியுடன் அங்கு ஓடினர். அங்குள்ள பிரஞ்சு ராணுவமே இவர்களைச் சுட ஆரம்பித்ததால், பிரஞ்சுக்காரருக்கும் பிரஞ்சுக்காரருக்குமே சண்டை கூடாதென்ற உன்னதமான எண்ணத்தோடு திரும்பிவந்து விட்டாராம். டாகாரிலுள்ள முக்கிய விமானத் தளங்களை யெல்லாம் ஜெர்மனியும் இதாலியுமாக வசப்படுத்திக் கொண்டிருக்கின்றனவாம்.

பிரபலஸ்தர் வரிசை 3

# லியோன் ட்ராட்ஸ்கீ

சென்ற மகா யுத்த முடிவிலே, உலகத்துக்கே புதுமையானதோர் ஆச்சர்யப் புரட்சி ருஷியாவில் நிகழ்ந்தது. அதுதான் பொதுஉடைமைப் புரட்சி. அதன் மூலகர்த்தாவின் பெயர் லெனின். அவருடைய, இரண்டு இணையற்ற தோழர்கள் ஸ்டாலின், ட்ராட்ஸ்கீ என்ற இருவருமாவர். லெனின் உயிரோடிருக்கையிலேயே, புரட்சி சித்தி தரு முன்னரே, ட்ராட்ஸ்கீக்கும் ஸ்டாலினுக்கும் உள்ளுக்குள்ளே பொருமை கனிந்து கொண்டேயிருந்தது. லெனின் மாண்டார்; இவ்விரு தலைவர்களின் பொருமைத் தீயும் கொழுந்து விட்டெரிந்து அனல் கக்கத் தொடங்கிவிட்டது. ஸ்டாலின் கை ஓங்கிற்று. ட்ராட்ஸ்கீ நாட்டைவிட்டே துரத்தப்பட்டார்; பல்லாயிரம் மைலுக் கப்பாலுள்ள மெக்ஸிகோ நகரில் அஞ்ஞாத வாசத்தில் வஞ்சகக் கொலை பாதகனின் தாக்குதலுக்கு ஆட்பட்டுச் சென்ற மாதம் மாண்டார். அந்த ட்ராட்ஸ்கீயின் வாழ்க்கை வரலாறு மகா உருக்கமானதாகும்.

லியோன் ட்ராஸ்கீ, 1877-ஆம் ஆடு பயாவிஸ்டாக் என்னுமிடத்தில், யூதப் பெற்றோருக்குப் பிறந்தார். வயது 20-ஆகு முன், பள்ளி மாணவனு யிருக்கையிலேயே, புரட்சியில் சேர்ந்தார். போலீஸாரால் கைதியாஞர். சிறைப்படுத்தப் பட்டார். அதுமுதல் இதே மாதிரி பல துன்பங்கள் அவரைத் தொடர்ந்தன. "சிறையே எனது சர்வகலாசாலை...... சிறை! தேசப்பிரஷ்டம்! அஞ்ஞாத வாசம்!" என்று அவரே தமது வாழ்வை வர்ணிக்கிருர்.

ஜார் ஆட்சியில் நாலு வருஷம் இருட்சிறை; இருமுறை தேசப்பிரஷ்டம். முதல் முறை இரண்டு வருஷம்; இரண்டாந் தடவை, சிலவாரத்திலே தப்பியோடி விட்டார். இருமுறை அஞ்ஞாத வாசம். யுத்தகாலத்திலே, ஜெர்மன் சர்க்கார் அவருக்குச் சிறைத் தண்டனை விதித்தார்கள். ஆனல் அதை யனுபவிக்க அவர் அங்கேயில்லை. அடுத்த வருஷம் பிரான்ஸிலிருந்து ஸ்பெயினுக்குத் துரத்தப் பட்டார். அங்கே மீண்டும் சிறை வாசம்! மாட்ரிட் சிறையிலிருந்து விடுதலை கிடைத்ததும், இந்த ஐரோப்பாவின் தொல்லையே வேண்டாமென்று அமெரிக்காவுக்கு ஓடிஞர். ஆனல், அங்கே எப்படிக் கால் தரிக்கும்? 1917-ஆம் ஆடு மார்ச்சு மீ ருஷ்யாவிலே புரட்சி நடப்பதாகக் கேள்விப்பட்டு, ஓடோடியும் வர முயன்ருர். பிரிட்டிஷ் சர்க்கார் அவரைச் சிறைப்படுத்தி, கானடா முகாம் சிறைக்குக் கொண்டு சென்று விட்டார்கள். எனினும், ருஷியாவில் ஏற்பட்ட அற்பாயுள் சர்க்கார், அவரை விட்டுவிடச் சொன்னது. விடுதலை பெற்றவுடனே, ருஷியாவை யடைந்து, போல்ஷ்விக்கரின் புரட்சிக் கிளர்ச்சியிலே தீவிரமாய் ஈடுபட்டு உழைக்கலாஞர்.



அந்தக் காலத்திலே, லெனினையே, இவர் கிரகணம் பிடித்து விடுவாரோ என்றுகூடத் தோன்றிற்று. அவ்வளவு சக்தியும் செல்வாக்கும் பெற்றுவிட்டார். ஸோவியத் சர்க்காரும் ஸ்தாபிதமாயிற்று. ஆனல், அந்த சர்க்கார், ஆரம்ப காலத்திலே கொள்ளைக் கூட்டமொன்றின் முகாமாகவேதான் இருந்தது. அதிலும், உள்ளுக்குள்ளே பல பிளவுகளும் கலசல்களும் தோன்றின. ஒரு சமயம், ட்ராட்ஸ்கீயும் வேறிருவரும் சேர்ந்து, லெனினை விட்டுவிட்டு, தங்கள் சொந்த சர்க்கார் ஒன்றைஸ்தாபித்துக் கொள்ளக்கூட முயன்ருர்கள்.

"அவர்களைச் சுட்டுத் தள்ளுங்கள்" என்ருர் ஸ்டாலின்.

"இல்லை; அவர்கள் திரும்பவும் நம்மிடமே ஓடிவருவார்கள்" என்று வெகு அலட்சியமாகப் பதிலளித்தார் லெனின். அப்படியே கொஞ்ச காலத்துக்கெல்லாம் அம் மூவரும் லெனினிடம் பணிந்து விட்டார்கள்.

ஸ்டாலின்மீது ட்ராட்ஸ்கீயும் ட்ராட்ஸ்கீமீது ஸ்டாலினும் புகார் செய்து, சூழ்ச்சிகள் புரிந்து கொண்டே வந்தார்கள். இருவரையும் இசைத்து, இசைத்துக் காரியம் செய்துவந்தார் லெனின்.

"நாம் இருவரும் நமது பழைய மனஸ்தாபங்களை யெல்லாம் மறந்து விடுவோம்; நண்பர்களாக இனி ஒற்றுமையோடு உழைப்போம்" என்று, ஒரு சமயம் ட்ராட்ஸ்கீயிடம் ஸ்டாலின் கூறிஞர்.

ட்ராட்ஸ்கீ அசட்டை செய்தார்.

"நான் ஒரு அடி முன்னே எடுத்து வைத்தேனுனல், பின்னே ஒரு அடி என்னைத் தள்ளி, மற்றவர் எனக்கு முன் போய் விடுகிருர்கள்" என்று அவர் எழுதினுர்.

ஸ்டாலின் அப்போது ஸோவியத் கட்சியின் காரியதரிசியா யிருந்தார். அதன் மூலம் அவர் பிரமாதமான செல்வாக்குத் திரட்டிக் கொண்டார். ட்ராட்ஸ்கீயின் பதவியும் முக்கியமானதுதான். அவரே யுத்த மந்திரி. லெனின் பிணியுற்றுப் பாரிசம் பிடித்துப் படுத்த படுக்கையா யிருந்தார். லெனினின் மனைவிக்கு ஸ்டாலினைக் கண்டால் பிடிப்பதில்லை. ட்ராட்ஸ்கீயிடம்தான் அவளுக்கு விசுவாசம். ஸ்டாலின் அயலூரில் இருந்தார். லெனின் சொல்லி எழுதியதாக, ஸ்டாலினுக்கு அவள் ஓர் கடிதம் எழுதினுள். ஸ்டாலினிடம் அதிகாரத்தைக் கொடுத்தது தமக்குத் துயரமாயிருப்பதாகவும், தமக்கும் ஸ்டாலினுக்கும் உள்ள சகல தொடர்புகளையும் அறுத்துக் கொள்ளுவதாகவும், லெனின் வாய்ப்

(ஸரஸி)

பிறப்பாக அந்தக் கடிதம் கூறியது. லெனினிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்வதாக, ஸ்டாலின் ஒரு பதில் எழுதினார். உடனே ஊருக்கும் திரும்பி வந்தார். லெனின் படுத்த படுக்கையாய், வாய் பேசக்கூட முடியாமல் கிடப்பதைக் கண்டார். லெனினின் மனைவியை மிரட்டி, தாம் எழுதிய மன்னிப்புக் கடிதத்தைத் திருப்பி வாங்கிக் கிழித்தெறிந்து விட்டார்.

லெனின் வாய்திறக்க மாட்டாரா என்று நண்பர்களெல்லாம் காத்துக் கொண்டிருந்தார்கள். லெனினுக்குப் பிறகு யார் தலைவராக வருவது? அதை அவர் குறிப்பிடுவாரா என்று எதிர்பார்த்தார்கள். லெனின் வாய் திறக்காமலே, கண்ணை மூடிவிட்டார். பிறகு, லெனினின் மனைவி, அவருடைய மரண சாஸனம் ஒன்றைப் பொதுஉடைமைக் கட்சியிடம் ஒப்படைத்தாள். கட்சிக் கூட்டத்திலே அந்த மரண சாசனம் படிக்கப்பட்டது.

ஸ்டாலின், ட்ராட்ஸ்கீ இருவரைப் பற்றியும் தீர்க்கதரிசனம் போல, "இவ்விருவரும் கட்சிக்குள்ளே பிளவு உண்டு பண்ணிவிடுவார்கள்" என்று அதில் லெனின் குறிப்பிட்டிருந்தார்.

"ஸ்டாலின் மிக முரடாயிருக்கிறார். அவர் காரியதரிசியாயிருக்க யோக்கியதையில்லை. அவரை இப்பதவியினின்று நீக்க, தோழர்களுக்கு யோசனை கூற உத்தேசிக்கிறேன்" என்றும் குறிப்பிட்டிருந்தார் அவர். ஆனால், அதற்கு மேல் ஒன்றும் சொல்லவில்லை.

"தோழர் ட்ராட்ஸ்கீ மகா அகம்பாவி. அவர் போல்ஷ்விக்கருமல்ல" என்று லெனின் எழுதியிருந்ததைப் படித்தார் காரியதரிசி ஸ்டாலின்.

"என்ன அது? மீண்டும் படியுங்கள்" என்றார் ட்ராட்ஸ்கீ.

ஸ்டாலின் அந்த வார்த்தைகள் ஒவ்வொன்றையும், நிறுத்தி, அழுத்தமாகப் படித்தார்.

யாரும் பேசவில்லை.

இரண்டு மனிதர்களுக்கும் அந்த நிமிஷத்திலிருந்து, பகிரங்கமாகவே போராட்டம் தொடங்கிவிட்டது.

கட்சிக் காரியதரிசி பதவியிலே ஸ்டாலின், ஸ்திரப்பட்டு விட்டார்.

"நான் வேண்டுமானால் ராஜினாமாச் செய்துவிடுகிறேன்" என்று இரு முறை அவர் நாடகமாடினார். ஆனால், தோழர்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை.

ஜனங்களிடம் மட்டில், லெனினுக்கு எவ்வளவு கீர்த்தியும் செல்வாக்கும் இருந்ததோ அவ்வளவு கீர்த்தியும் செல்வாக்கும் ட்ராட்ஸ்கீக்கும் இருந்தது. புரட்சி செய்து ஸ்டாலினின் ஆதிக்கத்தைக் கவிழ்த்து ட்ராட்ஸ்கீ அதிகாரம் பெறக்கூடும் என்று ஜனங்கள் எந்த நிமிஷமும் எண்ணி வந்தார்கள். ஆனால், சிந்தனைக் கனவுகளிலே வல்லவரான ட்ராட்ஸ்கீக்கு, தருணம் பார்த்துப் பரபரவென்று செயல்செய்யும் துணிவு போதவில்லை.

இதற்குள் ட்ராட்ஸ்கீக்கு விரோதமாகப் பத்திரிகைகளில் பிரமாதமான பிரசாரத்தை ஸ்டாலின் நடத்திவிட்டார். ட்ராட்ஸ்கீயிடம் ஜனங்களுக்கிருந்த மோகமும் குலைந்தது. தும்பை விட்டு வாலைப் பிடிப்பதுபோல, இப்போதுதான், ட்ராட்ஸ்கீயின பக்தர்கள் அங்கங்கே ரகஸ்யக் கூட்டங்கள் கூடினார்கள். பொதுஉடைமைக் கட்சிக்குள்ளே மற்றோர் கட்சியை ஸ்தாபிக்க அவர்கள் முயன்றார்கள். இந்தச் சூழ்ச்சியை வளரவிட ஸ்டாலினுக்கு இஷ்டமில்லை. கட்சிக் கூட்டத்திலே, அதைப்பற்றிப் பேசி அம்முயற்சியை அடக்கிவிட்டார். ஆனால், அதிலிருந்து, பின்னால் கலவரம் முற்றியது. ட்ராட்ஸ்கீயையும் அவர் கோஷ்டியாரையும், பொதுஉடைமைக் கட்சியினின்றே, ஸ்டாலின் வெளியேற்றிவிட்டார். ட்ராட்ஸ்கீயை, புரட்சியின் சத்துரு என்றும், கட்சியார் தீர்மானிக்கச் செய்தார். ட்ராட்ஸ்கீக்கு மட்டில் பெருஞ் செல்வாக்கும் பக்தர்களும் இல்லாதிருந்தால், அவரை அப்போதே சுட்டுக் கொன்றிருப்பார்கள். பயத்தால், அவரைத் தீவாந்திரம் அனுப்பினார்கள். 3000 மைலுக்கப்பால் மத்திய ஆசியாவில் சிறைப்பட்ட ட்ராட்ஸ்கீ, அங்கிருந்த வண்ணமே, தம் கோஷ்டியாரோடு கடிதப் போக்குவரத்துகள் நடத்தி, அவர்களுக்கு வழிகாட்டியாயுமிருந்தார். இதுவும் பொறுக்கவில்லை ஸ்டாலினுக்கு. "இந்த வேலையை நிறுத்துகிறீரா? அல்லது உம்மை அடியோடு அரசியலினின்றும் தனிப்படுத்தி விடட்டுமா?" என்று சொல்லியனுப்பினார். அந்த எச்சரிக்கையை ட்ராட்ஸ்கீ அலட்சியம் செய்தார். அதன் மேல் அவரை ஸ்டாலின் தேசப் பிரஷ்டமே செய்து விட்டார். 1922-ஆம் ஞூ பிப்ரவரி மீ ட்ராட்ஸ்கீ துருக்கிக்குப் போய்ச்சேர்ந்தார்.

அங்கே போயும் அவர் சும்மாவிருக்கவில்லை. தற்போது ருஷியாவில் ஆட்சிபுரியும் பொதுஉடைமை சர்க்காருக்கு 'மூன்றாம் இண்டர் நேஷனல்' என்று பெயர். அதைக் கவிழ்த்து, 'நான்காம் இண்டர் நேஷனல்' ஒன்றை ஸ்தாபிக்க, ட்ராட்ஸ்கீ ஓயாமல் வேலை செய்து கொண்டேயிருந்தார்.

நீண்டகாலம் துருக்கியிலிருக்க முடியவில்லை. பிரான்ஸ், நார்வே முதலிய வேறு பல நாடுகளுக்குச் செல்ல வேண்டியதாயிற்று. ஸ்டாலின் சர்க்காரின் தூண்டுதலால், பல நாடுகளும் அவரை வெளியேற்றி விட்டன.

நார்வே சர்க்கார் அவரை வெளியேறுமாறு வற்புறுத்திய போது, 1936-ஆம் ஞூ மெக்ஸிகோவிலிருந்து அவருக்கு அழைப்பு வந்தது. டீகோ ரிவீரா என்ற ஓவியரும், தானுமே சித்திரத்தில் வல்லவளான அவர் மனைவி பிரிடா காஹ்லோ என்டவளும், அவருக்கு ஓர் அருமையான பங்களாவை ஒழித்துக் கொடுத்தார்கள்; "உங்களுக்கு எத்தனை காலம் இஷ்டமோ அத்தனை காலமும் இங்கே இருக்கலாம்" என்று அன்போடு சொன்னார்கள். ஆனால், இரண்டு வருஷத்துக்கெல்லாம் இருவருக்கும் மனஸ்தாபம் வந்தது. ரிவீரா யாருக்கோ ஏதோ கடிதம் எழுதினார். அதில் உலகப் புரட்சிக்கு விரோதமான கருத்துக்கள் இருந்தனவாம். ட்ராட்ஸ்கீ என்னவோ குத்தலாகச் சொன்னார். ரிவீராவும் துடுக்காகப் பதில் சொன்னார். ட்ராட்ஸ்கீ வீட்டுக்குப் போனார். நாற்பது டாலர் பணத்தை ஒரு நண்பன் மூலம் ரிவீராவுக்குக் கொடுத்தனுப்பி, "இரண்டு வருஷ வாடகைக்கு இது போதுமா?" என்று கேட்டுவரச் சொன்னார். ரிவீரா அந்தப் பணத்தை வாங்கி, மார்க்ஸ் தத்துவத்தை உபதேசிக்கும் பத்திரிகையொன்றுக்கு அப்படியே தானம் கொடுத்து விட்டார். இதையறிந்த ட்ராட்ஸ்கீ வெட்கமுற்றார்.

"நான் ரிவீராவின் வீட்டை விட்டு வெளியேறுகிறேன்" என்று விளம்பரம் செய்தார் ட்ராட்ஸ்கீ.

"நான் ட்ராட்ஸ்கீ இயக்கத்தை விட்டு வெளியேறுகிறேன்" என்று உடனே பதில் விளம்பரம் செய்தார் ரிவீரா! இருவரும் அவ்வளவு உணர்ச்சிக் களஞ்சியங்கள்.

ட்ராட்ஸ்கீ வேறோர் மனையில் வசிக்கலானார். மெக்ஸிகோவிலிருந்தவாறே, நான்காவது 'இண்டர்நேஷனல்' என்ற அகில உலகப் பொதுஉடைமை ராஜ்யத்தை ஸ்தாபிக்க அவர் ஓயாமல் உழைத்துக் கொண்டிருந்தார். பதினாயிரம் மைலுக்கப்பால் ட்ராட்ஸ்கீ இருந்துகொண்டிருந்தாலும், அவரை ஸ்டாலின் தமது பரம சத்துருவாகப் பாவித்து வந்தார். ஏனெனில், உலகப் புரட்சியின் சத்துரு ஸ்டாலினே என்று, ட்ராட்ஸ்கீ மகா தீவிரமாகப் புஸ்தகங்கள்

கட்டுரைகள் மூலம் எப்பொழுது பார்த்தாலும் பிரசாரம் செய்துகொண்டேயிருந்தார்.

யாராவது தம்மைக் கொன்றுவிடுவார்களோ என்ற சந்தேகத்திலேயே, சதா ட்ராட்ஸ்கீ வாழ்ந்துவந்தார். அவர் வீட்டுக்குப் போலீஸ் பந்தோபஸ்துக்களும் வைக்கப்பட்டன. அப்படியிருந்தும், சில மாதங்களுக்குமுன், யாரோ சில பாதகர், கூட்டமாகத் துப்பாக்கிகளோடு ட்ராட்ஸ்கீ வீட்டில் திருட்டுத்தனமாகப் புகுந்து, ஜன்னல் வழியாக அவர் அறையில் 'பட், பட்' என்று சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டனர். ட்ராட்ஸ்கீயும் அவர் மனைவியும் படுக்கையின் கீழே படுத்துவிட்டதால், தப்பினர். தெய்வாதீனமாகப் பிழைத்தனர் என்றுதான் சொல்லவேண்டும்.

ஒரு மாதத்துக்குமுன், அதாவது ஆகஸ்டுமாதம் 20 தேதியன்று, மீண்டும் ஒரு பாதகன் தோன்றினான். அவன்தான் பிராங்க் ஜான்ஸன் என்ற பிரஞ்சு யூதன். இந்த யூதன், ட்ராட்ஸ்கீயின் நண்பனாகப் பாவனை செய்தான். இவனை ட்ராட்ஸ்கீ, ஒருநாள் தனிமையாகத் தேனீர் குடிக்க அழைத்தார். அச்சமயம், கள்ளத்தனமாய்த் தான் கொண்டுவந்த ஒரு சம்மட்டியால், ட்ராட்ஸ்கீயின் மண்டையை உடைத்துவிட்டான். பின்புறமிருந்தே தாக்கினான். 21உ மாலை, ட்ராட்ஸ்கீ மரணமடைந்தார். ஆஸ்பத்திரியில் பிரக்ஞை போகுமுன், "இந்த யூதன், பாஸிஸ்டுகளின் ஏஜண்டாகவோ அல்லது ருஷிய சர்க்காரின் ஏஜண்டாகவோதான் இருக்க வேண்டும்" என்று அவர் தெரிவித்தார்.

ட்ராட்ஸ்கீ மரணமடையும் போதும், தமது ஜீவிய லட்சியத்தை மறக்கவேயில்லை. "ராஜீயக் கொலைகாரனால் தாக்குண்டு, இதோ நான் மரணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறேன். தயவு செய்து என் நண்பர்களிடம் ஒரு செய்தி சொல்லுங்கள்: நான்காவது 'இன்டர்நேஷனல்' (அகில உலகப் பொது உடைமை ராஜ்யம்) வெற்றி பெற்றே தீரும்; முன்னேறிச் செல்லுங்கள்" என்று கூறினார். இதுவே அவரது வாழ்க்கைக் கனவு.

---

### அழகியின் விரோதிகள்

இவை அழகியின் விரோதிகளாம் :— பொறித்தவை; புளித்தவை; சீனி; ஊறுகாய்கள்; மீன்; நண்டு; இறைச்சி; வெள்ளை ரொட்டி; தீட்டிய அரிசி.

---

'ஹரிஜ'னிலிருந்து :

## எது உண்மைச் செல்வம்<br>லட்சியம் ஒரு கற்பனை<br>மந்திர ஜால விழிப்பு

—காந்தி வாக்கு

### காளைகள் திருவிழாவில் :

சேவாக்கிராமத்தில் நடந்த காளைகள் திருவிழாவின் போது காந்திஜி செய்த பிரசங்கம் :

"புராதன இந்தியாவில் ஒரு மனிதனிடமிருக்கும் பொன்னையும் வெள்ளியையும் கொண்டு அவனது செல்வம் மதிக்கப் படவில்லை; அவனிட மிருக்கும் பசுக்களின் எண்ணிக்கையைக் கொண்டே அது மதிக்கப்பட்டது. பசுவைத் தாயென வணங்கினார்கள். ஏனெனில், பசு பால் கொடுப்பதுடன், அதன் ஆண் சந்ததியான காளையும் விவசாயத்துக்கு உதவுகிறது. அவற்றால்தான் நாம் உயிர் வாழ்கிறோம். மேல் நாட்டிலும் பசுக்கள் உண்டு. அவற்றை மிக நன்றாகத்தான் பராமரிக்கிறார்கள். ஆனால், அவற்றின் ஆண் வர்க்கம் விவசாயத்துக்கு உபயோகப்படுத்தப் பெறவில்லை. காளைகளை இறைச்சி செய்து விடுகிறார்கள். ஞாபகத்துக் கெட்டாத புராதன காலந்தொட்டு, இதை நாம் மிக வெறுத்து வருகிறோம். பசுவையும் அதன் சந்ததியையும் நாம் வணங்கி வருகிறோம். நமது கிராமங்களில் எங்கே பார்த்தாலும் காளைகளே போக்குவரத்துச் சாதனமாயிருந்து வருகின்றன; சிம்லாவில்கூட, அவை மறையவில்லை. ரயில் வண்டியும் மோட்டார்காரும் சிம்லாவுக்குச் செல்லுகின்றன. ஆனால், மலைரஸ்தா நெடுகலும், மேலும் கீழும் பார வண்டிகளை யிழுத்துக்கொண்டு காளைகள் மெல்ல மெல்ல நடப்பதைக் கண்டேன். இந்தப் போக்குவரத்துச் சாதனம், நமது வாழ்விலும் நாகரிகத்திலும் ஓர் பகுதிபோல் தோன்றுகிறது. நமது குடிசைத் தொழில் நாகரிகம் உயிர்த்திருக்க வேண்டுமென்றால், காளைகளும் ஜீவித்திருப்பது அவசியமாகும்."



### பிரத்யட்சமும் லட்சியமும் :

போலந்து தேசத்தவரான மாரிஸ் பிரிட்மான் என்ற எஞ்சினீர் தற்போது துறவு பூண்டு பரதானந்தர் என்று பெயர் வைத்துக்கொண் டிருக்கிறார். இவருக்கு மகாத்மாஜியிடம் மிகுந்த பக்தி. இவருக்கும் காந்திஜிக்கும் நடந்ததோர் சம்பாஷணையை ஸ்ரீ மகாதேவ தேசாய் எழுதி யுள்ளார் :

**பரதானந்தர்** :—அஹிம்சை, பிரம்மசர்யம், நூல் நூற்றல் இவையெல்லாம் சாதனங்களே யாகும். ஒன்று ஒருவருக்குப் பொருத்தமாயிருக்கும். இன்னொருவருக்கு வேறொன்று பொருத்தமா யிருக்கும். அஹிம்சையை ஏன் சகலரும் அனுஷ்டிக்க வேண்டுமென்று நீங்கள் சொல்லுகிறீர்கள்?

**காந்திஜி** :—தவறவே தவறாமல் பலன்தரக்கூடிய ஒரு சாதனத்தை ஒரு விஞ்ஞான சாஸ்திரி கண்டு பிடித்தானானால், அந்தச் சாதனத்தை அவன் சகல ஜனங்களுக்குமே தான் சமர்ப்பிக்கிறான். 'யதா பிண்டே ததா பிரம்மாண்டே'—பிண்டத்தைப் போலவேதான் அண்டம் என்று நீங்கள் கேள்விப் பட்ட தில்லையா?

**பரதானந்தர்** :—ஆனால், நீங்கள் மகானுக்கும் திருடனுக்கும் ஒரே சட்டம் விதிக்கிறீர்களே!

**காந்திஜி** :—சட்டம் ஒன்றுதான். ஆனால், வழி, மகானை விடத் திருடனுக்குக் கடினமாயிருக்கும். சட்டமே, லட்சியமாகும். அந்த லட்சியத்தை எட்ட முடியாமல் தனிப்பட்டவர்கள் எவ்வளவு கீழேயிருந்தாலும் லட்சியத்தை விட முடியாது.

**பரதானந்தர்** :—லட்சியத்துக்கு முன்னே, பிரத்தியட்ச நிலைமைகளை மறந்துவிடுகிறீர்களே ?

**காந்திஜி** :—மறக்கவில்லை. பிரத்தியட்ச நிலைமைகளை சதா காலமும் நான் ஞாபகம் வைத்துக்கொண்டேதான் இருக்கிறேன். க்ஷேத்ர கணித நிபுணரான யூக்லிட்டின் நேர்க்கோடு நமது கற்பனையில்தான் இருக்கிறது. ஆனால், அதை நாம் இழுத்து விடுவதாகவே உத்தேசித்துக்கொள்ளவேண்டியிருக்கிறது; யூக்லிட்டின் கற்பனைக் கோட்டை ஒட்டிய ஒரு பிரத்தியட்சக் கோட்டை இழுத்துக்கொள்ள நாம் எப்போதும் முயன்றுகொண்டேயிருக்கவேண்டியிருக்கிறது.

## நாஸ்திகரைத் திருப்பும் வழி :

“நாஸ்திகரை எப்படிக் கடவுளிடமும் சமயத்திலும் நம்பிக்கை கொள்ளும்படி திருப்புவது?” என்று ஒரு நண்பர் கேட்ட கேள்விக்கு, மகாத்மாஜி பின்வருமாறு பதிலளித்துள்ளார்:

“ஒரே ஒரு வழிதான் உண்டு. கடவுளின் உண்மையான பக்தன், தனது தூய்மையாலும் நன்னடத்தையாலும் நாஸ்திகனைத் திருப்பிவிடலாம். தர்க்கத்தினால், ஒருபோதும் அதைச் செய்ய முடியாது. கடவுள் உண்டு என்பதை நிரூபணம் செய்ய, எண்ணற்ற புஸ்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. அத்தனை நூல்கள் இருந்தும், நாஸ்திகம் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. ஆனால், தன்னை நாஸ்திகன் என்று கூறிக் கொள்ளும் மனிதன், பெரும்பாலும் உண்மை நாஸ்திகனாயில்லை; ஆஸ்திகரிலும் அநேகர் ஆஸ்திகராயில்லை. நாஸ்திகர் சில சமயம் ‘நீர் ஆஸ்திகரானால், நாங்கள் நாஸ்திகர்தான்’ என்றே கூறுகிறார்கள். அப்படிச் சொல்ல, அவர்களுக்கு உரிமையுண்டு. ஏனெனில், தங்களுக்கு ஆஸ்திகர் என்று தாங்களே பெயர் சூட்டிக்கொண்டோர், பெரும்பாலும் உண்மை ஆஸ்திகராயில்லை. ஒரு கௌரவமென்று அதைக் கருதியோ அல்லது உலகத்தை ஏமாற்றவோதான், அநேகர் கடவுளை வணங்குகிறார்கள். அவர்களுக்குஎப்படி நாஸ்திகர்கள்மீது செல்வாக்கு ஏற்பட முடியும்? தாம் கடவுளுக்கு உண்மையாய் நடந்து கொண்டால், தமது அண்டை அயலார் தம்மிச்சையாகவே நாஸ்திகத்தை விட்டு விடுவார்கள் என்று, ஆஸ்திகர் உணரவேண்டும். முழு உலகத்தையும் பற்றி அவர் தொல்லைப்பட வேண்டாம். கடவுள் இடங்கொடுத்திருப்பதாலேயே நாஸ்திகரும் உலகிலிருக்கிறார்கள் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். பெயரளவில் கடவுளை வணங்குவோர் ஆஸ்திகரல்ல. கடவுளின் சித்தத்தை நிறைவேற்றுவோரே ஆஸ்திகர் என்ற வசனம் மிக உண்மையாகும்.”

## தண்டி யாத்திரையின் போது:

காந்திஜீயோடு பம்பாய் மாஜி பிரதம மந்திரி ஸ்ரீ கேர் செய்ததொரு சம்பாஷணையை ஸ்ரீ தேசாய் எழுதியிருக்கிறார். அந்தச் சம்பாஷணையினிடையே மகாத்மாஜி பின்வருமாறு கூறியுள்ளார் :

“தண்டி யாத்திரை முற்றிலும் என் சொந்த யோசனையாகும். முதலிலே அதைச் சொன்னபோது மோட்டிலால்ஜி நகைத்தார். பைத்தியக்காரப் படையெடுப்பாயிருக்கிறதே என்று அவர் எண்ணிவிட்டார். இதற்குப் பதிலாக வைஸிராய் மாளிகையைப் படையெடுக்கலாமே என்று சொன்னார் யமுலால்ஜீ. ஆனால், நமது நாட்டின் கோடிக் கணக்கான மக்களின் நோக்கிலேயே நான் யோசிக்க வேண்டியிருந்ததால், உப்புப் படையெடுப்பையன்றி வேறொன்றும் எனக்குத் தோன்றவில்லை. அந்த யோசனை எனக்குக் கடவுள் அருளியதாகும்.

“பண்டித மோதிலால்ஜி கொஞ்சநேரம் என்னோடு தர்க்கம் செய்தார். அதன் பின், ‘எப்படியிருந்தாலும் நீங்கள் தளபதி. நான் உங்களோடு வாதிக்கலாகாது. உங்களை நம்பியே நடக்க வேண்டும்’ என்று கூறினார். பின்னால், ஜம்புஸாரில் என்னை அவர் சந்தித்தபோது, அவரது அபிப்பிராயம் அடியோடு மாறிவிட்டது. ஏனெனில், மகா ஜனங்களுக்கு ஏற்பட்ட விழிப்பைத் தம் கண்ணார அவர் கண்டு விட்டார். ஏதோ மந்திர ஜாலம் போன்ற விழிப்பு அது. நமது பெண்கள் அவ்வளவு ஏராளமாய்க் கூடிக் காட்டிய கலங்கா வீரத்துக்கு இணையான சம்பவங்களை, உலக சரித்திரிலே வேறெங்கே நாம் காணமுடியும் ?”

---

# தேனீயின் ‘பெட்ரோல்’

பெட்ரோல் காலியாகி விட்டால், வானத்தில் பறக்கும் விமானம் கீழே விழுந்துவிடும். இதே மாதிரி தேனீ பறப்பதற்கும் ஒரு ‘பெட்ரோல்’ தேவையாயிருக்கிறது. அது தேன்தான் என்றால், உங்களுக்கு ஆச்சர்யமாயிருக்கும்.

தேனீ கால்மணி நேரத்தில் இரண்டரை மைல்தூரம் பறந்து செல்லுகிறது. இந்தத் தூரத்தை தாண்டத் தன் சிறகுகளை அது 18,000 தடவை அடித்துக் கொள்ளுகிறது. இவ்வளவு வேலை செய்வதற்கு வேண்டிய சக்தி, அதற்கு எங்கிருந்து கிடைக்கின்றது? மனிதனுக்கு வேண்டிய சக்தியை அவன் உண்ணும் மாவுப்பொருள்களிலிருந்து, ஈரல் உண்டாக்கிக் கொடுக்கிறது. தேனீக்கு ஈரலே இல்லை. தேனீயைச் சோதித்த அறிஞர் ஒருவர் அதற்குச் சக்தி கொடுக்கும் பொருள் தேனே என்று கண்டிருக்கிறார். தேனீயின் ரத்தப் பரீக்ஷையிலிருந்து இதை அவர் கண்டுகொண்டார். தேனீக்கள் அடிக்கடி கூட்டிற்கு வந்து செல்வதும் சக்தி கொடுக்கும் தேனைக் குடிக்கத் தானும்.

நகைச்சுவை :

# பொய்யர்கள் சங்கம்

'உல்லாஸி'

'பட்டணப் பொய்யர்கள் சங்கம்' ஊருக்கு மேற்கேயுள்ள சப்பாத்திக் காட்டிலே ஸ்தாபித மாகியிருக்கிறது. அது உலகத்திலேயே மகா அபூர்வமான ஓர் சங்கம். அதிலே ஒரு அங்கத்தினராய்ச் சேர வேணுமென்ருல், மகா கடுமையான பரிட்சை கொடுத்துத் தேற வேண்டும். மிகச் சிக்கலான கேள்விகளெல்லாம் கேட்பார்கள்; பதில் சொல்லி யாகவேண்டும்.

இச்சங்கத்திலே அங்கத்தினராயிருப்பதற்குச் சில சட்ட திட்டங்களுண்டு. அபேட்சகருக்கு ஒரே ஒரு யோக்கியதாம்சம் தான் தேவை. அதாவது, நிற்காமல், தட்டுத் தடவாமல், வாசாமகோசரமாகப் பொய் சொல்ல வேண்டும்; ஆனல், தான் சொல்லுவதிலேயே முன்னுக்குப்பின் முரணுகப் பேசலாகாது. சட்டசபை அங்கத்தினர்கள், ராஜீயவாதிகள், மந்திரிகள் முதலியோர் இதில் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள். ஏனெனில், சங்கம், அமெச்சூர் பொய்யர்களுக்காகவே அமைக்கப்பட்டுள்ளது.

புதிய அபேட்சகர்களைக் கமிட்டி அங்கத்தினர்கள், நேரே விசாரிப்பார்கள். அற்பப் பொய்களோ, சில்லறைப் புளுகுகளோ அங்கீகரிக்கப் படமாட்டா. அம்மாதிரி பொய்கள் சொல்லும் அபேட்சகர்கள், பரிட்சையில் தோற்றதாவே பாவிக்கப்பட்டு நிராகரிக்கப்படுவர். சங்கத்தின் வருஷச் சந்தா ரூபாய் 100 மட்டில்தான்.

சங்கத்தில் எந்த விஷயத்திலும் நிஜக்கலப்பே யிருக்கக் கூடாது. சங்கவிதிகள் மட்டிலும் தான் இதற்கு விலக்கு. எந்த அங்கத்தினராவது சங்கக் கட்டிடத்துக்குள்ளே நிஜம் பேசியதாகக் கண்டு பிடிக்கப்பட்டால், அவருக்கு ஐந்து ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

ஒரு நாள் மாலை மழை பெய்து கொண்டிருக்கும்போது நான் அங்கே போனேன். டவாலி போட்ட சேவகன் ஒருவன் கதவடியிலே நின்று கொண்டிருந்தான்.

"சுவாமி, தாங்கள் யார்?" என்று அவன் கேட்டான்.

"நான் இங்கே ஒரு அங்கத்தினன்."

"தங்கள் பெயர்?"

"கம்ப நாடன்."

காவல்காரன் உள்ளே சென்று, ஒரு கனவானை அழைத்துக் கொண்டு வந்தான். அவர் சங்கக் காரியதரிசி போல் தோன்றினர். கனவான் என்னைக் கால்முதல் தலைவரை ஒருமுறை உற்றுப் பார்த்தார்.

"பிரசித்திபெற்ற அந்த மகா கவியா தாங்கள்?" என்று வினவினர்.

நான் பதிலளிக்கு முன்னே, வேறு மூன்று கனவான்கள் உள்ளிருந்து வந்து விட்டார்கள். அவர்களிடம் என்னைக் காரியதரிசி அறிமுகம் செய்து வைத்தார்.

"இவர்தான் கம்பநாடர்."

நான் மரியாதையாய்த் தலையை ஆட்டினேன்.

"நீங்கள் ஏதோ பெரிய மகா காவியம் எழுதி யிருக்கிறீர்கள் அல்லவா?" என்று அவர்களில் ஒருவர் என்னை விசாரித்தார்.

"இல்லை; இட்டலியும் சட்னியும் கண்டுபிடித்த பண்டிதன் நான்."

"சரிதான்; அப்படியானல் சரிதான்" என்று அந்தக் கனவான் சிறிது சிறிது தயக்கத்துடன் ஒப்பம் வைத்தார்.

"உங்களுக்குக் கலியாண மாகி விட்டதா?" என்று வினவினர் காரியதரிசி.

"ஆறு தடவை கலியாணம் ஆகியிருக்கிறது. நாலு மனைவிகள் போய் விட்டார்கள். இருவரோடு வாழ்கிறேன்."

"பெற்ருேர் உயிரோடிருக்கிருர்களா?"

"ஒரு அத்தை போன மாசம் தான் இறந்தாள்."

"அவள் உங்களுக்கு ஏதாவது சொத்து வைத்துவிட்டுப் போனளா?"

"வங்காளக் குடாக்கடலையும் ஒரு சைக்கிளையும் வைத்துவிட்டுப் போயிருக்கிருள்."

"இன்னும் ஒரே ஒரு கேள்வி" என்று சொல்லிய காரியதரிசி, "ஹிட்லரைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார்.

நான் சற்றுத் தயங்கிவிட்டு, பிறகு கூறினேன்: "ஹிட்லர் பிரமாத ராஜ தந்திரி. பாரபட்சமேயில்லாதவர். அருமையான குணவான். பரிசுத்தமான எண்ணங்கள் உடையவர். மகா சாந்தம். மரியாதைக்குப் பெயர் போனவர். வசீகர புருஷர். இரண்டே இரண்டு குறைகள் மட்டில் அவரிடம் உண்டு; ஒன்று, அவர் பிரசங்கமே செய்யமாட்டார்; மற்றது, பாமரமக்கள் கரகோஷம் அவருக்குப் பிடிப்பதே யில்லை."

என்னருகே நின்ற கனவான்கள் ஆனந்த பாஷ்பம் சொரிந்தார்கள். நரைத்தலை முதியவர் ஒருவர், 'விர்' ரென்று தாழ்வாரத்துக்குப் பாய்ந்து வந்து, என்னை மார்புறத் தழுவிக்கொண்டார். பரம கௌரவத்தோடு, சங்கத்தின் அங்கத்தினனய் நான் சேர்த்துக்கொள்ளப் பட்டேன்.

குறிப்பு: பெல்ஜியம் பத்திரிகையில் பி. எல். பாராகோ என்பவர் எழுதிய கட்டுரையை அனுசரித்து எழுதியதல்ல இது என்று, எங்கள் சங்கக் கட்டிடத்துக்குள் நிரூபணம் செய்ய, நான் தயாராயிருக்கிறேன் என்பதை, இதன் மூலம் சகலமானவர்களுக்கும் அறிவித்துக் கொள்ளுகிறேன்.

*வேதாந்த விசாரணை :*

# அன்பு வித்தை

(ஹீலென் கெல்லர்)

[ஊனக்கண்ணை யிழந்தவள்; ஆனால், ஞானக் கண் பெற்ற புனிதவதி ஹீலென் கெல்லர். கண்ணற்ற குருடாயிருந்தும், ஞானேதயம் பெற்று, அவள் எழுதியுள்ள அரிய நூல்கள் உலகெங்கும் புகழப் பெறுவன. 'என் மதம்' என்ற அவளது அரிய நூலிலிருந்து ஒரு பகுதியை இங்கு மொழி பெயர்த்துத் தருகிறேன்.—தி. ஜ. ர.]

சமயம் என்பது, நாம் கடவுளுக்கும் சகோதர மனிதர்களுக்கும் நமக்குமே செலுத்த வேண்டிய கடமைகளை வரையறுக்கும் சாஸ்திரம் என்று சொல்லுவார்கள். கிருஸ்தவ மதத்தைச் சரியாக உணர்ந்து கொள்வோமானல், அது அன்பு வித்தையா யிருக்கக் காண்போம். ஆண்டவனை நேசி, அயலானை நேசி என்ற இரண்டு கற்பனைகளின் மீதே, சகல தர்மங்களும் சகல தீர்க்கதரிசிகளின் உபதேசங்களும் சார்ந்து நிற்கின்றன என்று ஏசு பகவான் கூறினர். 'என்னை நேசித்தால் என் கட்டளைகளை அனுஷ்டியுங்கள்;' 'ஆண்டவன் ராஜ்யத்தையும் அவனது நீதியையும் தேடுங்கள்; இதெல்லாம் (போக பாக்கிய சந்தோஷங்களெல்லாம்) உங்களுக்குத் தாமாகவே வந்துசேரும்;' 'நானே மார்க்கம்; நானே சத்தியம்; நானே ஜீவன்'—என்றெல்லாம் ஏசு கூறிய வாக்கியங்கள் அனைத்தின் அர்த்தமும் ஒன்றேதான்; அதாவது, 'அன்பே கடவுள், அன்பே கடவுள், அன்பே கடவுள்' என்பது தான்

பகைமை என்பது, கடவுளுக்குச் சகல விதத்தும் நேர்மாறானது என்று அவர் கண்டு கொண்டார். நரகம் கடவுளின் தண்டனை என்று அவர் சொல்லவில்லை. பகைமையிலும் காமத்தீயிலும் அகங்கார மமகாரங்களால் மனம் புண்பட்டுக் கொடுங் கருமங்களிலும் விழுந்துழல்வோர் மீது, அவர்களின் தீமை அவர்களையே திரும்பி வந்து தாக்குகிறது. இதுதான் அவர் குறிப்பிட்ட நரகம். எந்த ஆதாரத்திலிருந்து அவர் தொடங்கினரோ; அதைப் பற்றி அக்கரை யில்லை. இந்த முடிவுக்கு அவர் வந்து விட்டார்: 'உலகத்தின் புனருத்தாரணம் செல்வத்தி லில்லை; ஜாதியி லில்லை; சக்தியி லில்லை; கல்வியி லில்லை. மனித குலத்தின் உயரிய உணர்ச்சிகளிலேதான்—மக்களின் உன்னத லட்சியங்களிலேதான்—அன்பிலேதான் உலகின் புனருத்தாரணம் சார்ந்திருக்கிறது. மனித சித்தத்தை ஆட்டிவைத்து, மனிதனைச் செயலுக்குத் தூண்டும் மகா சக்தி அன்பே' என்பதுதான் அவர் முடிவு.

அன்பு நல்லதா யிருக்கலாம்; தீயதாயு மிருக்கலாம்—அது எவ்வாருயினும் சரி. அன்பே, மனிதர்களின் உயிருக்குயிரானது; அவர்களின் மூச்சுக் காற்று, அவர்களது எண்ணத் தீயின் விறகு, அவர்களின் சொர்க்கமும் நாகமும் அதுவே. இந்த உண்மையைச் சந்தேகப் பிரக்ருதிகளுக்குத் திருப்திகரமாய் உணர்த்துவதற்காக, அவர் தமது சகல சொற்களையும் சகல செயல்களையும் ஈடுபடுத்தினர். அன்பே கடவுள் என்ற அவரது தெய்விகமான, மாட்சிமிக்க பரமோபதேசத்துக்கு விதி விலக்கோ திருத்தமோ எதும் கிடையாது.

அப்படியிருந்தும், இரண்டாயிர வருஷங்கள் கழிந்துவிட்டன; கிறிஸ்து பக்தர் என்போர், 'அன்பே கடவுள்' என்ற மகாமந்திரத்தில் அடங்கியுள்ள பேருண்மையை உணர்ந்து கொள்ளாமலே, அதை வெறுமையே ஜபித்து வந்திருக்கிருர்கள். உண்மையைக் கூறப்போனல், வாழ்க்கையைப் பற்றி வேதாந்த விசாரணை செய்யப் புகுந்த மனிதரெல்லாம், மற்றப் பொருள்களனைத்திலும் உன்னதமான இவ்வுபதேசங் குறித்து, மௌனமே சாதித்து விட்டார்கள். அன்புத் தருமத்தின் சரித்திரத்தை நோக்கினல், மகத்தானதோர் சோக நாடகம் புலனுகும். ஆண்டவன், தமக்குரியவரை அணைய வந்தார்; ஆனல், அவர்களோ அவரை நிராகரித்து விட்டார்கள்.

நமக்கு ஜீவனருள்வதற்காகவே, ஆண்டவன் நம்மைப் படைக்கிருர். அவரது எல்லையற்ற அன்பே, அவரைச் சிருஷ்டி கர்த்தராகுமாறு தூண்டியுள்ளது. ஏனெனில், அன்புடையவருக்கு, அவ் வன்பின் கருணையையும் நயாளச் செல்வங்களையும் நல்குவதற்குரிய பாத்திரங்கள் வேண்டுமன்ரே? ஆண்டவனின் ஜீவன் அன்புதான்; அந்த அன்பே, சிருஷ்டியின் மூல காரணமெனக் காண்கிரேம். ஆண்டவனது வேட்கை வரம்பிகந்தது; வரம்புக்குட்பட்ட மானிடர், ஆண்டவனது ஆனந்தத்தைப் பெற்றுக் கொண்டால் தான், அவனது அவ்வேட்கை திருப்தியுறும். அதே சமயத்தில், மானிட ஜீவர்களுக்குச் சுதந்திரம் உண்டு; அது உண்மைச் சுதந்திரமா யிருப்பதற்கான அறிவும் அருளப்பட்டிருக்கிறது. ஆண்டவனின் அருட் கொடையைப் பெற விரும்புவோர், தம்மிச்சையாகவும் தீர்க்காலோசனையுடனுமே பெறவேண்டும்; அப்போதுதான், அது அவர்களுக்கே சொந்தமாகும். இதனுல்தான், மனிதர்களுக்கு இரண்டு அனுபவங்கள் வைக்கப்பட் டிருக்கின்றன—ஒன்று, உடம்பெடுக்கும் பிறப்பு; மற்றது, ஆத்ம ஞானேதயப் பிறப்பு.

நாம் உடம்பெடுக்கும் பிறப்பை அடைந்ததும், திக்கற்றவர்களாய், பிறரையே சார்ந்தவரா யிருக்கிரேம். ஆத்ம ஞானேதயப் பிறப்பை யடைந்த பிறகே, நாம் செயல் மிகுந்து, ஒரு வகையில் சிருஷ்டி கர்த்தாக்களு மாகிரேம். உடம்பெடுக்கும் பிறவி பெற, நாம் ஒன்றும் செய்யத் தேவையில்லை. ஏனெனில், நாம் எதும் செய்யுமுன்பே உடம்பெடுத்து விடுகிரேம். ஆனல், ஆத்ம ஞானப் பிறப்போ, நம் இஷ்டப்படி தேர்ந்து கொள்ளத்தக்கது. அம்முயற்சியிலே, நமக்கு நேர்முகமான பங்கு உண்டு. ஏனெனில், நம்மிச்சைக்கு விரோதமாய், நம்மீது உண்மையான ஆத்ம வாழ்வை யாராலும் திணிக்க முடியாது.

தமது வார்த்தையான ஏசுவின் மூலமாய், ஆண்டவன் நம்மனைவர்க்கும் சதாகாலமும் விடுத்துக் கொண்டிருக்கும் அன்பழைப்பின் பொருள் இதுதான்: 'என்னிடம் வாருங்கள்; ஜீவன் பெறுங்கள். அந்த ஞான வாழ்வைக் கொள்ளை கொள்ளும் தீமைகளுக்கு இடங்கொடாமல் ஜாக்கிரதையா யிருங்கள்' என்பதே ஏசுவின் மூலம் ஆண்டவன் விடுக்கும் அந்த அழைப்பு. நமது சிந்தன சக்தியை உபயோகிப்பதுடன், நமது இருதயத்தைச் சதாகாலமும் அன்பும் தூய்மையும் குடிகொள்ளச் செய்வதன் மூலமே, நாம் உண்மையான வாழ்வு படைத்தவராகிரேம். இவ்வெழில் மிக்க புனர் ஜன்மம், வெறும் அவதானத்தால் வருவதன்று; ஆத்மாவின் ஆழ்ந்த அந்தரங்கத்தினுள்ளே நடைபெறவேண்டிய வேலையாகும். ஏனெனில், பிரபு சொல்கிருர்: "விரும்பும் திசையிலே காற்றடிக்கிறது. நீ அதன் ஓசையைக் கேட்கிருய்; ஆனல், அது எங்கிருந்து வருகிறது, எங்கே போகிறது என்று நீ சொல்லவியலாது. ஆத்ம ஞானப் பிறப் பெய்திய ஒவ்வொருவரும் அத்தகையோரே யாவர்."

குடும்ப வர்ணனை :

# என் தாயார்

## பண்டித முத்துசாமி

என் தாயார் பழைய காலத்து மனுஷி. பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை என்றால் அவளுக்குத் தான் பொருந்தும். வயது அறுபது ஆகியும் மாமியாரைத் தெய்வமாக வணங்குகிறவள். இப்படி மாமியாரையே தொழுபவள் அப்பா விஷயத்தில் எப்படி யிருப்பாள் என்று சொல்லவா வேண்டும்? அப்பா சொல்வதுதான் அவளுக்கு வேத வாக்கு.

அடுக்கடுக்காய் ஆணும் பெண்ணுமாகப் பத்து உருப்படிகளைப் பெற்றெடுத்தாள். நானும் என் இரண்டு தமையன்மாரும் இரண்டு தமக்கைகளும்தான் இப்பொழுது மீதி. மற்ற நால்வரும் பல பருவங்களில் சிவனடி சேர்ந்துவிட்டார்கள். அது பற்றி அம்மாவுக்கு ரொம்பத் துக்கம். ஆனால், அந்தத் துக்கம் ஒரு நேரத்தில்தான். பாக்கிச் சமயங்களில் வேதாந்தியாகி விடுவாள்.

பால் பழம் பலகாரங்கள் எல்லாம் அவளுக்கு நஞ்சுமாதிரி. அறுசுவை யுணவை அவளது நாவு வெறுத்து வெகு நாளாயிற்று. உடற் பாரமும் உயிர்ப் பாரமும் தாங்க மட்டும் ஏதோ இரண்டு கவளம் சோறுண்பாள். பழம் பாயச பலகாரங்களுடன் உண்ண அவளுக்கு வசதி யிருந்தும், அவற்றை அவள் மனமார வெறுத்து விட்டாள். "இந்தப் பாழும் வயிற்றுக்குப் பாலும் பழமும் வேண்டுமா?" என்று மிக வெறுப்புடன் அடிக்கடி சொல்லுவாள்.

பிச்சைக்காரரை உபசரிப்பது அவளுக்கு மிகவும் ஆனந்தமான வேலை. குளங் கண்ட இடமெல்லாம் குளிப்பாள். கோயில் கண்ட இடமெல்லாம் கும்பிடுவாள். குத்துக்கற்கள் எல்லாம் அவளுக்குச் சிவலிங்கங்கள் ஆகிவிடும். குளங் குட்டைகள் எல்லாம் அவளுக்குப் புண்ணிய புஷ்கரணிகள். சாது என்றால் பரம சாது; சுத்த வெள்ளை மனம். யாரையும் எளிதில் நம்பி விடுவாள்.

ஒரு நாள் அவள் ஆற்றில் ஸ்நானம் செய்து திரும்புகையில் கடும் வெயில் எரித்தது. நனைந்த புடவைகள் இரண்டு மூன்றைச் சுமந்துகொண்டு தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்தாள். பார்த்தாள் ஒரு படுமோசக்காரி. 'பெரிய வீட்டம்மா! புடவைகளைக் கொடுங்கோ. நான் சுமந்துகொண்டு வருகிறேன். ரொம்பக் கஷ்டப்படாதேங்கோ" என்று வஞ்சகமாய்க் கெஞ்சினாள். அம்மாவுக்கு உள்ளம் குளிர்ந்துவிட்டது. புடவைகளை அவள் கையில் கொடுத்துவிட்டாள். அந்தப் பாசாங்குக்காரியின் இடுப்பில் ஒரு நீர்க்குடம் இருந்தது. "அம்மா! வெயில் எரிக்கிறது. நீங்கள் முன்னே போங்கள். நீர்க்குடத்தை என் குடிசையில் இறக்கிவிட்டு, புடவைகளை வீட்டில் கொண்டுவந்து தருகிறேன்" என்று வெகு சாலக்காகக் கூறினாள். அம்மாவும் வெறுங் கையை வீசிக்கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டாள். அம்மா இப்படிச் சும்மா வருவதைப் பார்த்து எனக்குச் சந்தேகம் உண்டாயிற்று. "அம்மா புடவைகள் எங்கே?" என்று கேட்டேன் நான். நடந்த சங்கதிகளை அம்மா சொன்னாள். எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. யாரோ வழியிலே போகிறவளிடம் புடவைகளைக் கொடுத்தாளாம்! கையை வீசிக்கொண்டு வந்தாளாம்! 'புடவைகள் கயா!' என்று நான் தீர்மானித்து விட்டேன். "அம்மா! ஏமாந்தாயா!" என்றேன். "போடா! அந்தச் சாதுப் பெண் என்னை ஏன் ஏமாற்றப் போகிறாள்? இதோ வந்து விடுவாள்" என்றாள் அம்மா. இதோவாவது, அதோவாவது! அந்தச் சாதுப் பெண் வரவே யில்லை!

அந்தச் சம்பவத்தைச் சொல்லி இன்றைக்கும் அம்மாவை நாங்களெல்லாம் பரிகாசம் செய்வோம். ஆனால், அவள் எரிச்சல் படமாட்டாள். அவளும் எங்களோடு சேர்ந்துகொண்டு நகைப்பாள். மோசம் செய்தாளே அந்தப் பெண்ணையாவது திட்டுவாளோ? அதுவுமில்லை. "ஐயோ பாவம்! என்ன ஏழையோ! எவ்வளவு பெரிய குடும்பமோ! உண்ணச் சோறும் உடுக்கத் துணியும் பெறத்தானே எல்லாப் பாடும். அந்த ஏழைப் பெண் வாய்விட்டுக் கேட்டிருந்தால், இரண்டுக்கு நாலு புடவையாகக் கொடுத்திருப்பேன். தானாக எடுத்துக் கொண்டுபோய் விட்டாள். அவளுக்குத்தான் இரண்டு புடவைகள் நஷ்டம்" என்று மலர்ந்த புன்சிரிப்புடனே என் தாய் கூறுவாள். நாங்கள் பெருமித மடைவோம்.

---

### அவர் தாயார்



நான் பேரன்பு செலுத்தியது என் தாயிடம்தான். அவள் மகா அன்பும், மகா கருணையும், மகா உறுதியும் வாய்ந்தவள். அவள் பெயர் ரோஸா என்பதாகும். என் தாய் எங்களை வளர்த்தது மட்டிலுமன்று, எங்களுக்கு ஆரம்பக் கல்வியும் போதித்தாள். அவள் எவ்வளவு பொறுமையாக உழைக்கிறாள் என்று எனது மிகச் சின்ன வயதிலேயே அவளை நான் வியந்து போற்றினேன். அவள் மனதுக்கு அதிருப்தி யுண்டாக்கவே கூடாது என்பதுதான் என் பயமெல்லாம். எனது விஷமங்கள், துஷ்டத்தனங்கள், விளையாட்டுத்தனமான திரிசமன்களை யெல்லாம் அவள் அறிந்துவிடாமல் மறைப்பதற்காக, என் பாட்டியையும் பக்கத்து வீட்டார்களையும் கூட நான் அணைகோலிக் கொள்வேன்; ஏனெனில், என் தாய் மனம் நோகலாகாதே யென்பதில் எனக்குள்ள பயம் அவர்களுக்குத் தெரியும்.

—முஸோலினி (சுய சரிதத்தில்)

ஓரங்க நாடகம்:

# காவலன் தீபம்

## ஹரீந்திரநாத சட்டோபாத்தியாயா

சிறையில் ஒரு அறை. ஒரு வர்த்தகன், ஒரு கவிஞன், ஒரு தொழிலாளி ஆகிய மூவர் நிற்கிறார்கள். அடுத்த நாள் அருணோதயத்தில் மூவரும் தூக்கு மரம் ஏறப் போகிறார்கள். இதுதான் அவர்களது கடைசி இரவு. நடுராத்திரி நேரம். ஆழ்ந்த அமைதி நிலவுகிறது. மங்கல் விளக்கொன்று, அறையிலே மினுக்கு மினுக்கென்று எரிகிறது. அசைவற்ற சித்திரம் ஒன்றைப் போர்த்தியிருந்த போர்வை விலகுவதுபோல, நிழற்படம் ஒன்று நகர்வது போல, திரை அகல்கிறது. சிறிது நேரம் சென்றபின், ஒரு காவலன் நடைபோடும் சந்தடி—அவனது துப்பாக்கியின் 'கிளிக்' என்ற சத்தம்—மீண்டும் 'கிண், கிண்' என்று அவனது காலடி ஓசை கேட்கிறது. காவலன் தோள் மிசை ஓர் துப்பாக்கி தாங்கி, ஓர் நிழலைப் போல் மேடையைக் கடக்கிறான்; சபையோருக்கு, இருண்ட துக்க நினைவுகளை மூட்டுகிறது அவனது நிழல் உருவம். தொழிலாளி, ஒரு புகைச் சுருட்டைக் கொளுத்தி, பலமாய் ஒரு மூச்சு இழுத்துவிட்டு, பிறகு அதை வர்த்தகனிடம் நீட்டுகிறான். மூவரிலும் வர்த்தகன் தான் மிகவும் மனங்கலங்கி நிற்பவன். வர்த்தகன் ஏதோ ஓர் இயந்திரம்போல் சிறிது புகையை இழுத்துவிட்டு, சுருட்டைக் கவிஞனிடம் நீட்டுகிறான்.

தொழிலாளி: (புகைச் சுருள்களைச் சுட்டிக்காட்டி) நமது கடைசிப் புகை!

வர்த்தகன்: (மற்றிருவர் கண்களையும் உற்று நோக்கி விட்டு, திடீரென்று பித்தனைப்போல் பேரொலியுடன் நகைக்கிறான்; பிறகு நின்று விடுகிறான்.)

தொழிலாளி: இது ஓர் பைத்தியக்காரனின் நகைப்பு!

கவிஞன்: செத்தவன் குரலோசை!

தொழிலாளி: செத்தவர் மௌனமாகிவிடுவார்கள். அவர்கள் நகைப்பதில்லை. தளராதே, தோழா! மனதைத் திடப்படுத்திக்கொள்!

வர்த்தகன்: மனிதனைப் படைத்தது யார்?

கவிஞன்: கடவுள்.

வர்த்தகன்: தூக்குமரத்தைப் படைத்தது யார்?

தொழிலாளி: மனிதன்.

வர்த்தகன்: கடவுள் மனிதனைப் படைத்தார்.........மனிதன் தூக்குமரத்தைப் படைத்தான்.........(விரல் விட்டு எண்ணிக்கொண்டே)..........ஆகையால், கடவுள் தூக்குமரத்தைப் படைத்தார்..... ......ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு (முன்னும் பின்னும் நடக்கிறான்.)

கவிஞன்: நாளையத்தினம்! நமது கடைசி நாள்! இரவு எவ்வளவு அழகாயிருக்கிறது! வானம் நிறைய நட்சத்திரங்கள், தெளிந்த வெண்மையான நட்சத்திரங்கள்! காதலர் சொரிந்த கண்ணீர் முத்துக்கள் போல் பிரகாசிக்கின்றன!

தொழிலாளி: இல்லை, இல்லை. கோடிக் கணக்கான என் தோழர்கள் சிந்திய வியர்வைத் துளிகள் அவை!

கவிஞன்: தோழா! நாளைக்கு இதே நேரத்தில் இந்த இரவும் வரத்தான் போகிறது......நாளை நின்றும் வரும்; அதற்கு மறுநாளும் வரும்!......ஆனால், நீங்களும் நானும் அதைப் பார்க்க, இங்கேயிருக்க மாட்டோம். அதை நினைக்கும் பொழுது......

தொழிலாளி: உன்னையும் என்னையும் பற்றி இரவுக்கு என்ன கவலை?

கவிஞன்: ஆஹா! உலகம் அழகு குலுங்குகின்றது! அதை நாம் இழக்கப் போகின்றோமே!

தொழிலாளி: இழக்கப் போகின்றோமா! பூ......உலகின் அழகாம்! நன்றாய் உண்டு கொழுத்து, பொழுது போகாமல் மனோராஜ்யம் செய்துகொண்டிருக்கும் அகங்காரிக்குத் தான் உலகம் அழகாய்த் தோன்றும்! மனிதனே! அழகு அழகாய்த்தான் தோன்றுகிறது! ஆனால், ஆழ்ந்து பார்த்தால் அத்தனையும் குரூர மிருகத்தனமாய் அன்றோ இருக்கிறது!

ஹரீந்திரநாத சட்டோபாத்தியாயாவின் கவிதா விலாஸம் உலகப் பிரஸித்தியாகும்; ஆங்கிலேய ரெல்லாம் புகழ்வது. இந்த அருமையான ஓரங்க நாடகம் புதுவை 'பாரத சக்தி நிலயத்தா'ரின் அனுமதியின்மேல், அவர்களுடைய 'ஐந்து நாடகங்கள்' என்ற ஆங்கிலப் பிரசுரத்தினின்றும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது.

கவிஞன்: ஏன் உன் வாழ்வின் கடைசி நாளில் கூட இப்படி அழகை அவமதிக்கிறாய்?

தொழிலாளி: என் வாழ்வின் கடைசி நாளா?

கவிஞன்: நாளைக்குச் சாகப்போவதை எண்ணி உனக்குத் துக்கம் உண்டாகவில்லையா?

தொழிலாளி: நாளைக்குச் செத்துவிடுவேனே யென்ற துக்கமா?........ கவிஞனே! நான் ஒரு தொழிலாளி; கோடி கோடிக் கணக்கான தொழிலாளிகளில் ஒருவன்; நாங்கள் என்றாவது வாழ்ந்திருந்தால் அல்லவா, சாவதைப் பற்றித் துக்கப்பட? நாங்கள் பிறந்த வுடனேயே, உயிர்ப்பிணங்களாகி விடுகிறோம். எனக்கு வாழ்வென்பதே என்னவென்று தெரியாது. நீ சொல்லும் உன்னதமான ஆத்ம பரிதாபம் எனக்கு எப்படி உண்டாகும்? இன்பானுபவத்தையே நீ வாழ்வென்கிறாய். 'அதை விட்டு, ஐயோ! பிரிய வேண்டியிருக்கிறதே!' என்ற புளகாங்கித உணர்ச்சி எனக் கெப்படி உண்டாகும்?

கவிஞன்: ஐயோ! ஆனால், அது மகா கஷ்டமாயிருக்கிறதே! கருத்தடர்ந்த மேகத்திரள், ராஜாங்க யானைகளைப் போல் மலைக்குமேல் திரளுமே! அந்த அற்புத ஊர்வலத்தைக் கண்டு ஆண்டுதோறும் நான் ஆனந்த முறுவேனே! என் குழந்தைப் பருவத்தில் நான் விளையாடிய தோட்டத்திலே, வன்ன மயில்கள், பச்சையும் நீலமும் பல வர்ணக் கண்களும் நிறைந் தகண்ட தோகைகளை விரித்து, கார்காலக் கடவுள் வருணனின் முன்னே நடனம் பயிலுமே! அடடா! சாலை யோரத்திலே மரங்களின் குளிர் நிழல் ஜில்லென்று பரவி அமைதி நிலவுமே! தன்னந்தனிய நந்தவனங்களிலே புறாக்கள் கூவிக் காதல் புரியுமே! நம் பழத்தோட்டங்களிலே குலை குலையாய்க் கனிகள் தொங்குமே! ஐயோ தோழா! இதையெல்லாம் நினைக்க நினைக்க என் உள்ளம் பதறுகிறதே!

தொழிலாளி: இதுதான் ஒருவேளை உனது கடைசிக் கவியோ?

கவிஞன்: அழகுலகத்துக்கு இது தான் என் கடைசி அழுகுரல்! ராணுவச் சட்டப்படி என்னை அவர்கள் கைது செய்து விட்டார்கள். மகா உக்ரமான தண்டனை விதிக்கத் தக்க குற்றவாளி என்று முடிவு செய்து விட்டார்கள்—நான்—நான் என்ன செய்து விட்டேன்? பகவானே! நிரபராதிகள் இவ்

வளவு கொடுமையாய், நியாயமின்றித் தண்டிக்கப்பட நீயும் அனுமதிப்பாயா?

தொழிலாளி: (நகைக்கிறான்) கடவுளை அழைக்கிறாயா! பேஷ்! பைத்தியக்காரக் கவிஞனே! நட்சத்திர சணங்களையும் வெண்ணிலவையும் மயில் கூட்டங்களையும் புறாக்களையும் சிருஷ்டித்தானே அவனை — ஆமாம்,—உலகின் அழகை, (தூரத்தில் ஒரு நரி ஊளையிடுகிறது) குளிர்ந்த இடுகாட்டிலே அதோ அலைந்து திரிகிறதே அந்த நரியையும் தான்—படைத்தானே அவனை அழைக்கிறாயா!

கவிஞன்: (மெய் நடுங்கிக்கொண்டே) ஆமாம்!

தொழிலாளி: அந்த நரியின் வாலைச் சொக்க வெள்ளி போல் ஒளிரச் செய்யும் மங்கல் நிலவுந்தான் காய்கிறது! அட கவிஞனே! உன் வாழ்வு பூராவும் வாழ்வைப்பற்றி என்ன கனவுகளைக் கண்டுகொண்டிருந்தாய்!......நாளைக்கு உன் அத்தனை கனவுகளும் பாழாய்ப் போகப் போகின்றனவே?

கவிஞன்: இல்லை; ஒருபோதும் அவை பாழாகமாட்டா. நான் மீண்டும் பிறப்பேன்!

வர்த்தகன்: (பாதி மனத்திகைப்புடன்) நானுங்கூட மறுபடி பிறப்பேனா? நான் இன்னும் ஐந்து லட்சம் ரூபாய் சேர்க்க வேண்டும்! மேலும் மேலும் கடன் கொடுக்க வேண்டும்! —பணம்! பணம்! பணம்! பணத்திலே எனக்கு மோகம்—உயிரினும் அதிகமாய்ப் பணத்திலே எனக் காசை!

தொழிலாளி: உனக்கும் மறுபிறப்பிலே நம்பிக்கையா? பேஷ்!

கவிஞன்: நான் மீண்டும் இவ்வுலகத்துக்குத் திரும்பி வருவேன். இவ்வுலகிலுள்ள அத்தனை பொருள்களையும் —பட்சிகள், ஜல வெள்ளம், மலைத்தொடர் அனைத்தின் அழகையும்—மீண்டும் கண்டுகொள்வேன்.

தொழிலாளி: சாகப்போகிற சமயத்திலும், மன ஆறுதல் அடைய நீ கொள்ளும் ஆசையை நான் பாராட்டுகிறேன். உன் வாழ்நாள் முழுதும் போகபாக்கியங்களை அனுபவித்தவன்போல் நீ தோன்றுகிறாய்! வாழ்வு என்பது, உனக்கு ஏதோ வாடிக்கை போல் ஆகிவிட்டது—கவிதை உன் கஞ்சா மயக்கம்! கவிஞனே! என் விஷயம் வேறு— நாங்கள் எப்போதும் செத்த சவங்கள், எங்களுக்கு மறுபிறப்பே யிருக்க முடியாது! ஆனால், அப்படி யிருப்பினுங் கூட, பிறப்பிறப்பற்ற அமரத்துவத்தை நான் அடையப்போகிறேன் என்பதை மட்டில் நினைவில் வை!

கவிஞன்: என் கவிகள் எந்நாளும் வாழ்ந்திருக்கும்; அவற்றின் மூலம் நானும் வாழ்வேன்!

தொழிலாளி: மாய்ந்த மனுக் குலத்தின் கஞ்சாக் கனவுகளின் உச்சிஷ்டமாகவே உன் அழகுக் கவிகள் நிலவும். ஆனால், நானோ, ஒரே ஒரு தனிப் பெருங் கருத்தின்—மேகங்களையும் நிலவுக் கதிர்களையும் தோகை மயில்களையும் பற்றிய கவிதை யனைத்தினும் பெரியதோர் அகண்டக் கருத்தின்—உடைவாளினும் கூரிய, கண்ணீரினும் தெளிந்த தோர் உயர் கருத்தின் கவிஞனாக வாழ்வேன்! பாட்டாளிகளின் சர்வாதிகாரம் என்ற தத்துவம்தான் அந்தப் பெருங்கருத்து! ஜே!

(சேமக்சலம் ஐந்து அடிக்கிறது)

கவிஞன்: இன்னும் ஒரு மணி நேரந்தான் இருக்கிறது—பிறகு, பிறகு —சோகைபோல் வெளிறிட்ட அருணோதய மாகிவிடும்— கடைசி—

தொழிலாளி: செந்நிற அருணோதயம்! வரப்போகும் பல செந்நிற அருணோதயங்களில் முதலாவது!

வர்த்தகன்: அதென்ன, நாட்டியப் பெண்களின் சிலம்பொலியா? அற்புதம்! நாளைக்கு என் மகனுக்குக் கலியாணம். ஓர் சுந்தர ராஜகுமாரியை மணக்கப் போகிறான்—என் வாழ்நாள் பூராவும் உதவினேனே அந்த மன்னனை விருந்தழைக்கப்போகிறேன். அவனுக்கு நான் பை பையாய்த் தங்கம் கொடுத்தேன்; அவன் எனக்கு நாளுக்கொரு பட்டமளித்தான்—நாளைக்கும் மறுநாளும் மீண்டும் மீண்டும் அளிப்பான்.

கவிஞன்: தோழா! நாம் மரணத்துக்கு அஞ்சாதிருப்பது ஆச்சர்யமாயில்லையா? மரண தண்டனை விதிக்கப்பட்ட அன்றே, என்னுள்ளிருந்த ஏதோ ஒன்று செத்துவிட்டது! ஆனால், இப்போது, சாவு எண்ணம் எனக்குப் பழக்கமாகி விட்டது; ஆதலால், அந்த எண்ணமே எனக்கு ருசியாயு மிருக்கிறது—ஒரு வேளை, மறு உலகைப் பற்றி நான் எழுத எத்தனையோ சங்கதிகள் கிடைக்கலாமன்றோ?

தொழிலாளி: உனது கனவு, ஓர் லாகிரி; அன்புமயமானது! (காவலனின் துப்பாக்கி மீண்டும் ‘கிளிக்’ என்று சொடுக்குகிறது—ஆழ்ந்த நிச்சப்தம்— காவலன் கடக்கிறான்).

வர்த்தகன்: ஆ! ஏ காவலா! நாளை நடக்கும் திருமணத்துக்குப் பந்தல் எங்கே? மின்சார தீபங்களெங்கே? அவை ஒளிக்கண்கள்போல் இருக்கட்டும் —உறக்கமின்றிச் சிவந்து விழித்த கண்களா யிருக்கட்டும்! கல்கத்தாவிலிருந்து மூன்று நாட்டிய பெண்களும் இரண்டு நட்டுவரும் ஸ்பெஷல் ரயில் வண்டியில் வந்து சேரும்படி தந்தியடி! பத்து மத்தளங்களும் நான்கு வீணைகளும் வர வேண்டும்—மாலைகளை மறக்காதே— மாலைகள், மாலைகள்......

கவிஞன்: தோழர்களே! உங்கள் கண்கள் ஏன் இப்படிக் களைத்திருக்கின்றன?

தொழிலாளி: நெடுந் தூரத்துக் கப்பால் பார்க்கும் பார்வையின் களைப்பு— அந்தத் தூரத்திலே நான் காணும் காட்சியை என் சகோதரரும் காண்பார்கள்! மகத்தான போராட்டம்—முடிவான போராட்டம்—அதன்பின்—

(தாரை முழக்கம்)

வர்த்தகன்: மணமகளை வரவேற்க, மணமகன் தயாராகிவிட்டான்! அவர்கள்தான் என்ன வாலிபம்! என்ன நாணம் அவளுக்கு, அந்த நவயௌவனக் கன்னிகைக்கு! அவள் பாதி நிர்வாணமாய் நிற்கக் காண்கிறேன்—அவளது கருங் கூந்தல் நீண்ட பல ஜடைகளாய்த் தொங்குகின்றது—ஒற்றைநாடி சரீரம்— நிமிர்ந்து கம்பீரமாய் நிற்கிறாள்—ஒரு வார்த்தை சொல்கிறாளில்லை—மணமகனைத் தழுவக் காத்து நிற்கிறாள். அவள் நெற்றியிலே ஓர் சிவந்த பொட்டு—ரத்தச்சிவப்பு! ரத்தச்சிவப்பு! —ஏ கன்னிகையே! நீ யார்—நீ யார்? தூக்குமரம்! தூக்குமரம்!! கயிறு! கயிறு!! உன்னை எனக்குப் பிடிக்கவில்லை! உன்னை என் மருமகளாய் ஏற்கமாட்டேன், என் ஆசை நாயகியாகக் கூட வைத்துக் கொள்ளமாட்டேன்—! (நகைக்கிறான்)

கவிஞன்: தோழா, ஏழைத் தோழா! பொறுமையா யிரு. இவ் வேதனை யெல்லாம் சீக்கிரம் தீர்ந்துவிடும்! உலக வாழ்வே! உன்னிடம் நான் எவ்வளவு ஆழ்ந்த ஆசைவைத்தேன்! என் கனவுகளையும், பரவச வெறிகளையும், துயர வேதனைகளையும், ஆசைக் காதல்களையும், வேட்கைகள், நம்பிக்கைகள், உணர்ச்சிகள், அச்சங்களையும் உன்னிலே எப்படி யெல்லாம் கொட்டி நிறைத்தேன்! உலகமே! உன்னோடு எத்தனை தடவை நான் ஊடல் கொண்டேன்! பின் கூடலும் செய்தேன்!! ஹோ உலகமே! இதை நினைவில் வை! நான் உன்னைக் கைவிடவில்லை; நீதான் என்னைக் கைவிடுகிறாய்—இந்த வாலிபத்தில்— இந்த வாலிபத்திலா!—அட ஈசுவரா! இதுவோ உன் திருவுள்ளம்?

தொழிலாளி: இல்லை! இது சர்க்கார் திருவுள்ளம். சர்க்காரே கடவுளைத் தங்கள் சேவகனாக—எஜமானாக வல்ல——நியமித்துக் கொண்டுள்ளது.

ஆம், தன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக, அதுதான் அவனை நியமித்திருக்கிறது; உன் தேவைகளையும் என் தேவைகளையும் பூர்த்தி செய்யவன்று! ஏழைக் கவிஞனே! உன்னை அடக்கி வைத்திருப்பதற்காக, இல்லாப் பொருள் ஒன்றைக் குருட்டுத்தனமாய் நீ நம்பச் செய்து, வாழ்வு பூராவும் உன்னை ஏமாற்றி விட்டார்கள்—பாவம்!

கவிஞன்: இப்பொழுதும் கூட அவனை நீ ஏற்க வில்லையா?

தொழிலாளி; நான் அதை ஏற்க மாட்டேன். கோழைக்குத்தான் கடவுள் என்ற ஆறுதல் வேண்டும்; அதை நான் தூ வென்று வெறுக்கிறேன்! நண்பா! ஏதோ இயற்கை யதிசயத்தால் நீ திரும்பவும் ஒரு வேளை இம் மண்ணிலே பிறந்தால், அறிவு தெளிந்த, நெஞ்சுரம் படைத்த நாஸ்திகனாய்ப் பிறக்கவேண்டும் என்பதே என் ஆசை.

கவிஞன்: நீ இவ்வளவு அவமதிப்பாய்க் கடவுளைப் பற்றி இந்தச் சாவு நேரத்திலும் பேசுகிறாயே, உனக்கு அச்சமா யில்லையா? அவனை நீ மன்னிப்புக் கேட்டுக்கொள்ள மாட்டாயா?

தொழிலாளி: தோழா! கடவுள் என்றொருவன் இருந்தால், அவன்தான் கோடிக்கணக்கான எங்கள் முன்னே, தொழிலாளிகள் முன்னே, முழந்தாள் படியிட்டு, கோடி கோடி தடவைகள் மன்றாடி மன்னிப்புக் கேட்கவேண்டும்—அப்படிச் செய்தும் எங்கள் மன்னிப்பைப் பெறத் தனக்கு யோக்கியதை யில்லை யென்று, அவன் மனமுருகவும் வேண்டும்! பன்னூற்றாண்டுகளாய் எங்களின், தொழிலாளிகளின், ரத்தத்தைப் பிழிந்து, துன்புறுத்தி, காலால் மிதித்து வந்திருப்பவன் அவனே யன்றோ? நட்சத்திரங்க ளடர்ந்த தன் வான பீடத்திலே யமர்ந்து, திக்கற்ற வேட்டை விலங்குகளைப்போல் எங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பவனும் அவனே யன்றோ? எங்களிடம் மன்னிப்புப் பெற அவனுக்கென்ன யோக்கியதை யிருக்கிறது? எங்களைச் சூழப் பல்வேறு வர்க்கங்களும் பல்வேறு சமயங்களும் பல்வேறு வகுப்புக்களும் கொண்டதொரு வலையைப் பின்னி, பல்லாயிரம் கால்களுடைய சிலந்தியைப்போல் எங்கள்மீது பாய சமயம்பார்த்துக் கொண்டிருப்பவன் அவனே யன்றோ?......ஏ கவிஞனே! கவிஞனே!! கவிஞனே!!! உன் வாழ்க்கையிலே ஒரு தரங்கூட அழகையன்றி வேறெதனையும் பற்றி நீ பேசியறியாய், பாடியறியாய்! உன் உள்ளத்தே உறையும் வேதாந்தத்தை அறைகூவி யழைப்பதுபோல, உலகு முற்றிலும் வேண்டுமென்றே சூழ்ந்திருப்பதுபோலத் தோன்றும் அழுக்கும் கோரமும் குஷ்டமும் உன் கண்ணிலே ஒருபோதும் படவேயில்லையா? அரைவயிற்றுச் சோற்றோடு வாடும் குழந்தைகளை ஒருபோதும் நீ கண்டதில்லையா? இரத்தம் செத்துச் சோகையான அவர்களது காலுங்கையுமிடும் வெற்றோலம் உன் கவிதையுள்ளத்தை ஒருபோதும் கிளர வில்லையா? சோகத்தால் வெளிறிட்ட மேனியின் மானத்தைக் காக்கக்கூடப் போதாத கந்தலுடுத்த கன்னியரை ஒருபோதும் நீ கண்டதில்லையா? நாளைக்கு ஒரு வாய்க் கவளம் சோறு வாங்குவதற்காகத் தங்கள் மானத்தையே விற்க முயன்று தெருவிலே திரியும் ஏழை மாதர்களைத் தான் நீ கண்டதில்லையா? சமூகம் என்ற போலிக் கண்கட்டு வித்தையால், ஜாதிப் பிரஷ்டரும் திருடரும் நீசருமாய் ஒதுக்கி வைக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான எளியரைப்பற்றி நீ அறிந்த தில்லையா? அவர்கள் அப்படியானதற்குச் சமூகம் தானே பொறுப்பாளி? ஓ ஹோ! இன்னுமா நீ அழகைப்பற்றியே பேசுகிறாய்? உன்னைப் போன்ற கவிஞர்கள், பிரம்மாண்டமான மாளிகையில் நான்காவது உப்பரிகையில் உட்கார்ந்து, வெளியே வறுமையால் வாடித் துன்பத்தில் உழலும் ஏழை மக்களை வெறித்து நோக்கி, அந்தி மயக்கிலே அவர்களின் அழகை வர்ணிக்கிறார்கள்! அவர்தம் துயரத்தைத் தூரத்தே யிருந்த வண்ணம் உபயோகித்துக்கொண்டு, அவர்தம் திருவிளக்கற்ற குடிசைகளையும் நலிந்து சாகும் குழந்தைகளையும், விண்ணகத்தே யொளிரும் நட்சத்திரங்களோடும் வெண்பனிச் சூழலோடும் மேகத் திரளோடும் குழைத்திழைத்து, நேர்த்தியான சொல்லலங்காரச் சித்திரங்கள் தீட்டி விடுகிறார்கள்! அந்தக் கவிஞர்களின் பெயர்களும், புதை பொருட் கவிஞர்களின் திருப் பட்டியலிலே ஏறி விடுகின்றன! கவிஞனே! நீ மீண்டும் உண்மையிலே ஜனிப்பாயானால், சௌக்கியமாய்க் கவலையற்று வாழும் செல்வரின் கவிஞனா யில்லாமல், அதிக நாணயமாய்ப் பாடுவாயென்று நம்புகிறேன்—ஒரு தொழிலாளியின் சமையலறையிலேயுள்ள மண்பானையே அவனுக்கும் அவனுடைய குடும்பத்துக்கும் சிறிதேனும் உதவியாயிருக்கும் என்று பாடு. ஆனால், அப்படிக் கவிஞனாய்ப் பிறப்பதை விட, நீயும் ஓர் தொழிலாளியாகவே பிறந்து, நமது கோடி கோடிக் கணக்கான சகோதரரையெல்லாம் கனல் வீசும் செங்கொடியின் கீழே—இப்போதே பல சாம்ராஜ்யங்களை நிலைகலங்கச் செய்துள்ள அக் கொடியின் கீழே—திரளச் செய்வதே மேலாகும்!

கவிஞன்: தோழா! நான் இதுவரை கேட்டிராத தோர் மகாகவியைப் போலன்றோ நீ பேசிவிட்டாய். ஐயோ!—லட்சாதிலட்சமான மக்களின் சக்தியை, அற்புதத்தை, வெட்ட வெளியான சத்தியத்தை இதற்கு முன்னே நான் அறியாமற் போனேனே! ஆண்டவா! நீ இருப்பது உண்மையானால்!—

(தாரை முழக்கம்—ஆழ்ந்த நிசப்தம்—பிறகு, காவலனின் சொடுக்கல்—மீண்டும் அவன் ஓர் சாவியுடன் தோன்றிக் கதவைத் திறக்க வருகிறான்.)

வர்த்தகன்: வாடா மகனே! மணக்கோல மாகி விட்டாயா?

(காவலன் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை—கதவைத் திறக்கிறான்—இவர்களை ஒருவர் ஒருவராய் வெளியே இட்டுச் செல்கிறான்.)

கவிஞன்: விடை கொடுங்கள், தோழர்களே! மீண்டும் ஒரு தொழிலாளியாய் நான் திரும்பி வருவேன்! தொழிலாளியாய்!

வர்த்தகன்: (திடீரென்று சொற்ப ஞாபகம் வருகிறது) என்னை எங்கே அழைத்துச் செல்கிறாய்? எங்கே? அட எங்கே? தூக்குமேடை! தூக்குமேடைக்கா! ஐயோ! என் மனைவி, குழந்தைகளை விட்டா?—ஐயோ!—நான் சாகமாட்டேன், மாட்டேன்! (வர்த்தகன் கடைசி வார்த்தையைச் சொல்லி முடிக்குமுன் வெளியே கொண்டுபோகப் படுகிறான்.)

தொழிலாளி: (காவலனை நோக்கி) நமஸ்காரம், தோழா! உன்னைப் பார்க்க, எனக்கு வருத்தமா யிருக்கிறது. எங்களைப் போலவே, சுரண்டப்படுவோரில் நீயு மொருவன்! ஆனால், அதிசீக்கிரத்திலே இந் நிலைமைகள் யாவும் மாறிவிடும்! புரட்சி வரும்—புரட்சி வரும்—இதோ இந்த உதயவானச் செக்கர் போல வரும். புரட்சி நீடூழி வாழ்க!

தொழிலாளி வெளியே செல்லும்போது, உலகத் தொழிலாளரின் வாழ்த்துப் பாட்டைப் பாடுகிறான்—பல குரல்கள் அந்தப் பாட்டை வெகுதூரத்துக் கப்பால் வெளியே கொண்டு செல்லுகின்றன—சிறை வாசற்படிக்கு வெளியிலே ஜனத்திரள் அதனைப் பாடுவதுபோல் சத்தம் கேட்கிறது. பிறகு, மௌனம்.

காவலன் தனது தீபத்திலே மூன்று திரிகளை இட்டு, முச்சுடருடன் திரும்புகிறான். அமைதியாய், ஓர் இயந்திரம் போல, தீபமிருக்கும் லாந்தரின் கண்ணாடிக் கதவைத் திறக்கிறான். பின், அந்த மூன்று சுடர்களையும் ஒவ்வொன்றாய் அணைக்கிறான். அவன் கையிலுள்ள லாந்தரின் கம்பிக் கூடுமட்டில் மிஞ்சி இருள் சூழ்கிறது.

---

# பாரத சக்தி மஹாகாவியம்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

## எ. தியானக் காட்சிப் படலம்

(தொடர்ச்சி)

### இந்திரை

நானெனும் உணர் வொடுங்கி, நாதமும் ஒடுங்கி, யந்த
மோனத்தி லெனுட் புகுந்த மூச்சுடர்ப் பொலிவென் சொல்வேன்!
ஞானத்தி னெல்லை கண்டேன்: ஞாலத்தி லெங்கு மின்ப
வானத்தின் அரசைக் கண்டேன்; மகிழ்வினுக் கெல்லை காணேன்.

சத்தியராஜனுக்கு இந்திரை தனது தியானக் காட்சியைச் சொல்லுகிறாள்: "நான் என்னும் தனியுணர் வொடுங்கி, சப்தாதி தன்மாத்திரைகளும் ஒடுங்கி, மனம் உள்ளத்தில் ஆழ்ந்த மோனத்தில் மூழ்கினேன். அப்போது, நான் என்னும் உணர்ச்சி 'எல்லாம் அவன்' என்னும் கடவுளுணர்வில் ஒடுங்கியது. சத்தம் அடங்கியது. உள் மோனம் பிறந்தது. அந்த மோனத்தில் யான் ஆழ்ந்தேன். அப்போது என்னுள் மூன்று சிகையுள்ள அருட்சுடர் புகுந்தது. ஆ, அதன் பிரகாசத்தை எப்படி வர்ணிப்பேன்! அந்த அருளொளி என்னுட் புகுந்ததும் எல்லா அறிவுக்கும் எல்லையான பரமாத்மனைக் கண்டேன். உலகெங்கும் அவனது இன்ப விண்ணரசு நிலவக் கண்டேன். என் மகிழ்ச்சிக்கு எல்லை காணேன். பெருமகிழ்ச்சி கொண்டேன். ௧௬௪

பொம்மென வுலக மெல்லாம் போரிருள் படரக் கண்டேன்;
வெம்மன வரக்கர் கூட்டம் வீறிட்டுப் பொருதக் கண்டேன்;
செம்மையாந் தருமத் தாயின் சிந்தனை முகத்தைக் கண்டேன்;
அம்மவென் றஞ்சி நின்றேன். அகன்றதக் கொடிய காட்சி!

"திடீரென்று உலகையெல்லாம் போர் இருள் கவர்ந்தது. பிறருக்குத் தீமையே செய்யும் மனங்கொண்ட கோர ராக்ஷஸர் கூட்டம், "ஹா ஹா" என்று கூச்சலிட்டு, வீராப்புப் பேசி, பலவகைக் கருவிகள் கொண்டு கடும்போர் புரிந்து, உலகை இரத்தக்களமாக்கக் கண்டேன். நேர்மையான தருமத்தாய் இந்தக் கொடுங்காட்சியைத் தாங்காமல் விசனித்து நின்றாள். அவளது துயர்முகத்தைக் கண்டேன். "அம்மா, இதென்ன தீய காலம்!" என்று அஞ்சி நடுங்கினேன். திகைத்து நின்றேன். அச்சமயம் திடீரென்று அந்தக் கொடிய அசுரக்காட்சி மறைந்தது! ௧௬௫

மலர்தலைக் காலை சாந்த மகிழ்வுறக் கதிர்கள் வீசிப்
புலர்சுட ரொன்று கண்டேன்; புதுயுகம் பிறக்கக் கண்டேன்.
பலர்தவம் புரிந்த நல்ல பயனிதென் றுளத்திற் கொண்டேன்.
உலகைக்கண் விழித்துக் கண்டேன், உம்முகத் துவகை கண்டேன்.

"மலர்களால் மணந்து பொலியும் காலைக்குச் சாந்தக் கதிர்களை வீசி ஒரு புதிய சூரியன் உதித்தொளிரக் கண்டேன். அத்துடன் புதிய யுகம் பிறக்கக் கண்டேன். பல முனிவர் தவப்பயனாலேதான் இந்தப் புதிய கதிரவனும் புதுயுகமும் தோன்றின என்று உள்ளத்தில் கருதினேன். தியானங் கலைந்தது. கண்விழித்து உலகைக் கண்டேன். உமது முகத்தைக் கண்டேன். அதில் புதிய மகிழ்வு விளங்கக் கண்டேன்." ௧௬௬

### மன்னன்

ஈதென தருமைக காட்சி யென்னுமுன் மன்ன னங்கே,
"காதலின் கனியைக் கண்டேன். கடவுளின் கருணை கண்டேன்.
பூதலம் வாழக் கண்டேன். புதல்வனை யினிது கண்டேன்.
ஆதலி னருளால் இன்றென் அகக்குறை யகன்ற" தென்றான்.

இந்திரை "நாதா, இதுவே எனது அருமையான தியானக்காட்சி" என்னு முன்பே சத்தியன் பெருமகிழ்வெய்தி, "இது எனக்கு மிகவும் அனுகூலமான காட்சி. உன்னுடன் நான்கொண்ட காதல்வாழ்வின் கனியைக் கண்டேன். எனக்கொரு புதல்வன், தெய்வப்புதல்வன், பிறக்கக்கண்டேன். அவனால் உலகெல்லாம் புதியவாழ்வடையக் கண்டேன். இறைவன் கருணையை இன்றே கண்டேன். நாம் புத்திரனுக்காகச் செய்த தவம் நிறைவேறியது. ஆகையால் திருவருளாலே எனது மனக்குறை இன்றுடன் தீர்ந்தது" என்றான் மன்னன். ௧௬௭

"மாசிலா மணியே, சித்தி மரபினை வாழ வைத்த
தேசுலாங் கொடியே, கற்புத் தெய்வமே, திருவே, வாடா
வாசநாண் மலரே, யுன்றன் மங்கலக் காட்சி யாலே
காசினிக் கமுத மாகுங் கனியொன்று பழுத்த" தென்றான்

"மாசற்ற அன்பு மணியே, சித்திவம்சத்தை வாழவைத்த தேஜஸ் வளரும் பெண்கொடியே, கற்புத்தெய்வமே, என் மனையின் இலக்குமியே, வாடாத நன்மணங் கமழும் நாண்மலர் போன்ற அழகுள்ளவளே! உனது மங்கலக்காட்சியின் பெருமையை என் சொல்வேன்! அதனால் உலகிற்கு அமுதம்போன்று இனிமையாகும் ஒரு தெய்வக்கனி பழுத்தது. ஒரு தெய்வ மைந்தனை நீ பெறப்போகிறாய்!" என்றான். ௧௬௮

௭. தியானக்காட்சிப் படலம் முற்றிற்று.

## ௮. பாரதமுனியுரைப் படலம்

இமயமுஞ் சிறிய தென்றே யேறின புயங்கள் விம்மிக்
கமலக்கண் ணிரண்டு மின்பக் கதிர்களால் விரிந்த; உள்ளம்
விமலனை யெண்ணி யெண்ணி வியந்திடும் அந்த வேளை
சமதம சித்தி பெற்ற தவமுனி வரனும் வந்தான்.

மேற்படலத்திற் சொன்ன தியானக்காட்சியால் சத்தியன் புயங்கள் 'இமயமலைகூடச் சிறிது' என்னும்படி விம்மி உயர்ந்தன; இன்பக்கதிர்களால் கமலக்கண்கள் விரிந்தன. அவன் உள்ளம் பரமபரிசுத்தனான இறைவனை எண்ணியெண்ணி அவன் அருள்திறமையை வியந்துநின்றது. அந்தச் சமயம் சமம் தமம் திதிட்சை (பொறிபுலனடக்கம்) எல்லாவற்றிலும் சித்திபெற்ற தவமுனிவரிற் சிறந்த பாரத முனிவன் தோன்றினான். ௧௬௯

(காலை தியானம் ஆனதும் முனிவன் வந்து அரசனை வாழ்த்திச் சில உபதேசங்கள் செய்வது வழக்கம்.)

மலையின் மாண்பினன், மடங்கலின் மொய்ம்பினன்; ஆன்மக்
கலையின் ஆழியான்; ஞானமாக் கனல்விரி கண்ணன்;
நிலவு செங்கதிர் மேனியான்; நீளுயர் மின்னல்
உலவு கின்றதை யொத்தனன் உத்தம முனிவன்.

உத்தம குணங்கள் நிறைந்த பாரதமுனிவன், மலைபோன்று கம்பீரமானவன். சிங்கத்தைப்போன்று பலசாலி. அத்யாத்மக் கலைகளுக்கு ஒரு கடலைப் போன்றவன். ஞானக்கனல் பரவும் விழிகளைக்கொண்டவன். காலைச் செங்கதிரைப் போன்ற தேசு பொலியும் மேனியுடையவன்; நீண்டுயர்ந்த மின்னல் தரையில் உலாவுவதைப் போன்று அருட்சுடர் வடிவாகப் பொலிந்தான். ௧௭௦

சிற கடித்தன, தீங்குர லார்த்தன; மீது
நறு மலர்களை யுதிர்த்தன நளிர்வனப் புட்கள்.
'உறுக வென்றன' கன்றுகள் உயர்வுறத் துள்ளி,
நிறை தவத்தினர் உயிர்க்கெலா நேயரே யன்றோ!

பாரதமுனிவரின் வரவைக் கண்டு மகிழ்ந்து, புட்கள் சிறகுகளை அடித்து, இனியகுரலாற் பாடின. நளிர்வன மரங்கள் பூக்களை அவர் மேல் உதிர்த்தன. மான் கன்றுகளும், பசுங்கன்றுகளும் வானுயரத் துள்ளி 'வருக' என்று வரவேற்றன. நிறைந்த தவசித்தி பெற்ற நின்மலர், எல்லா வுயிர்களையும் தம்முள்ளும், தம்முயிரை எல்லா வுயிர்களுள்ளும் காண்பர். அவர் எல்லா வுயிர்களுக்கும் நண்பர். ஆதலால் எல்லாம் அவரை வரவேற்கின்றன. ௧௭௧

அருமுனி வரவு கண்டாங் கரசனும் அரசியாரும்
வருகவென் றுவகை கூறி மணித்தவி சிருத்தி, வாசத்
திருமலர் தூவிப் போற்றிச் சேவடி பணிந்து நின்றார்;
குருமுனி மனங்கு ளிர்ந்து நன்மொழி கூறி னான்:—

அரிய மாதவமுனிவன் வரவைக் கண்டனர் சத்தியனும் இந்திரையும்; எதிர் கொண்டு 'வருக' என்று எற்று, ஒரு மணி பீடத்தில் அமர்த்தினர்; வாசனையுள்ள அழகிய மலர்களால் அர்ச்சித்துத் தோத்திரம் சொல்லி அவன் சேவடி வணங்கி நின்றனர். அன்பர்மேல் மனங்குளிர்ந்து முனிவன் மங்கல வாசகம் சொன்னான்: ௧௭௨

**முனிவன்**

ஆன்றநல் லறமுஞ் சீரும் அருளொடு பொருளு மோங்கி,
வான்றகு புகழ் சிறக்க, வையகம் புரந்து வாழ்வீர்

கோன்றகு முறைசெய் யுங்கள் குலமுட னுலகும் வாழுந்
தோன்றலைப் பெறுவீர் இன்பத் தூயனின் கருணை யாலே!

"மனித வாழ்விற்கு மாண்பளிக்கும் விசாலமான தருமமும், அதனுல் வரும் எல்லா நன்மையும், இறைவன் அருளும், கல்வி கேள்வி செல்வம் படைவலி, வெற்றி முதலான பொருளும் ஓங்கி, வானுலகிற்கே தகும்படியான (வானோங்கிய) புகழ் சிறக்க உலகையாண்டு நீடூழி வாழ்வீராக! ஒரு அரசனுக்குரிய (கோன் தகு) நீதிமுறையை உங்கள் மரபு பழுதறக் காத்து விளங்குகிறது. அக்குலமும் உலகமும் எல்லா நன்மைகளும் செழித்து வாழ ஒரு தெய்விக மைந்தனை நீங்கள் இன்பமும் சுத்தமுமே வடிவான இறைவனருளாலே பெறுவீர்களாக!" களரு

### சத்தியன் ; இந்திரை

"எனைத்தும் உன் அருளால்" என்றே இந்திரை கண்ட காட்சி
அனைத்தையும் அரசன் சொல்லி அதன்பொருள் இயம்பக் கேட்டான்.
இனித்தமென் முறுவல் பூத்து, மனங்குவிந் திருந்து சற்றே
தனித்தவக் கொழுந்திவ் வாறு சாற்றினன் சாந்த மாக:—

"எமது குலம்பெறும் நன்மை எதுவும் குலகுருவான நினது அருளாலே தான்" என்று உபசாரம் சொல்லி, இந்திரை அன்று கண்ட தியானக்காட்சியை அரசன் கூறி, அதன் பொருளை விளக்கும்படி முனிவரை வேண்டினன். முனிவர் இனிய மெல்லிய முறுவல் பூத்தார்; சற்றே மனங்குவிந்து தியானத்தில் அமர்ந்தார். பிறகு சாந்தமாக தியானக்காட்சிப் பயனை இவ்வாறு சொல்லலானர்:— களச

### முனிவன்

நல்லதுந் தீயதும் நட்பும் வெம்பகைத்
தொல்லையும் தொடர்ந்துறுந் தொல்புவி யிதனில்,
அல்லல்செய் அரக்கர்கள் அமரத் தன்மையைக்
கொல்படை கொண்டினிக் கொடுமை செய்வரால்.

"இந்த உலகம் இருவிகாரக் களன். அதில் நல்லதும் தீயதும் நட்பும் வெய்யதொல்லை செய்யும் பகையும் தொடர்ந்து வரும். இதுகாறும் உலகில் உனது ஆட்சியில் அறம் விளங்கியது; தெய்வத்தன்மை விளங்கியது. இனிக் காலம் மாறும். இடர்களைச் செய்து உலகை அழித்தலே தொழிலான அகம்பாவம் பிடித்த அசுரர்கள் கொலைப்படைகளைக் கொண்டு, தெய்வ குணத்தைப் பொருதிக் கொடுமைசெய்வர். களடு

வீரியச் செருக்கினல் வெய்ய செய்திடும்
போரியல் அரக்கராம் பொய்யிருள் கெடச்
சூரியன் போலருட் சோதி மைந்தனுன்
பேரியற் குலத்தினிற் பிறங்கு வானரோ!

"போரே தமது இயல்பாகக் கொண்ட அரக்கர் தமது வீரியபலச் செருக்கினல் கொலை, கொள்ளை, கற்பழிவு முதலிய கொடுமைகளைச் செய்வார்கள். அவர் பொய்யும் அஞ்ஞான அந்தகாரமும் நிறைந்த பதிதர்; வெய்யர். அவரது பொய்யிருள் கெட ஒரு தெய்வவொளி வேண்டும். அசுரபலத்தைத் தெய்வ பலமே வெல்லும். உனது பெருமைதங்கிய குலத்தில் சூரியன் போன்று அருட்சோதியாக விளங்கும் ஒரு திருமைந்தன் தோன்றுவான். அவனே அரக்க இருளை நீக்கி உலகிற்கு இன்பவொளி தருவான். களசு

மாற்றுவன் பழையன ; மற்று நூதனந்
தோற்றுவன் புதுயுகந் துலக்கி யாளுவான்.
வேற்றுமைச் சமர்களை வேரொ டெற்றுவான்
ஆற்றுவான் ஆத்தும நேய மெங்குமே.

"பழைய பழக்கங்களில் காலத்திற்கும் முன்னேற்றத்திற்கும் ஒவ்வாதவற்றை யெல்லாம் மாற்றுவான். மாந்தர் மாசற்று, பகை பொருமையில்லாமல், ஒருகுலமாக வாழக்கூடிய புதிய உண்மைகளைத் தோற்றுவான். உலகில் புதுயுகம் விளக்கி அந்த யுகத்திற்குத் தானே தலைவனுக ஆளுவான். சாதிசமய சாத்திரகோத்திர வேற்றுமைகளால் வரும் சண்டைகளை வேருடன் எற்றி எறிவான். ஆன்மா எல்லாருக்கும் ஒன்று. அந்த உணர்ச்சியில் அனைவரும் சேர்ந்து வாழும் ஆன்மநேய ஒருமைப்பாட்டை உலகெங்கும் ஆக்குவான். அவனே உனது மைந்தன். களஎ

இதுபொரு ளிந்திரை காட்சிக் காமெனப்
பொதுமறை முனிவரன் புகலக் கேட்டதும்,

புதுமகிழ் வெய்தினர் போற்றி செய்தனர்
முதுதவன் பதமலர் வணங்கி முன்னின்ருர்.

" இந்திரை கண்ட காட்சியின் பொருள் இதுவே!" என்று எல்லாருக்கும் பொதுவான வேதத்தை அறிந்த முனியரசர் புகலக்கேட்டனர் இந்திரையும், சத்தியராஜனும் ; புதிய மகிழ் வெய்தினர். முனிவரைப் போற்றிப் புகழ்ந்தனர். தவத்தான் முதிர்ந்த அம்முனிவரர் பாதத்தை வணங்கி அவர்முன் நின்றனர். கஎஅ

" முனிவனே போற்றி, ஜீவன் முத்தனே, யுலகிற் கெல்லாம்
இனியனே போற்றி, யெங்கள் இறைவனே போற்றி " யென்று
பனிமலர் சொரிந்து பாதம் பணிந்தவுள் ளன்ப ருக்குப்
புனிதநல் லாசி கூறிப் போந்தனன் புரையி லாதான்.

அன்பர் இருவரும் "முனிவனே, சீவன் முக்தனே, உலகிற்கெல்லாம் இனியனே, எங்கள் இறைவனே போற்றி!" என்று பனிமலர் தூவி மீண்டும் அடிபணிந்தனர். அவர்களுக்கு மாசற்ற தவமுனிவர் புண்ணிய ஆசீர்வாத மளித்துத் தமது தவச்சாலைக்குச் சென்ருர். கஎகூ

என்னுடை மரபும் இந்த வுலகமும் இனிது வாழப்
பொன்னெளிர் புனித மைந்தன் பொலிவனென் றுவகை பூத்து,
மன்னவன் அறங்கள் செய்தான் ; மகிழ்ந்தனர் குடிகளெல்லாம்.
தன்னிக ரற்ரேன் வந்த கதையினிச் சாற்று வோமால்.

"எனது குலம் மட்டுமன்று, இவ்வுலகமுழுதுமே இனிது வாழ, பொன்போல் மாசற்ரெளிரும் தூயமைந்தன் எனது மனையிற் பிறந்து விளங்குவான் !" என்று மன்னன் பெருமகிழ் வடைந்தான் ; தானதருமங்களைச் செய்தான். குடிகளெல்லாம் மகிழ்ச்சி யுற்றனர். தன்னிகரற்ற அந்தத் தெய்வீக மைந்தன் பிறந்த கதையை இனிச் சொல்வாம். கஅ0

அ. பாரத முனியுரைப்படலம் முற்றிற்று.

---

## முத்தமிடும் மெஷின் !

ஒரு இளமங்கையும் இளைஞனும் ஒருவரை யொருவர் நன்ருய் முத்தமிட வில்லை. அதனுல், ஹாலிவுட்டில் அவர்களின் உத்தியோகம் போய்விட்டது; கொழுத்த சம்பளம் வாங்கிக்கொண்டிருந்த அவர்கள் வேலையை விட்டே தள்ளப் பட்டார்கள்.

'லிப் ஸ்டிக்' என்ற சிவப்பு வர்ண உதட்டுப் பசையை நடிகர்கள் தரித்துக் கொள்வது வழக்க மல்லவா ; இந்த உதட்டுப்பசை நல்லதா யில்லாவிட்டால், முத்த மிடும்போது, ஒட்டிக்கொண்டு விடும். பலவித உதட்டுப்பசைகளைப் பரிட்சை செய்யவேண்டி, இந்த வாலிபனையும் யுவதியையும் ஒருவரை யொருவர் முத்த மிட்டுக் கொள்ளும்படி இவர்களின் ஹாலிவுட் எஜமானர்கள் இவர்களிடம் சொன் ஞர்கள். இவர்களும் பரம பிரேமையோடு அப்படியே பரஸ்பரம் முத்தமிட்டுக் கொண்டார்கள். ஆனுல், எவ்வளவு நேரம்தான் அந்தப் பிரேமை நீடித்திருக்கும்? முதல் இரண்டு மூன்று மணிநேரம் கழிந்ததும், இவர்களின் பிரேமை போய் விட்டது ; அசிரத்தையோடு முத்தமிட்டுக் கொள்ளலானுர்கள், அதனுல், போதிய அளவு அழுத்தி முத்தமிட வில்லை. வர்ணப்பசை ஒட்டுமா, ஒட்டாதா என்று கண்டு பிடிக்க, இந்த லேசுமுத்தம் போதவில்லை. ஆகையால், இவர்கள் வேலையைவிட்டு நீக்கப்பட்டார்கள்.

இப்போது அந்தப் பரிட்சையை, ஒரு மெஷினே செய்து வருகிறது. இரண்டு ஜோடி ரப்பர் உதடுகள் தயார்செய்து, அந்த மெஷினில் பொருத்தி யிருக்கிருர்கள். அந்த ரப்பர் உதடுகள் ஒன்றை யொன்று முத்தமிட்டுக் கொள்ளுவ தின் அமுக்கம் எவ்வளவு நிறைக்குச் சமம் என்று கணக்கிட முடியும். சாதாரண அன்பு முத்தம் 10 ராத்தல் நிறையாம். காதல் வெறியோடு கூடிய முத்தமோ 25 ராத்தல் இருக்குமாம். இந்த 25 ராத்தல் நிறை முத்தத்தைத் தாங்கக்கூடிய உதட்டுப்பசைதான் உயர்ந்தது என்று கண்டுகொள்ளலாம்.

---

*சிறு கதை:*

# புது டில்லிப் பிச்சைக்காரன்

(ஆர். பி. மகாதேவ சிங்)

டில்லியிலுள்ள கன்னாட் ப்ளேஸ் இந்தியாவின் தலைநகரின் அந்தஸ்துக்கேற்ற வாறே கட்டப் பெற்றிருக்கிறது. உயர்ந்த கம்பீரமான கட்டடங்கள் வட்ட வடிவமாய் அமைந்திருக்கின்றன. நடுவில் ரமணீயமான ஒரு புல்வெளி. டில்லியில் வீசும் அனல் காற்றுக்குப் பயந்து டில்லிவாசிகள் இந்தப் புல்வெளிக்கு வந்து சாயங்காலம் தமாஷாகப் பொழுது போக்குவார்கள். கன்னாட் ப்ளேஸ் ஒரு அழகிய காட்சி. வித விதமான கடைகள், வர்ணிக்க முடியாத அலங்காரங்கள், பளபள வென்று மின்னும் மோட்டார்களில் ஆண்களும் பெண்களும் குறுக்கும் நெடுக்கும் போகும் காட்சி. நடுவில் நந்தவனங்கள். அங்கே குழந்தைகளின் சிரிப்பும் விளையாட்டும்; வாலிபரின் ஒய்யார நடை; புஷ்பச்செடி போல் துவண்டு நடக்கும் இள மங்கையர் புன்முறுவல்—இந்த இடத்தில் லட்சுமி தாண்டவமாடுகிறாள் என்று சொல்லிவிடலாம்.

தன் சட்டையின் கிழிந்த காலரை வெளிக்குத் தெரியாமல் தூக்கிவிட்டுக் கொண்டு, நந்தவன ஓரமாய் நடந்த வெங்கிட்டுவை, கன்னாட் ப்ளேஸின் அழகு கவரவில்லை; தன் பாதையிலே எதிரில் நின்ற ஒரு மனிதனின் தோற்றந்தான் அவனைக் கவர்ந்தது. உற்று நோக்கினான். அழுக்கடைந்து கிழிந்து தொங்கும் கந்தல்களுக்குள் சொறிபிடித்த தேகம். தோள் பட்டை எலும்புகள், கிழிந்த சொக்காய்க்குமேல் துருத்திக் கொண்டு நின்றன. வறண்டு உலர்ந்து குழி விழுந்த கன்னங்களுக்குமேல் கொப்பளித்து நின்றன இரண்டு கண்கள்; அப்பா! என்ன கண்கள்! புகைக்குள் தோன்றும் நெருப்புப் போலவா இருக்கும்! அவன் தோற்றம் கன்னாட் ப்ளேசின் அழகைக் கேலி செய்வது போலிருந்தது. எதிர்த்தாற் போலிருந்த கடையிலிருந்து ஒரு பெண் வெளியே வந்து வாசலில் நின்ற மோட்டாரில் ஏறப் போனாள். அவளுக்குப் பின்னால் மோட்டார் டிரைவர், ஒரு அழகிய நாயைத் தூக்கிகொண்டு வர, கடை மானேஜர் வினயமும் பணிவும் தோன்ற முன்னால் நடந்து வந்தார். அவளுடைய ஆடம்பர உடையையும் பேச்சுச் செருக்கையும் கவனித்த வெங்கிட்டு "யாரோ பெரிய சீமாட்டி போலிருக்கிறது" என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான். அவள் காரில் ஏறி உட்கார்ந்துகொண்டு கடை மானேஜரிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

வெங்கிட்டுவுக் கருகில் நின்ற பிச்சைக்காரன் மெதுவாய்க் காரருகில் நகர்ந்து, "அம்மா! பசிக்கிது; ஒரு பைசாக் கொடுங்களேன்" என்று கெஞ்சினான். அவனுடைய தீனக் குரல், அச்சீமாட்டியின் காதில் விழவே யில்லை. மறுபடியும் பிச்சைக்காரன் "தாயே" என்றான். அவள் அரைக் கண்ணை இவன் பக்கம் திருப்பி, பார்த்தும்பாராததுபோல் பழையபடி தன் பேச்சைத் தொடர்ந்து விட்டாள். அதற்குள் டிரைவர் "போ! போ! இங்கென்ன வேலை?" என்று அதட்டினான். "தாயே! ஒரு வாரமாய்ச் சாப்பாடில்லை; பசி வயிற்றைச் சுருட்டுது. ஒரு பைசாக் கொடுங்களேன்" என்றான் பிச்சைக் காரன். மானேஜரிடம் சீமாட்டி "இந்தச் சோம்பேறி ராஸ்கல்களை யெல்லாம் பிடித்து ஜெயிலில் வைக்கவேண்டும். பெரிய தொந்தரவா யிருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே, தன் நாய்க்கு ஒரு பிஸ்கோத்தைத் தூக்கி யெறிந்தாள். அதைக் கவ்வ யத்தனித்த நாய், டிரைவர் கையில் இருந்து துள்ளியது. நாயும், பிஸ்கோத்தும் சேர்ந்தாற்போல் தரையில் விழுந்தன. பிச்சைக்காரன், ஆவலோடு குனிந்து அந்தப் பிஸ்கோத்தை எடுத்தான். நாயைத் தூக்கக குனிந்த டிரைவர், பிச்சைக்காரன் கையைத் தன் காலால் நசுக்கி, முழங்காலால் அவன் முகத்தை இடித்துத் தள்ளினான். இதற்குள் சீமாட்டி ஆத்திரமாய்க் காரை விட்டிறங்கி, டிரைவர் கையிலிருந்த நாயை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு, அப்பொழுதுதான் எழுந்திருக்கும் பிச்சைக்காரனைப் பார்த்து, "சைத்தான்! போடா!" என்று சீறினாள். நாயும் அவனைப் பார்த்துக் குரைத்தது. மானேஜரும் தம் பெருத்த தொந்தி குலுங்கப் பிச்சைக்காரனை ஹதம் செய்து விடுபவர் போலப் பாய்ந்து வந்தார். இத்தனை படைக்கு முன்னே பிச்சைக்காரன் எம்மாத்திரம்? அவனும் மெதுவாய் வெங்கிட்டு நின்ற இடத்திற்கே திரும்பினான்.

சற்றுத் தூரத்தில், நந்தவனத்துக்குள் இளந் தம்பதிகள் இருவர் என்னவோ வெகு சுவாரஸ்யமாய்ப் பேசிக்கொண்டிருந்தனர்; தமிழர்களாய்க் காணப்பட்டனர். பிச்சைக்காரனுக்கு அவர்களுடைய ஆனந்தமான தோற்றம் சற்றுத் தைரியம் கொடுத்தது போலிருக்கிறது. அவர்களருகில் போய்நின்றான். "தாயே!" என்றான் ஹீன சுரத்தில். அந்தப் பெண் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அவன் தோற்றம் அவளைத் திடுக்கிடச் செய்தது. தன் கணவனிடம் "அப்பாடா! இவனைப் பார்த்தாலே பயமாருக்கே! பாவம், பசி போலிருக்கு; ஒரு காலணாக்காசு கொடுத்து விரட்டுங்கோ" என்றாள். தனது இன்பக் கனவில் ரஸாபாஸமாய் நுழைந்த பிச்சைக்காரனை வாலிபன் வெறுப்புடன் முறைத்துப் பார்த்து, "ஜாவ்! ஜாவ்! பைசா நை" என்று சொல்லிவிட்டு, மறு பக்கம் திரும்பிக்கொண்டான். பாவம்! பிச்சைக்காரனுக்கு, தான் சிவபூஜையில் நுழைந்த காடியென்று தெரியுமா? மெதுவாகப் பழைய இடத்திற்கே திரும்பினான். "ஜாவ்! ஜாவ்!...... ஒரு வாரமாய்ப் பட்டினி; வயிற்றைக் கிள்ளுது! பகவானே!" என்று முனகிக் கொண்டே நடந்தான் பிச்சைக்காரன். அதைக் கண்ட வெங்கிட்டுவின் மனத்தில் தாங்கமுடியாத சஞ்சலம் உண்டாயிற்று. தன் சட்டைப் பைக்குள் கையை விட்டு அங்கிருக்கும் காலணாவை யெடுத்தான். "நமக்கே வேலையில்லை; சாப்பாடு பிறன் வீட்டில். இதில் இன்னொருவனுக்குத் தானமா? ஹூம்!" என முனகிக் கொண்டே, காலணாவைத் திருப்பிப் பைக்குள்ளேயே போட்டுக் கொண்டு, அந்த இடத்தை விட்டு, வேகமாய், யுத்த ஞாபகச் சின்னத்தை நோக்கி நடந்தான். அப்பொழுது சாயங்காலம் ஏழு மணி......

அதன்பின் ஒன்றரை மணி நேரம் கழிந்தது. வெங்கிட்டு க்வீன்ஸ்வே வழியாய்த் திரும்பி வருகிறான். நிலவொளியில் பட்டு விரித்ததுபோல் இருந்த அந்தத் தெருவின் அழகில் அவன் மனம் செல்லவில்லை. அந்தப் பிச்சைக்காரனுடைய சோர்ந்த தேகமும், வெறுப்பும் சலிப்பும் தோல்வியும் கலந்த அவன் கண்களும்தான் வெங்கிட்டுவின் கண் முன்னே நின்றன. செல்வச் செருக்குடன் தலைதூக்கி நிற்கும் கன்னாட் ப்ளேஸ் கட்டடங்களும், அவற்றில் ஏற்றியிருக்கும் பல வர்ண மின்சார விளக்குகளும், வெங்கிட்டுவையும் அவன் பிச்சைக்காரனையும் ஏளனம் செய்வதுபோலிருந்தது. "இவ்வளவு செல்வமும் சந்தோஷமும் பொங்குமிடத்தில், இப்படித் தரித்திரமும் பசியும் துன்பமுமா? சீ! நாமாவது அவனுக்குக் காலணாக் கொடுத்திருக்கலாமே—மடத்தனம். பாவம்! ஒரு வாரம் பட்டினி என்றானே" என்று மனம் உளைந்துகொண்டே நடந்த வெங்

கிட்டுவின் பார்வை, சற்றுத் தூரத்தில் பாதையோரமாய்த் தள்ளாடித் தள்ளாடி வரும் ஒரு உருவத்தின்மேல் சென்றது. "அவன்தானோ?" என்று ஐயுற்ற வெங்கிட்டு, சற்று வேகமாய் நடந்தான், ஜேபியிலிருந்த காலணாவைக் கையிலெடுத்துக் கொண்டே.

அந்த உருவம் தள்ளாடிக்கொண்டே வந்து, ஒரு பங்களாவின் வாசலருகே சட்டென்று நின்றது. உடம்பை நிமிர்த்தி, நாற்புறமும் சுற்றி உருட்டி விழித்துப் பார்த்துவிட்டு, தொப்பென்று அங்கேயே விழுந்துவிட்டது. பங்களாச் சுவரின்மேல் உட்கார்ந்திருந்த ஒரு சிறுவன், "அரேரே! உனக்கு என்ன ஆயிற்று?" என்று கத்திக்கொண்டே ஓடி வந்தான். வெங்கிட்டு இரண்டே எட்டில் கீழே விழுந்த உருவத்திடம் பாய்ந்து, அதைக் குனிந்து தொட்டுப் பார்த்தான். ஆம், அவன்தான்; சந்தேகமில்லை—வெங்கிட்டுவின் பிச்சைக்காரன்தான் அவன். மார்பில் கையை வைத்துப் பார்த்தான். பேச்சுமில்லை; மூச்சுமில்லை. வெங்கிட்டுவின் இதயம், பட படவென்று துடித்து, தட்டென்று நின்றது. அவன் கண்களுக்கு உலகமே சுழல்வதுபோலிருந்தது. அவன் மனம் உறைந்து பாறைபோல் உணர்வற்று உன்மத்தம் பிடித்தது போலாயிற்று. தெருவில் போகும் மோட்டார்களின் சத்தம் ஒன்றும் அவன் காதில் விழவேயில்லை. கார்களின் விளக்குகள் மட்டும் மின்மினிப் பூச்சிகள் போல் முன்னும் பின்னும் பறந்தன. ஒரே நிசப்தம்.

"யே மர்கயா, ஸாப்!" ("இவன் இறந்து விட்டான் எஜமான்.")

எதிரே நின்ற அந்தச் சிறுவனின் குரல் வெங்கிட்டுவைச் சூழ்ந்திருந்த நிசப்தத்தைத் தொலைத்தது. "இவன் இறந்துவிட்டான்! இறந்துவிட்டான்!" என்னும் வார்த்தைகள் அவன் மூளையைச் சுற்றிச் சுற்றிக் 'கிர்' என்று வட்டமிட ஆரம்பித்தன.........பங்களாவுக்கு முன் ஒரு கார் வந்து நின்றது அதற்குள்ளிருந்து இறங்கிய ஒருவர், வெகு வினயமான குரலில், "கிழமாடுகள் சம்ரக்ஷண சங்கக் காரியதரிசி, புது டெல்லி என்று எழுதினால் போதும்" என்றார்.

"ஆஹா! நாளைக்கே என் செக்கை அனுப்பிவிடுகிறேன். பாவம், வாயில்லாப் பிராணிகள்!—வைஸிராய்ப் பிரபுவே சங்கத்தைத் திறந்து வைக்கப் போகிறாராமே? ஏதோ நம்மாலான உதவி செய்ய வேண்டியதுதான்" என்றது ஒரு பெண் குரல்.

"தாங்க்ஸ், குட் நைட்" ("வந்தனம், போய் வருகிறேன்").

பங்களாவுக்குள் திரும்பிய காரின் வெளிச்சம் பாதை யோரமாய்க் கூடியிருந்த சிறு கூட்டத்தின்மேல் விழுந்தது. மெதுவாய் நகரும் காருக்குள்ளிருந்து "இது என்ன?" என்ற குரல் கிளம்பியது.

மனமிடிந்து செயலற்றிருந்த வெங்கிட்டு தலை நிமிர்ந்து பார்த்தான். கன்னாட் ப்ளேஸில் கண்ட அந்தச் சீமாட்டிதான்; பிச்சைக்காரனுக்கு ஒரு காலணாக் கொடுக்காதவள்! வெங்கிட்டுவுக்கு விவரிக்க இயலாத ஒரு மனவேதனையுண்டாயிற்று. கம்மிய குரலில் "இவன் இறந்துவிட்டான்—பசியால்" என்றான்.

காருக்குள்ளிருந்த சீமாட்டி 'கல கல' வென்று ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டு, வெகு அலட்சியமாய், "ஓ, குடித்துவிட்டுக் கிடப்பான்; போலீஸைக் கூப்பிடுங்கள்" என்றாள்.

வெங்கிட்டுவின் மனத்தில் ஊழித் தீ போல் கோபம் பொங்கி யெழுந்தது; அவளையும் அவள் மோட்டாரையும் பங்களாவையும் சேர்த்து எரித்துவிடுவான் போல் உறுத்து விழித்துப் பார்த்தான்.

சீமாட்டி, சாவதானமாகவே, "டிரைவர், நீ போ உள்ளே" என்றாள். காரும் பங்களாவுக்குள் சென்று மறைந்தது.

பிச்சைக்காரனைத் திரும்பிப் பார்த்தான். வெறித்து விழித்துக் கொண்டிருந்த அந்த உயிரற்ற விழிகளில் சற்று நேரத்திற்கு முன் கன்னாட் ப்ளேஸில் நடந்த சிறு நாடகங்களின் உருவெளிகளை, நிழற் படம்போல், வெங்கிட்டு மீண்டும் கண்டான்.

"ஜாவ்! ஜாவ்!—ஒரு வாரமாய்ப் பட்டினி— வயிற்றைக் கிள்ளுது—பகவானே!" என்ற துயரம் தோய்ந்த அவன் குரல், எங்கேயோ வானவெளியிலிருந்து வெகு தூரத்துக் கப்பால் கேட்பதுபோல் வெங்கிட்டுவின் காதுகளில் தொனித்தது. அவன் திக்பிரமை பிடித்து நின்றான்.

அவன் மனம் "கொலை! கொலை!" என்று கூவியது. அவன் திடுக்கிட்டு, "என்ன! நானா?" என்றான்—மறுபடியும், சினிமாப்படம் போல, அவன் கண் முன்னே அந்தச் சீமாட்டியும், தமிழ்த் தம்பதிகளும், பிச்சைக்காரனும் தோன்றி மறைந்தனர். வெங்கிட்டு தன் கையிலிருந்த காலணாவை ஒரு முறை முறைத்துப் பார்த்தான்.

"என்ன! நானா?"—

"ஆம், நீதான்! நீதான் கொலைகாரன்!" என்று மனம் அலறியது.

"அவர்கள் — அந்தச் சீமாட்டியும் காதல் தம்பதிகளுமோ?—அவர்களில்லையா?"

"அட மூடா! அவர்கள் பணத்தின் கருவிகள் — அடிமைகள். நீ தானே உணர்ச்சிப் பாண்டம்?—அந்தக் காலணா—காலணா? அதை என்ன செய்யப் போகிறாய்?" என்று மீண்டும் குமுறியது மனம்.

வெங்கிட்டு முழு உலகையுமே மறந்து, அந்தரத்தில் அலைப்புறும் ஓர் ஏகாந்த மேகம்போல, தள்ளாடித் தள்ளாடிக் கால் சென்ற வழி நடந்தான்.

---

## இது தான் ஏடன்

சூயஸ் கால்வாய் வழியாகச் செங்கடலையும் தாண்டி அரேபியாவின் தெற்குக் கோடிக்கு வாருங்கள். அந்தக் கோடியில் அநேக மலைகள் நிறைந்து கன்னங்கறேலென்று தெரியும் இடம்தான் ஏடன்.

ஏடன் பிரிட்டிஷ் அதிகாரத்தின் கீழ் வந்து சரியாக 100 வருஷங்கள் ஆகின்றன. நூறு வருஷங்களுக்கு முன்னால் ஏடனிலிருந்த ஒரு சுல்தான் ஏடனுக்கு அருகில் கப்பல் உடைந்து ஆபத்துக்குள்ளான சில பிரிட்டிஷ்காரர்களைக் கைது செய்துஅடிமையாக்கிக் கொண்டான். அதில் இரண்டு பேர் ஒரு சிறிய படகைத் திருடிக்கொண்டு அந்த இடத்தை விட்டு வெளிக் கிளம்பினார்கள். பிறகு பம்பாயிலிருந்து பிரிட்டிஷ் பட்டாளங்கள் கிளம்பிச் சென்று ஏடனையும் அதைச் சுற்றியுள்ள கொஞ்ச இடத்தையும் பிடித்துக்கொண்டன. இரண்டு வருஷங்களுக்கு முன்பு வரையில் பிரிட்டிஷ்காரர்கள், இந்தியாவின் ஒரு பாகமாகவே அரேபியாவிலுள்ள ஏடனையும் ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள். 1937-ஆம் வருஷ ஆரம்பத்தில் அதுவே ஒரு தனிக் காலனியாயிற்று. பிரிட்டிஷ் காலனிகளின் கடைக்குட்டி அதுதான்.

# புலன்கள் எத்தனை? { ஐந்தல்ல: பதினென்று!

கிரேக்கர்களின் புராணத்திலே, மகா உருக்கமானதோர் அற்புதக் கதையுண்டு. டான்டலஸ் என்றொரு கிரேக்க வீரன் இருந்தான். அவன் வீரத்தைத் தேவர்களும் மெச்சி, அவனைத் தங்கள் உலகத்துக்கு அழைத்துச் சென்று, உபசாரங்கள் புரிந்தனர். அமர வாழ்வு வாழ்வதற்குரிய சில தேவ ரகசியங்களையும் அவர்கள் இவனுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். ஆனால், அந்த ரகஸ்யங்களை அவன் பிற மனிதர்களிடம் சொல்லிவிடக் கூடாது என்றும், சொன்னால் அவனுக்குப் பேராபத்து வரும் என்றும் தேவர்கள் எச்சரித்தனர். ஆனால், டான்டலஸோ மகா ஜீவ காருண்யம் வாய்ந்தவன். உலக மாந்தர் அனைவரும் அந்த ரகஸ்யங்களை அறிந்து, தேவர்களைப்போல இன்புற்று வாழ வேண்டுமென, அவன் விரும்பினன். அந்த ரகஸ்யங்களை உலகறியப் பகிரங்கம் செய்வதால், தான் ஒருவனுக்குத் தானே கஷ்டம்; மனித குலம் முழுவதுமே சுகப்படு மல்லவா?—இவ்வாறு அவன் நினைத்தான். ரகஸ்யங்களையும் உலகோருக்கு வெளிப்படுத்தி விட்டான்.

தேவர்கள் ஆத்திர மூண்டனர். டான்டலஸைப் பிடித்துக்கொண்டு போய், மகா குரூரமானதோர் தண்டனையும் விதித்தனர்.

நீர் இறைக்கும் எந்திரம் ஒன்றோடு, டான்டலஸைத் தேவர்கள் ஓர் சங்கிலியால் பிணைத்தனர். கிணற்றருகே ஓர் தொட்டியைக் கட்டினார்கள். அத்தொட்டிக்குக் கீழே ஒரு துவாரம் செய்து வைத்தார்கள். தொட்டியில் நீர் நிரம்பியவுடனே, அந்தத் துவாரம் தானகவே திறந்து, அதன் வழியே அவ்வளவு ஜலமும் கழிந்தோடி விடும்படி ஓர் தந்திரமும் செய்து வைத்தார்கள். நமது கிராமங்களில் ஏற்றச்சால் இல்லையா, அந்த மாதிரி ஏற்பாடு.

நீர் இறைக்கும் இயந்திரத்திலே கட்டுண்ட டான்டலஸுக்குத் தாகத்துக்குத் தண்ணீர் கொடாமல்



ஒலியைக் கேட்பதற்காகக் காதுக்குள்ளே அமைந்திருக்கும் உறுப்பு இது தான். இதன் இருபுறங்களிலும் வளைந்து வளைந்து சில குழாய்கள் இருக்கின்றனவே, அவை, நாம் ஆடி விழாமல் காப்பாற்றும் சமநிலைப் புலனாகும்.

தவிக்க விட்டார்கள். தண்ணீர் குடிக்கும் ஆசையால், டான்டலஸ் ஏற்றச்சாலை இழுத்துத் தொட்டியை நிரப்பினன். ஆனால், திரும்பி அவன் தொட்டியினருகே வந்து, எட்டி நீர் குடிக்க முயன்றபோது, தொட்டி ஜலம் பூராவும் கழிந்தோடி விட்டது.

‘வ. சு.’

சாகத்தின் கொடுமையால், மறுபடியும் மறுபடியும் டான்டலஸ் தொட்டியை நிரப்பினன். ஒவ்வொரு தடவையும், தொட்டி நீர் முழுவதும் அவன் குடிக்குமுன்பே கழிந்தோடி விட்டது. டான்டலஸ் எத்தனை யெத்தனையோ நாள் அப்படித் தண்ணீர் இறைத்தும், அவனுக்கு ஒரு சொட்டு ஜலமும் கிட்டாமல் தவித்துக் கொண்டேயிருந்தானும்.

டான்டலஸ் என்ன அறிவில்லாதவன? மகா வீரனன அவன் ஏன் இப்படித் திரும்பத் திரும்ப ஏமாந்தான்? ஆசை வெட்க மறியாது; அது அறிவையும் மயக்கிவிடும். புலன் இச்சைக்கு முன்னே, எப்பேர்ப்பட்ட கூரிய அறிவும மழுங்கித்தான் தீரும் என்பதைத்தான் இந்தச் சோகக் கதை சுட்டிக் காட்டுகிறது.

தாகத்தை உணர்த்துவது ஓர் தனிப் புலன். அந்தப் புலனிச்சைக்கு முன்னே, டான்டலஸின் அறிவுங்கூட மந்தப்பட்டு விட்டது. ‘தாகத்தை உணர்த்துவது ஓர் தனிப் புலனவது!’ என்று நீங்கள் ஆச்சர்யப்படக் கூடும். ஆம்; அது ஓர் தனிப் புலன்தானும். பஞ்சேந்திரியங்கள் என்று புலன்களை ஐந்தாக முன்காலத்தோர் கணக்கிட்டிருப்பது சரியல்லவாம்.

கண், வாய், மூக்கு, செவி, மெய் என்னும் ஐம்புலன்களும், பார்வை, உருசி, மணம், கேள்வி, ஸ்பர்சம் ஆகிய உணர்வுகளுக் குரிய புலன்கள் என்று முன்னையோர் எண்ணி வந்தார்கள். இந்த ஐந்து புலன்களைத் தவிர, மேலும் பல புலன்கள் இருப்பதாக, தற்கால விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். அவற்றைக் கவனியுங்கள் :

### தட்ப வெப்பப் புலன் :

கையைக் கன்னத்தில் வைத்துப் பாருங்கள்; குளிர்ச்சியை உணர்கிறது. காதில் வையுங்கள்; உஷ்ணத்தை உணர்கிறது. இதன் காரண மென்ன? கையின் சீதோஷ்ண நிலை, கன்னத்தின் குளிர் நிலைக்கும் காதின் உஷ்ண நிலைக்கும் ஊடே நடு நிலையில் உள்ளது. இதுதான் காரணம். நமது உடலின் மேல்பாகத்தில் மிகச் சிறிய ஓர் புள்ளியின் பரிமாணம் உள்ள பல இடங்கள் இருக்கின்றன. இவற்றில் உஷ்ணத்தை உணரக் கூடியவை 30,000 ஆகும்; குளிர்ச்சியை உணரக்கூடியவை 2,50,000 ஆகும்.

### சமநிலைப் புலன் :

குழந்தைப் பருவத்தில், நடக்க முயற்சித்தோம்; பலமுறை விழுந்தோம். நம்மைப் பார்த்து நமது பெற்றோர்கள் சிரித்தார்கள்; ஆனந்தம் கொண்டார்கள். இன்று நாம் கம்பீரமாக நடக்கிறோம்; ஒரு முறை கூடக் கீழே விழவில்லை. தெருவில் கல் இடறித் தடுமாற நேரிட்டாலும் சமாளித்துக்

கொண்டு விடுகிறோம். இவ்விதமாக நாம் கீழே விழாமல் நமது சரீரத்தின் நிலையைச் சமமாக இருக்கச் செய்வது இந்தப் புலன்தான். இதற்கோர் கருவி காதுக்கு உள்ளே இருக்கிறது. மழை காலங்களில் தோட்டங்களில் ஊர்ந்து வரும் நத்தையின் கூட்டை ஒத்திருக்கும் இதன் வடிவம். ஒருவன் காதிலே பலமான அறை விட்டால், அவன் சில நிமிஷங்கள் நிலை தவறித் தடுமாறுவான். இதன் காரணம் என்ன? நாம் கொடுத்த அறை காதின் உள் இருக்கும் சமநிலைப் புலன் கருவியைத் தாக்கி, அதை நிலைகலங்கச் செய்து விடுவதுதான் அந்தக் காரணம்.

### பசிப் புலன் :

'வயிறு பசிக்கிறது', 'வயிறு கிள்ளுகிறது', 'பசி குடலைத் தின்கிறது' என்ற பல வாக்கியங்களைக் கேள்விப் படுகிறோம். வயிறு பசியை உணர்த்தும் ஓர் புலனாக நம்முள் அமைந்திருக்கிறது. உலகத்தை மறந்த ஞானியையும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கின்ற புலவனையும் இப்புலன் ஆட்டி வைத்து விடுகின்றது. உடலுக்கு வேண்டிய போஷணையைக் கொடுக்க நினைவூட்டுவது, இந்தப் புலனே. வயிற்றின் தசைகள் சுருங்கும் பொழுதுதான் பசி உணர்ச்சி ஏற்படுகின்றது.

### தசைப் புலன் :

கடையில் சாமான் வாங்குகிறோம். சில சமயங்களில் நிறுக்காமல் சாமானைக் கை நிதானமாகக் கடைக்காரன் கட்டித் தருகிறான். நமக்குச் சந்தேகம் உண்டாகிறது. உடனே "நிறு" என்கிறோம். நிறுக்கிறான். எடை சரியாக இருக்கிறது. அதைக் கண்டு நாம் ஆச்சரியப்படுகிறோம். நிறுக்காமலே ஓர் சாமானைக் கையால் எடுத்துப் பார்த்துவிட்டு, இரண்டு பலம் என்று கூறிவிடுகிறான் கடைக்காரன். மற்றும் ஒரு சாமானை அஞ்சு பலம், பத்துப் பலம் என்றும் கூறிவிடுகிறான். இது எப்படி முடிகிறது? இது தசைப் புலன் உணர்ந்து செய்யும் வேலையே யாகும். நமது கை, ஒரு பொருளைத் தூக்கியதும், தசைகள், அச் செய்தியை உணர்ச்சி நரம்பின் மூலமாக மூளைக்கு அனுப்பிவிடுகின்றன. தசைகளில் ஏற்படும் அமுக்கத்தின் ஏற்றத் தாழ்வுகளை மூளை அறிந்து, பழக்கத்தால் நிதானம் செய்து நிறையைக் கூறிவிடுகிறது!

கண்கள் தூரத்திலுள்ள பொருள்களைப் பார்த்து, அவை இருக்கும் தூரங்களைக் கணக்கிட்டு விடுகின்றன. கண்களில் உள்ள தசைகள், பார்க்கும் பொருள்கள் உள்ள தூரத்துக்கு ஏற்றவாறு தாமாகவே சுருங்கியும் விரிந்தும் விடுகின்றன. இந்த விதமாகத் தசைகள் சுருங்கி விரிவதனாலேயே பொருள்களின் தூரங்களை நிதானித்து விடுகிறோம்.

குரல், குரல்வளையில் உள்ள தசைகள் ஆடுவதால் ஏற்படுகின்றது. ஓர் பாடகன் கீழ் ஸ்தாயியில் பாடிவிட்டு மேல் ஸ்தாயிக்குப் போகும் பொழுது எந்த அளவு குரலின் தசைகள் சுருங்கவேண்டுமென்று பழக்கத்தால் நிதானம் பெற்றிருக்கிறான். அந்த நிதானத்தைத் தெரிந்து கொண்டிருப்பவை குரல் வளையிலுள்ள இந்தத் தசைகளே யாகும்.

### நோவுப் புலன் :

அதிக வேலை செய்து ஒருவன் உடல் எல்லாம் நோகிறது என்கிறான். நோவை உணரும் புலன் இல்லாவிட்டால், நமது உடலை நாம் அளவுக்குமீறி வருத்திவிட நேரிடும். இந்தப் புலன் நமது உடல் நிலை எந்த இடத்தில் எப்படி இருக்கிறது என்பதை உணர்த்தி வருகிறது.

### தாகப் புலன் :

நமது இந்தியாவில், சிறப்பாக உஷ்ணம் மிகுந்த தென்னிந்தியாவில், எங்கும் கோடை காலங்களில் தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்து, தாகத்துக்கு ஜலம் வழங்கி வருகிறார்கள். இது ஒரு தர்மமாகக் கருதப்படுகிறது. ஒரு மனிதனைக் கொடியவன் என்று கூற ஓர் பழமொழிகூட உண்டு. 'தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடாத பாவி' என்று நாம் கூறுவதில்லையா? பாலைவனங்களில் ஒட்டகங்களில் ஏறிச் செல்பவர்கள் தண்ணீர் தட்டிய பொழுது தாகத்தைத் தீர்த்துக் கொள்ள, தாம் ஏறிவந்த ஒட்டகங்களையே கொன்று அவற்றின் வயிற்றிலுள்ள நீரைப் பருகுவார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறோம். தாகவிடாய் அவ்வளவு கொடியது. டான்டலஸ் கதையும் இதைத்தான் உணர்த்துகிறது. நா வறட்சியே தாக முணர்த்துகிற தாயினும், வாய் வழியாக ஜலம் பருகித்தான் தாகம் தீரு மென்பதில்லை. ரத்தக் குழாய் வழியாகத் திரவங்களை ஊசி மூலம் குத்தியேற்றியும் தாகத்தைத் தீர்க்கலாம்.

---

## பந்தில்லாப் 'பந்தாட்டம்'

தென் பசிபிக் சமுத்திரத்தின் நடுவே உள்ள சில தீவுகளில் பந்து இல்லாமல் ஓர் 'பந்தாட்டம்' விளையாடுகின்றனர். நம் ஊரில் காலால் பந்து அடித்து விளையாடும் 'புட்பால்' ஆட்டத்தைப் போல, கட்சிக்குப் பதினொரு மனிதர் வீதம் இரு கட்சிகளாய் நிற்பார்கள். ஒரு கட்சிக்காரன் எதிரியின்மீது நொண்டி அடித்துக் கொண்டு பாய்வான். பூமியில் படாத காலை எதிரியின் கால்மேல் வைத்து, எதிரியைத் தள்ளிவிட முயற்சிப்பான். எதிரி விழுந்துவிட்டால் அவன் விளையாடும் மனைக்கு வெளியே வரவேண்டும். இந்த விதமாகப் பதினொரு மனிதர்களும் விழுந்தால், ஓர் ஆட்டம் முடியும். விழுந்தவர் கட்சி தோற்றது; விழாதவர்கள் கட்சி ஜயித்தது. இதில் மத்தியஸ்தர்(ரெபரி) ஒருவர் கிடையாது. மணிக்கணக்காக இவ் விளையாட்டு நடந்துவரும். விளையாடுபவர்களைத் தள்ளிவிடுவது சுலபமல்ல. நிதானம் தவற மாட்டார்கள். அவ்வளவு பழகி இருக்கிறார்கள்.

# விமான யுத்தம்—'மாலடாவ் ரொட்டிக் கூடை'

லண்டனில் 'மாலடாவ் ரொட்டிக் கூடை' என்ற பரிகாசப் பெயருடைய விமானக் குண்டுகள் விழுவதாகச் சில செய்திகள் தினசரிகளில் சமீபத்தில் வந்தன அல்லவா, அந்தக் குண்டுகளின் சித்திரந் தான் பக்கத்திலே யிருப்பது. **'பிக்சர் போஸ்ட்'** என்ற லண்டன் பத்திரிகை இதனை வெளியிட்டுள்ளது. சித்திரத்தில் மூன்று குண்டுகள் இருக்கின்றன. இவை ஆறு அங்குல நீளமும் மூன்றடி சுற்றளவும் இருக்கின்றன. இவற்றின் பொய்த் தலைகள் அகன்று கொள்ளிகள் வெளிப்படுகின்றன. அவற்றில் இலக்கமிட்டுக் காட்டப்பட்டிருக்கும் இடங்களின் விளக்கம் பின் வருமாறு :—




(1) விமானத்தி லிருந்து எறிந்தவுடனே காணும் தோற்றம். (2) குண்டு. (3) பொய்த் தலை சுழலுகிறது. (4) மிகச் சக்தியுள்ள வெடிமருந்து. (5) பொய்த் தலையைக் கழற்றி விடும் விசை. (6) பொய்த் தலை. இதில்தான் கொள்ளிக் குண்டுகள் அடைக்கப்பட்டிருக்கின்றன. சுமார் நூறும் அதற்கு மேலும் கொள்ளிகள் இருக்கும். (7) பொய்த்தலையைக் கழற்றும் திருகாணி விசை குறிப்பிட்ட நேரத்தில் தளர்வதற்காக அமைந்துள்ள விசிறி. இது சுழன்று சுழன்று திருகாணி விசையைத் தளர்த்தி விடும். (8) பொய்த்தலை இரண்டாகப் பிளந்து, கொள்ளிக் குண்டுகளைச் சொரிகிறது. (9) கொள்ளிக் குண்டுகள் உதிர்கின்றன. (10) மற்றோர் வகை மூக்கு வைத்த குண்டு. இந்தக் குண்டு, எதன் மீதாவது பட்டால்தான், கொள்ளிக் குண்டுகள் வெளிப்படும்.

ருஷ்யாவிடம் கடன் வாங்கிக் கொண்டு இம்மாதிரி சில குண்டுகளை, லண்டனில் ஜெர்மன் விமானங்கள் வீசுகின்றன. இதே சமயம் பெர்லின் மீது, பிரிட்டிஷ் விமானங்கள், ராணுவ தர்மப்படி குண்டுகள் சொரிந்து வருகின்றனவாம். இங்கே விமானப் போரைப் பற்றிச் சில குறிப்புகள் தர விரும்புகிறோம்.

விமானங்களில் இரு வகை உண்டு : (1) Bomber என்று சொல்லப்படும் குண்டு விமானங்கள் ; (2) Fighter என்று சொல்லப்படும் சண்டை விமானங்கள். எதிரி பிரதேசங்களில் சென்று குண்டு வீசுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு அதற்கேற்றபடி கட்டப்படுவது குண்டு விமானம். எதிரியின் குண்டு விவானத்தைத் தாக்கிப் போரிட்டுத் துரத்துவதற்காகக் கட்டப்படுவது சண்டை விமானம். சில விமானங்கள் இரண்டு காரியங்களுக்கும் பயன்படும் படியும் கட்டப்படுவதுண்டு.

இன்னோர் ஆச்சர்ய ராணுவ விமானத்தையும் பிரிட்டிஷார் செய்திருப்பதாக 'நியூ எஜுகேட்டர்' அகராதி கூறுகிறது. இந்த விமானத்தை விமானியாருமில்லாமல், ரேடியோ மூலமே ஆகாசத்தில் ஓட்டி விடலாம். ஆனால் ஆளில்லாமலே ஆகாசத்தில் பறக்கக் கூடிய இந்த அதிசய விமானம் யுத்தத்தில் பெரிதும் உபயோகப்படுமா, உபயோகிக்கிறார்களா என்று தெரியவில்லை. இது பரிட்சார்த்த நிலையிலேதான் இருப்பதாய்த் தோன்றுகிறது.

குண்டு விமானங்களுக் குள்ளும் இரண்டு வித முண்டு : (1) பகலில் குண்டு வீசுபவை; (2) இரவில் குண்டு வீசுபவை. பகல் விமானங்கள், தங்கள் இருப்பிடத்திலிருந்து 50 முதல் 100 மைல் வரை சென்று, 12,000 அடி முதல் 20,000 அடி உயரம் வரை பறந்து குண்டுகள் வீசும். இரவு விமானங்களோ 2,000 மைலும் அதற்கு மேலும் சென்று 8,000 அடி முதல் 12,000 அடி உயரம் வரை பறந்து குண்டு வீசும். இந்தக் குண்டு விமானங்களை எதிர்க்க வழி கிடையாதா? அதற்குச் சில வழிகள் கையாளப் படுகின்றன.

விமானங்களைச் சுடக்கூடிய பீரங்கிகளைக் கொண்டு இவற்றைச் சுடுகிறார்கள். சண்டை விமானங்கள் வந்து இந்த விமானங்களுடன் போரிடுகின்றன. முக்கிய நகரங்களில், வலை போல் பல கம்பிகளில் புகைக் கூண்டுகளைக் கட்டி 12,000 அடி உயரத்தில் அந்தப் புகைக் கூண்டுகளைப் பறக்க விடுகின்றனர்; அந்தக் கம்பிகள் கண்ணுக்குத் தெரியமாட்டா வாகையால், எதிரியின் குண்டு விமானங்கள் அவற்றில் சிக்கிக் கீழே விழுந்து நாசமாகிவிடும். இந்த மூன்று முறைகளுக்குள்ளும் எதிரியின் குண்டு விமானங்களை நமது சண்டை

விமானங்களைக் கொண்டு தாக்கி விரட்டுவதுதான் மிகச் சிறந்த முறையாகும்.

முன்காலத்தி லென்றால் எதிரியின் விமானங்கள் தனித்தனியாய் வரும். அவற்றை நமது விமானங்களும் தனித் தனியாகவே எதிர்க்கும். ஒண்டிக் கொண்டி விமானச் சண்டை ஆகாயத்திலே பலமாய் நடக்கும். இறுதியில் ஒரு விமானம் நிலைகுலைந்து சாயும். இக் காலத்திலோ நிலைமை அடியோடு மாறி விட்டது. குறைந்தது மூன்று எதிரி விமானங்கள் 'V' என்ற உருவத்திலோ ஏணி உருவத்திலோ அணிவகுத்துத் தான் வரும். இந்த மூன்றில் ஒன்றை நமது விமானம் தாக்கினால், நமது விமானத்தின் வாலிலே மற்றோர் எதிரி விமானம் வந்து தாக்கும். அதன் வாலில் நம்முடைய விமானம் ஒன்று தாக்கும். இப்படியாக எதிரி விமானங்களும் நமது விமானங்களும் ஒன்றின் வாலை ஒன்று தாக்கி ஏக ரகளை செய்யும். சில சமயம் ஒரு கட்சியின் விமானங்கள், மறு கட்சியின் விமானங்களைவிடக் குறைவாயிருந்துவிடும். அப்போது, குறைந்த விமானங்கள் உள்ள கட்சியார், ஒன்றுக்குப்பின் ஒன்றாய்த் தங்கள் விமானங்களில் வட்ட வளையமாய்ச் சுற்றிச் சுற்றிப் பறந்துகொண்டிருப்பார்கள். மறு கட்சி விமானங்கள், இந்த வட்ட வளையமான வியூகத்தைத் தாக்குவது கஷ்டமாகும். ஏனெனில், இந்த வட்டத்தில் உள்ள ஒரு விமானத்தைத் தாக்கினால், பின்னாலேயே வரும் மற்றோர் விமானத்திடம் அகப்பட்டுக்கொள்ள நேரிடும். இந்த விமானச் சண்டைகள், கண்கொண்டு பார்க்கமுடியாத அவ்வளவு குரூரமா யிருக்கும்.

---

## வேகமாகப் படம் எடுக்கும் காமிரா

ஒரு செக்கண்டில் 1,20,000 படங்கள் எடுக்கக் கூடிய காமிரா ஒன்றை அமெரிக்காவில் செய்திருக்கின்றனர். இது உருளை வடிவத்தில் இருக்கிறது. வளைந்த பாகத்தில் வரிசையாக 10 துவாரங்கள் இருக்கின்றன. இந்த விதமான 100 வரிசைகள் அதைச் சுற்றிலும் இருக்கின்றன. இந்த உருளை, மின்சாரத்தின் உதவியால் இயங்கிச் சுழல்கிறது. ஒரு நிமிஷத்திற்கு 7200 தடவை சுழல்கின்றது. ஒவ்வொரு துவாரமும் கால் மில்லிமீட்டர் (மயிரிழையிலும் பாதி) குறுக்களவு கொண்டது. இதில் எடுக்கப்படும் படம் காலே அரைக்கால் அங்குலம் நீளமும் அதே அகலமும் உள்ளதாக இருக்கும். மின்சாரப் பரிசோதனைகளுக்கு உபயோகப்படுத்துவதற்காக இது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

---

# எமனுக்கு அழைப்பா?

(பிக்ஷு)

[இதோ கீழே இருக்கிறதே, இது ஓர் கவிதை. ஆம், கவிதைதான்; அருமையான கவிதையும் கூட.

இதைக் கேட்டவுடனே, சம்பிரதாயப் பண்டிதர்கள் சீறக்கூடும். "இது கவிதையானால், சீர் எங்கே? தளையெங்கே? எதுகையும் மோனையுந்தான் எங்கே மறைந்தன?" என்று அவர்கள் கேட்கவும் கூடும். பாரதியின் 'காட்சிகள்' கவிதை யில்லையா? வேத ரிக்குக்கள் கவிதை யில்லையா? வசன கவி யென்பது ஓர் புதுமை யில்லை. ஆயினும், இன்னும் வசன கவியென்றால், இலக்கணப் புலவர்களுக்கு மருட்சிதான்.

வால்ட் விட்மன் என்ற அமெரிக்கக் கவிஞரின், வசன கவிகளை ஆரம்பத்திலே பண்டிதர்கள் மிக மிகப் பழித்தார்கள். பின்னால், மகா கவி, தீர்க்கதரிசி, மகான் என்று பலவாறு அவர் புகழப்பட்டார்.

கவிதை யென்பது கருத்திலும், அக் கருத்தின் ஜீவ கதியோடு பிரவகிக்கும் சொற்கோவையிலும் தான் இருக்கிறது. அது வாஸ்தவம். ஆனால், கண்ணம்பாடி அணைபோல், சீர், தளைக் கட்டுப்பாட்டுக்கு அது உட்பட்டுத்தான் தீரவேண்டுமென்பதில்லை. அந்த அணையையும் உடைத்தெறியும் கவிதை வெள்ளம் வசனகவி. அதிலும், கருத்துக்குச் சுருதி போடும் ஓசை இனிமை உண்டு. உச்சரிக்கும் நாவு, கேட்கும் செவிகள், உணரும் கற்பனை--இவற்றின் பரிபக்குவந்தான் அதற்குச் சோதனை. நண்பர் ஸ்ரீ. பிக்ஷுவின் இந்தக் கவி, அந்தச் சோதனையில் முதல்தரமாய்த் தேறும் என்பது நமது நிச்சயம்.

— ஆசிரியர், சக்தி

வெப்பம் பொழிந்தது ;
வெம்பி வதங்கினேன்.
ஈரத்திற் கேங்கி,
வருணனை வருந்தினேன்.
கருணை பிறந்தது ;
மழை முகில் மிதந்தது.
நெஞ்சத்தில் குளுமையின்
ஊற்றுக் கண் விழித்தது....
அனல் பட்ட அறையினில்
நளிர் முகம் கண்டது.
எழிலோ டெறும்புப்
பட்டாளம் புகுந்தது.
பாச்சைகள் ஓடின ;
பல்லிகள் ஊர்ந்தன.
ஈசல்கள் எழுந்துமே
ஏறிப் பறந்தன.
சுவரெங்கும் ஈசல் ;
தரை யெங்கும் இறகு......
பதுங்கிய பல்லிகள்
ஈசல்மேல் பாய்ந்தன ;
சித்தத்தில் தூண்டில் முள்
சுறுக் கென்று தைத்தது.
ஈரத்திற் கேங்கினால்,
எமனுக் கழைப்பா!
இன்பத்தை நாடினால்
துன்பத்தின் அணைப்பா!

*பெண்கள் பார்லிமெண்டு :*

# சமஸ்தானங்களில் பெண்ணுரிமை

(எஸ். விசாலாக்ஷி)

சென்ற கூட்டத்தில் அக்கிராசனர் தெரிவித்தபடி, அடுத்த கூட்டத்தில் ஸ்ரீமதி சரோஜனி ஸ்ரீனிவாசன் இந்திய சுதேச சமஸ்தானங்களில் பெண்கள் ஓட்டுரிமை பெற்றதைக் குறித்துப் பேசும்போது கூறியதாவது :

"திருவனந்தபுரம் சமஸ்தானம், தற்போது ஒரு தினிசாயிருந்தாலும், ஏற்கனவே அநேக விஷயங்களில் பிற சுதேச சமஸ்தானங்களுக்கும் பிரிட்டிஷ் இந்தியாவுக்குமே வழிகாட்டியாக இருந்திருக்கிறது. 1920-ஆம் ஆண்டின் முடிவில் சட்டசபை யங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைத் திருவனந்தபுரம் மகாராஜா தமது சமஸ்தானத்து ஸ்திரீகளுக்கு வழங்கினர். அவருடைய உதாரணத்தைப் பின்பற்றி ஜாலாவார் சமஸ்தானதிபதியும் ஸ்திரீகளுக்கு ஓட்டுரிமையளித்தார்.

"சென்னைச்சட்டசபை 1921-ஆம் ஆண்டில் முதல் முதலாகக் கூடிய போது, காலஞ்சென்ற திவான் பகதூர் ஸ்ரீ. கிருஷ்ண நாயர், சென்னைச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கும் உரிமையை ஸ்திரீகளும் புருஷர்களுடன் சமத்துவமாக அனுபவிக்க வேண்டுமென்று ஓர் தீர்மானத்தைக் கொணர்ந்தார். தீர்மானம் விவாதத்திற்கு வந்த பொழுது, ஒரு சில முஸ்லீம் அங்கத்தினரைத் தவிர, ஏனைய அங்கத்தினரனைவரும் பெண்மக்களுக்கு ஓட்டுரிமை அவசியமென்பதையே வற்புறுத்தினர். இதன் விளைவாக, தீர்மானம் அமோகமான ஓட்டுகள் பெற்று வெற்றியடைந்தது. சென்னை இராஜதானியும் இந்திய மாகாணங்களில் ஸ்திரீகளின் தேவையைப் பூர்த்தி செய்த முதல் மாகாணமாய் விளங்கிற்று. டாக்டர் முத்துலக்ஷுமியம்மாள் இதன் வாயிலாகச் சட்டசபையை யடைந்து பெண்களின் முன்னேற்றத்துக்கு இன்றியமையாதவையாகிய தேவதாசி மசோதா முதலிய சட்டங்களைக் கொணர்ந்து இயற்றுவித்தார்.

"1922-ஆம் ௵ மைசூர்ச் சட்டசபை, ஸ்திரீகள் ஓட்டுரிமைச் சட்டத்தை ஏகமனதாக நிறைவேற்றிற்று. அதே வருஷம் அக்டோபர் மாதத்தில் சட்டசபைக்கு நடந்த தேர்தலில் பெண்மக்களும் ஓட்டுப் போட்டார்கள்.

"திருவனந்தபுரம், கொச்சி, மகாத்மா சத்தியாக்கிரகத்தால் உலகப் பிரசித்தி பெற்ற ராஜ்கோட் ஆகிய சமஸ்தானங்கள் ஸ்திரீகளுக்கு ஓட்டுரிமை வழங்கித் தங்கள் முற்போக்கான நோக்கங்களை வெளியிட்டன. வைதீக ஆசாரத்தில் முன்னணியில் நிற்கும் திருவாங்கூர் சமஸ்தானம் ஹரிஜனங்களுக்குக் கோயில்களைத் திறந்து விடும்படி உத்திரவு செய்து இந்திய மக்களின் நன்றிக்குப் பாத்திரமான சம்பவம், பெண்மக்களுக்கு ஓட்டுரிமை வழங்கிய அஸ்திவாரத்திலிருந்துதான் ஆரம்பமாகிறதென்றால் மிகையாகாது."

இவ்வாறு சுருக்கமாகப் பேசி முடித்தாள் பிரசங்கியம்மாள். பிறகு, பார்லிமெண்டுக்கு அதிகாரிகளைக் கூட்டம் நியமித்தது. ஸ்ரீமதி சுந்தரி சுப்பிரமணியம் கனம் ஸ்பீக்கராகவும், மீனாக்ஷி ரங்கநாதம் டெபுடி ஸ்பீக்கராகவும், சரோஜினி ஸ்ரீனிவாசன் பிரதம மந்திரியாகவும் அதிக எதிர்ப்பின்றி நியமிக்கப்பட்டார்கள். ஸ்ரீமதி மீனாக்ஷி சதாசிவம் எதிர்க்கட்சித் தலைவராகவும் மிஸ் சந்தணமேரி ஜோஸப் உப தலைவராகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். பிரதம மந்திரிக்கு மற்ற மந்திரிகளைத் தேர்ந்தெடுக்க அடுத்த கூட்டம்வரை அவகாசம் கொடுக்கப்பட்டது.

---

## மூவரில் யார் பெரியவர் ?

1917-ஆம் வருஷத்தில், மாஜி கெய்சரின் கீர்த்தி நிகரற்றது போல விளங்கிற்று. லெனின், பிரம்மாண்டமான ருஷியப் புரட்சியை நடத்திச் சென்ற காட்சி, அபூர்வமான காட்சி. அதே சமயத்தில், லோக மான்ய திலகர், இந்தியாவில், சுயாட்சிச் சங்கங்களை நிறுவ ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்.

"இந்த மூன்று பேர்களில் யார் பெரியவர் ?" என்று, இளம்பிராயத்தவர்களான எங்களில் சிலர், யோகி அரவிந்தரைக் கேட்டோம். அரவிந்தர், ஒரு விநாடி கூட யோசிக்கவில்லை. "லோகமான்ய திலகர்தான் உயர்ந்தவர்" என்று வாய் நிறையச் சொன்னார்.

"அவர் இந்தியர், இந்திய சுயராஜ்யத்துக்காக உங்களோடு சேர்ந்து உழைத்தவர் என்ற காரணத்துக்காக, திலகர் பெரியவர் என்று நீங்கள் சொல்லுகிறீர்களா ?" என்று நாங்கள் குத்தலாக அரவிந்தரைக் கேட்டோம். அவர் சிரித்தார்.

"ஒரு பொருளை மதிப்பிடுவதற்கு ஒரு திட்டம், ஒரு முறை உண்டு. ஒரு திட்டத்தை எப்படிக் கோலமுடியும் ? இலட்சியத்தைக் கருதித்தான், முறையை வகுக்க முடியும்; திட்டத்தைக் கோல முடியும். உயர்ந்தது, தாழ்ந்தது என்று சொல்லுவது எல்லாம், பெரும்பாலும் இலட்சியத்தையே பொறுத்திருக்கிறது" என்று அரவிந்தர் சொன்னார்.

"சரி ! அப்படியானால், எந்த இலட்சியத்தைக் கொண்டு, திலகர் பெரியவர் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள் ?" என்றோம்.

"ஏற்கனவே ஜெர்மனியில் இருந்த யுத்த இயந்திரத்தைப் பக்குவப்படுத்தி, வலுப்படுத்தின பெருமை, கெய்சரைச் சேர்ந்தது. சுதந்திர வீறுகொண்டு எழுந்த மக்களுக்கிடையே வேலைசெய்து, திட்டம் அமைத்து, புரட்சியை ஒழுங்கெல்லைக்குள் கட்டுப்படுத்தி, விசித்திரமான அரசியல் கட்டிடத்தை ஆக்கிய பெருமை, லெனினைச் சேர்ந்தது. இவை பிரமாதமல்ல.

"சுமார் இரண்டாயிரம் வருஷங்களாக, வாழ்க்கையில் பிடித்தமில்லாமல், நடைப்பிணங்களாக நாட்களைக் கழித்து வந்த இந்தியர்களுக்குப் புத்துயிர் அளித்து, அவர்களைத் தலை நிமிர்ந்து நடக்கும்படியாகச் செய்த அருமையான பெருமை லோக மான்யரைச் சேர்ந்தது. உயிரைக் கொடுப்பவன் உயர்ந்தவன். அழகையோ, ஒழுங்கையோ, வலிமையையோ கொடுப்பவன் அவ்வளவு உயர்ந்தவன் அல்ல. ஆகவே, இந்த இலட்சியத்தைக்கொண்டு பார்க்கையில், திலகரே, மூன்று பேருக்குள்ளும் உயர்ந்தவர் என்று நான் மதிக்கிறேன்" என்றார் அரவிந்தர்.

குத்தலாகக் கேட்ட கேள்வியின் பயனாக, நாங்கள் குதூகலம் அடைந்தோம்.

—வ. ரா. ('தினமணி'யில்)

# புதுமைக்கவி பாரதி

(தி. ஜ. ர.)

‘பாட்டுத் திறத்தாலே-இவ்வையத்தைப்
பாலித் திடவேணும்’

**என்று ஆசைப்படும் பாரதியார்,** அந்தச் சக்தியைப் பெற்றிருந்தார் என்றே சொல்ல வேண்டும். அதற்கு உதாரணமாக, மாஜி ‘ஹிந்து’ ஆசிரியர் காலஞ்சென்ற ஸ்ரீ எ. அரங்கசாமி ஐயங்கார் சொல்லும் ஒரு சம்பவத்தைக் கூறலாம்.

பாரதியாரின் சகோதரன் ஸ்ரீ ஸி. விசுவநாத ஐயர், பாரதியாரையும் அவர் நூல்களையும் பற்றி ஆங்கிலத்தில் எழுதியுள்ள தோர் நூலுக்கு ஸ்ரீ ஐயங்கார் அளித்துள்ள முன்னுரையில் பின்வருமாறு அந்த நிகழ்ச்சியை வர்ணிக்கிறார் :—

“ஒரு பெரிய மிதவாதத் தலைவரைப் பாரதியார் அடிக்கடி பத்திரிகைகளிலே, மிகவும் குரூரமாய்த் தாக்கி வந்தார். அதே மிதவாதத் தலைவர், பாரதி பாட்டை அவர் வீட்டிலே பாரதியே பாடிக் கேட்க வேண்டுமென்ற ‘ஆசை வலைக்குள்’—அந்த மிதவாதியின் சொந்த வர்ணனை இது—விழுந்து விட்டார். பாரதியார் சமீபத்தில் பாடிய இன்னிசைக் கீதங்களைக் கேட்டபோது, அந்த மிதவாதி அந்த கானத்தின் மந்திர சக்திக்குக் கட்டுப்பட்ட கைதியாகிவிட்டார். அந்நாள் இப்போது எனக்கு நினைவு வருகிறது. நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் நந்தனுக்கும் வேதியருக்கும் நடந்த சம்பாஷணை ரூபமாகவுள்ள அந்தக் கீர்த்திவாய்ந்த மெட்டிலே, விஞ்ச் என்ற வெள்ளைக்காரருக்கும் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளைக்கும், பிரபலமானதொரு ஜாமீன் வழக்கில் நடந்த சம்பாஷணையைத் தாம் பாடலாய் இசைத்திருந்த கீதத்தைப் பாரதியார் பாடியபோது, அந்த மிதவாதியின் மனமாற்றம் சம்பூர்ணமாகி, அந்த நிமிஷத்திலே பூர்ண தேசியவாதி யாகிவிட்டார்!”

‘**கவிகளின்** அழகையறிய, **கவிகளையே** படிக்க வேண்டும்; கவி**களைப்பற்றி** யல்ல’ என்று கூறுவார்கள். கலைகள் அனைத்துக்குமே, மிக முக்கியமாக இலக்கியத்துக்கு, இந்தச் சூத்திரம் பொருந்தும். பாரதியாரைப் பற்றி நான் எத்தனையெழுதினாலும், யார் என்ன வர்ணித்தாலும் நீங்கள் ஒன்றும் புரிந்துகொள்ள முடியாது. ‘பாரதியைப் படியுங்கள்’ என்றுதான் நான் உங்களுக்கு யோசனை கூற முடியும்.

பாரதியைப் பற்றி யாராரோ என்ன என்னவோ சொன்னார்கள்; என்ன என்னவோ எழுதினார்கள். அவர் மகா கவியா, இல்லையா என்ற ‘மகத்தான’ விவாதத்தையும் சிலர் நடத்தினார்கள். அதைப்பற்றியெல்லாம் தீர்ப்புக் கூற நான் தகுதியற்றவன். ஆனால், பாரதியார் விஷயத்தில், என் சொந்தத் தவறொன்றைப் பகிரங்கமாய்த் தெரிவிப்பதன் மூலம் பிராயச்சித்தம் செய்துகொண்டு, உங்களுக்கும் ஓர் எச்சரிக்கை செய்யவே, இங்கு அதைப் பற்றிப் பிரஸ்தாபித்தேன்.

பாரதியார் நூல்களை நன்கு படிக்காமலே, பிறர் அபிப்பிராயங்களையெல்லாம் கேட்டுக் கேட்டு, அவற்றால் பல குருட்டு அபிப்பிராயங்களுக்கு ஆளாகி அவற்றை நானும் பிறரிடம் பரப்பி வந்ததுண்டு.

> ‘புதுமைக்கவி பாரதியார்’ என்று தி. ஜ. ர. எழுதியுள்ள ஒரு நூலின் ஒரு அத்தியாயம் இந்தக் கட்டுரை. பாரதியாரின் சரித்திரச் சுருக்கமும், பாரதியார் குணதிசயம், அவர் கவிதை கட்டுரைகளின் நயங்களை விளக்கிய கட்டுரைகளும் ஆகிய இரண்டு பாகங்கள் கொண்ட அந்த நூலை, சென்னை, மைலாப்பூர், அல்லயன்ஸ் கம்பெனியார் அச்சிட்டு வருகிறார்கள். சில தினங்களில் வெளிவரும்.

“பாரதியாரின் கவிகள் நன்றாய்த்தான் இருக்கின்றன; ஆனால், வசனம் சுகமில்லை” என்பார் ஒருவர். “ஞான ரதமும் குயிலுந்தான் அற்புதம். மற்றவை சத்தில்லாதவை” என்பார் இன்னொருவர் “கண்ணன் பாட்டு?” என்று ஓர் அனுபந்தத்தைச் சேர்ப்பார் மற்றொருவர். “தேசீய கீதம் எதுவும் நெடுநாள் நில்லாது. மற்றவற்றில் ஏதோ ஒன்றிரண்டு மிகுந்து நிற்கும்” என்று தாட்சண்யம் காட்டுவார் வேறொருவர். ‘பாரதி தேசீய கவி. அவர் பெருமையெல்லாம் சுதேச கீதங்கள்தாம்” என்று மறுத்துரைப்பார் மறுபடியும் ஒரு புத்திமான். இந்த அபிப்பிராயக் கந்திரகூளத்திலே சிக்கிச் சுழன்று கொண்டிருந்த எனக்கு இப்போதுதான் விடுதலை கிடைத்தது. சென்ற சிலகாலமாக, பாரதியார் நூல்களை, திறந்த மனத்துடன் படிக்கும் பாக்கியம் எனக்குக் கிட்டியது. பாரதியின் வசன நடையாகட்டும், கவிதை யாகட்டும், எந்தக் கவியை, கட்டுரையை, கதையை எடுத்தாலும் சரி, தெளிவுற்ற தேனின் மதுரமொன்றை நான் அனுபவிக்கிறேன். **அவற்றிலே ஒரு தனித்த மோஹன சக்தி இருக்கிறது.**

ஆங்கிலக் கவிகளின் சாயை அவர் கவிகளிலே காணப்படுகிறது. ஆனால், நாட்டின் பழைய ஐதீகங்களின் அஸ்திவாரமும் சிறப்பியல்பும் மேதையும் அவற்றில் ஊடுருவி உறைகின்றன. ஷெல்லி, கீட்ஸ் என்ற இரு ஆங்கிலக் கவிகளிடமுந்தான் பாரதிக்கு அதிகப் பிரியமாம். ‘ஷெல்லீயன் கில்டு’ என்ற ஒரு சங்கம்கூடச் சிறுவயதிலே தமது கிராமத்தில் நிறுவி, நண்பர்களுக்கு ஷெல்லியின் பாடல்களை அவர் வியாக்கியானம் செய்துவந்தாராம். ஆயினும், பாரதியாருக்கும் ஷெல்லி, கீட்ஸ் ஆகிய இரு கவிகளுக்கும் இருக்கும் ஒற்றுமைகளை விட வேற்றுமையே அதிகம். ஒரு வகையில், வேர்ட்ஸ்வொர்த் என்ற ஆங்கிலக் கவி திலகத்துடன் அதிக ஒற்றுமை அவருக் கிருப்பதாய்க் கூறலாம் ஷெல்லி, கீட்ஸின் நடை மெருகும், உணர்ச்சி வேகமும், வேர்ட்ஸ்வொர்த்தின் அமைதியும்

# கவிஞன் கேட்கும் வரம்

பாரதியின் உன்னதமான கவிகளில் ஒன்று 'காணி நிலம் வேண்டும்' என்று பரா சக்தியை வரங்கேட்கும் பாடலாகும். இன்ப வாழ்வின் மனோ ராஜ்ய சித்திரம் அது. ஆனால், மேகமண்டலங்களில் கட்டும் மனக்கோட்டையன்று; அசாத்தியக் கனவுமன்று. உலக பாக்கியத்தையும், சௌந்தரியத்தையும் நுகரும் ஆனந்த வாழ்வே, அவரது கற்பனை யுலகம்.

காணி நிலம் வேண்டும்; அங்கே அழகும் சுகமும் சூழ்ந்ததோர் மாளிகை வேண்டும்; பக்கத்திலே யொரு பத்தினிப் பெண் வேண்டும்; தங்கள் கூட்டு இன்பத்திலே இன்பக் கவிதைகள் பொழிந்து, இவ்வையத்தையே பாலித்திட வேணும்—இது கவிஞனின் ஆசை. என்ன அற்புதமான கற்பனை! இந்தக் கவிதையின் கருத்தை, சைத்ரிகர் 'ஆர்யா' ஓர் சித்திரமாகத் தீட்டி யிருப்பதை அட்டையிலே காணலாம்:

1. காணி நிலம் வேண்டும்,—பராசக்தி
காணி நிலம் வேண்டும்;—அங்கு
தூணி லழகியதாய்—நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய்—அந்தக்
காணி நிலத்திடையே—ஓர் மாளிகை
கட்டித் தரவேண்டும்;—அங்கு
கேணியருகினிலே—தென்னைமரம்
கீற்று மிள நீரும்,

2. பத்துப் பனிரண்டு—தென்னைமரம்
பக்கத்திலே வேணும்;—நல்ல
முத்துச் சுடர் போலே—நிலாவொளி
முன்பு வர வேணும்;—அங்கு
கத்துங் குயிலோசை—சற்றே வந்து
காதிற்பட வேணும்;—என்றன்
சித்த மகிழ்ந்திடவே—நன்றாயிளந்
தென்றல் வரவேணும்.

3. பாட்டுக் கலந்திடவே—அங்கே யொரு
பத்தினிப் பெண் வேணும்;—எங்கள்
கூட்டுக் களியினிலே—கவிதைகள்
கொண்டுதர வேணும்;—அந்தக்
காட்டு வெளியினிலே,—அம்மா, நின்றன்
காவலுற வேணும்;—என்றன்
பாட்டுத் திறத்தாலே—இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்.

---



கம்பீரமும் குதூகல நிறைவும் பாரதி பாடல்களிலே செறிந்திருக்கின்றன.

கருத்தொருமை, ஓசை இனிமை, சொல் நயம், அமைப்பழகு ஆகிய இலக்கிய லட்சணங்கள் யாவும் அமைந்திருப்பவை பாரதியாரின் நூல்கள்.

அவரது வசன நடையும் சரி, கவிதை நடையும் சரி, மிக மிக எளிய, சரளமான நடை. கடினமான தமிழ்ச்சொல் அல்லது வாக்கியம் ஒன்றைக்கூட, அவர் எழுத்துக்களிலே காணமுடியாது. எளிய நடை என்பதால், சிலரைப்போல், உயிரற்ற, வர்ணமில்லாத, கர்ண கடூர நடையைப் பாரதியார் எழுதவில்லை. பாரதியின் நடை மகா எளியது; ஆனால், தெவிட்டா இனிமை பயப்பது.

பாரதியின் எழுத்துக்களிலே ஜீவ வேகம் பொங்கி நிற்கிறது; வாழ்வை உயர்விக்கும் ஒரு வேதாந்தமும், தேசீய வெள்ளக் கொந்தளிப்பின் எதிரொலியும், ஒளியையும் நிழலையும் சேர்த்துப் பின்னிய மனோலய சித்திரங்களும் ஒன்றோடொன்று இழைந்து நிற்கின்றன. வருங்காலத் தமிழிலக்கிய வானிலே, துருவ நட்சத்திரம்போல் விளங்கப் போகிறவர் நமது பாரதியே.

---

*குழந்தைகள் அறிவு:*

# வரிகள்

## (லியோ டால்ஸ்டாய்)

மணியக்காரர்
கிருஷ்கா : ஏழு வயதுச் சிறுமி.

**மணியக்காரர் :** உள்ளே யாரும் இல்லையா ?

**கிருஷ்கா :** அம்மா, பசு மாட்டைத் தேடிக்கொண்டு போயிருக்கிறாள். அப்பா, எஜமான் வீட்டுத் தோட்டத்துக்குப் போயிருக்கிறார்.

**மணிய :** சரிதான் ; மணியக்காரர் வந்துவிட்டுப் போனார் என்று உன் அம்மாளிடம் சொல். இது மூன்றாந் தடவை; ஞாயிற்றுக் கிழமைக்குள் வரிப் பணத்தைக் கொண்டுவந்து தராவிட்டால், பசுமாட்டைப் பிடித்துக் கொண்டு போய்விடுவேன் என்று அவளிடம் சொல்.

**கிருஷ் :** எங்கள் பசு மாட்டைக் கொண்டுபோய் விடுவீரா ? நீர் என்ன திருடனா ? நீர் அதைப் பிடிக்க வந்தால், நாங்கள் அதை விடமாட்டோம்.

**மணிய :** (புன்னகையுடன்) நீ எவ்வளவு புத்திசாலிச் சிறுமியா யிருக்கிறாய்! உன் பெயர் என்ன ?

**கிருஷ் :** கிருஷ்கா.

**மணிய :** சரி, கிருஷ்கா ! நீ நல்ல புத்திசாலிப் பெண். ஆனால், நான் சொல்வதைக் கேள். நான் திருடன் அல்ல; என்றாலும் உங்கள் பசுவைக் கொண்டுபோய் விடுவேன் என்று உன் அம்மாளிடம் சொல்.

**கிருஷ் :** நீர் திருடன் இல்லாவிட்டால்,ஏன் எங்கள் பசுவைக் கொண்டுபோக வேண்டும் ?

**மணிய :** ஏனென்றால், சட்டப்படி செலுத்தவேண்டிய வரியைச் செலுத்த வேண்டும். வரிப் பணத்துக்காக, நான் பசுவைப் பிடித்துக் கொண்டு போய் விடுவேன்.

**கிருஷ் :** வரி யென்றால் என்ன ?

**மணிய :** என்ன சாமர்த்தியமான பெண்ணா யிருக்கிறாய்! வரி என்றால் என்னவா? வரி என்றால், ஜார் போடும் உத்திரவுப்படி ஜனங்கள் பணம் செலுத்த வேண்டும். அதுதான் வரி.

**கிருஷ் :** யாருக்கு ?

**மணிய :** ஏன், ஜாருக்குத்தான் ! அப்புறம் அந்தப் பணம் எப்படிச் செலவாக வேண்டும் என்று அவர் தீர்மானிப்பார்.

**கிருஷ் :** ஆனால், ஜார் என்ன ஏழையா ? நாம்தான் ஏழைகள் ; நம்மிடம் இருந்து அவர் ஏன் வரிகள் வாங்குகிறார் ?

**மணிய :** அட அசட்டுப் பெண்ணே ! பணத்தை அவர் தன் சொந்தத்துக்கு எடுத்துக் கொள்ள அல்ல. நமக்காகத்தான், நமது தேவைகளுக்காகத்தான், அவருக்குப் பணம் அவசியமா யிருக்கிறது. உத்தியோகஸ்தர்களுக்கும் ராணுவத்துக்கும் கல்விக்கும் செலவழிப்பது நமது நன்மைக்காகவே யல்லவா ?

**கிருஷ் :** எங்கள் பசுவை நீர் பிடித்துக் கொண்டு போனால் எங்களுக்கு என்ன நன்மை ? அதனால் எங்களுக்கு ஒரு நன்மையு மில்லை.

**மணிய :** உனக்கு வயசான பிறகு, அது உனக்குத் தெரியும். நான் சொன்னதை மட்டில் ஞாபகமாய் அம்மாவிடம் தெரிவி.



**கிருஷ் :** இந்தப் பிதற்றலையெல்லாம் அம்மாவிடம் நான் சொல்லமாட்டேன். உமக்கும் ஜாருக்கும் ஏதாவது தேவையானால் அதை நீங்களே செய்து கொள்ளுங்கள் ; எங்களுக்குத் தேவையானதை நாங்களே செய்து கொள்ளுகிறோம்.

**மணிய :** ஏ அப்பாடா ! இந்தப் பெண் வளர்ந்து பெரியவளாகும்போது கொடிய விஷப் பாம்பாய்த் தான் இருப்பாள்.

---

### பல நாடுகளில் சினிமா

| நாடு : | எண்ணிக்கை |
|---|---|
| இந்தியா | 900 |
| ஆப்கானிஸ்தானம் | 1 |
| பெல்ஜியம் | 1000 |
| பிரேஜில் | 1246 |
| பல்கேரியா | 100 |
| எகிப்து | 101 |
| பிரிட்டன் | 5150 |
| ஜெர்மனி | 3302 |
| ஆஸ்டிரேலியா | 1483 |
| இத்தாலி | 4800 |
| ஜப்பான் | 2003 |
| பிரான்சு | 4800 |
| ஐக்கிய அமெரிக்கா | 18200 |

| கண்டம் : | |
|---|---|
| அமெரிக்கா | 22456 |
| ஐரோப்பா | 66876 |
| ஆப்பிரிக்கா | 676 |
| கிழக்குத் தேசங்கள் | 5244 |
| உலகம் முழுதும் | 97344 |

# கனவை நனவாக்கிய கிராமம்

(சங்கு சுப்ரஹ்மணியன்)

“ஏழு லட்சம் கிராமங்கள் நிறைந்த இந்த நாட்டிலே....” என்று அநேக பிரசங்க மேடைகளில் கேட்டிருக்கிறோம். கிராமங்கள் நாளுக்கு நாள் அடைந்து வரும் சீர்கேட்டைப் பற்றியே அந்தப் பிரசங்கிகள் எடுத்துக் கூறுவார்கள்.

அந்த ஏழு லட்சம் கிராமங்களிலே ‘வங்கனப்பள்ளி’ என்ற கிராமமும் ஒன்று. சித்தூருக்கு ஐந்தாறு மைல் தூரத்திலுள்ள அந்தக் கிராமத்தைப் பார்ப்பதற்காக நாலைந்து ரூபாய் வீதம் செலவழித்துக் கொண்டு நாங்கள் நாலு பேர் போய் வந்தோ மென்றால், அந்தக் கிர்ராமத்தில் ஏதோ விசேஷ மிருக்க வேண்டு மல்லவா?

அந்தக் கிராமத்தின் வளர்ச்சியைப் பற்றிப் பாராட்டி சமீபத்தில் மகாத்மாஜியின் ‘ஹரிஜன்’ பத்திரிகையில் ஒரு கட்டுரையும் வெளிவந்ததை வாசகர் சிலர் கவனித்திருக்கக் கூடும்.

இந்தத் தேசத்தின் கிராம வாழ்வை உயர்த்த வேண்டும், அழகாக்க வேண்டும் என்றெல்லாம் தேசபக்தர்கள் கனவுகள் கற்பித்துக்கொண் டிருக்கிறோமே அந்தக் கனவு ஓரளவு நனவாகி யிருக்கிறது வங்கனப்பள்ளி கிராமத்தில். ஆதலால்தான் அதற்கு இவ்வளவு கீர்த்தி கிடைத்திருக்கிறது.

இக் கிராமம், மொத்தம் 60 அல்லது 70 வீடுகள்தான். ஆனால் மிக மிக அகலமான வீதிகள். 40 அடி அகலத்துக்குக் குறைந்த வீதியே யில்லை. ராஜாஜி வீதி, கபார்க்கான் வீதி, சரோஜினி வீதி, ஜவாஹர்லால் வீதி என்று தலைவர்களின் திருநாமங்களைக் கொண்ட அந்தத் தெருக்களிலே போகும் போதே ஒரு ஆனந்த முண்டாயிற்று.

எப்படி இந்த அகலமான ஒரே நெடுக்கா யுள்ள வீதிகள் ஏற்பட்டன? அதுவே ஒரு நல்ல கதை. இந்த ஊரை மாடல் கிராமமாக ஆக்கி, தெருக்களைச் சுத்தம் செய்வதெனச் சில கிராம ஊழியர்கள் விரும்பினர். கோணலும் மாணலுமாகக் கிராம வீதிகளில் வீடுகளைப் பார்க்கின்றோமே அப்படித்தான் மூன்று வருஷத்துக்கு முன்னே இருந்ததாம் வங்கனப்பள்ளியிலும். ஆனால் தங்கள் ஊரை அழகுபடுத்திக் கொள்ள அந்தக் கிராமவாசிகள் விரும்பினார்கள்; வீட்டுக்கு முன்னால் கட்டப்பட்டிருக்கும் ஆளோடிகள், தாழ்வாரங்கள் இவற்றை இடித்துத் தெருவை விஸ்தரித்துக் கொள்ள இசைந்தனர். சிலர் தங்கள் வீட்டு முகப்புச் சுவரையே இடித்துப் போடவும் இசைந்தனர். ஒரு வீட்டுச் சமையலறை வெகு காலமாக அனாவசியமாக நீட்டிக் கொண்டிருந்தது. அந்த வீதி அகலமாவதற்குத் தமது சமையலறையையே அந்த வீட்டுக்காரர் இடித்துத் தந்தாரென்றால், அந்தத் தியாகம் சாதாரணமானதா?

இப்படியாக வீதியை யெல்லாம் அகல மாக்கினார்கள். வீதிகளை மண் கொட்டிக் கல்லைக் கொட்டி நிரவுகின்ற காரியத்தினையும் அந்தக் கிராமவாசிகளே செய்து கொண்டார்கள். உடனேயே கிர்ராமத்துக்கு ஒரு தனி யழகு ஏற்பட்டு விட்டதை உணர்ந்தார்கள். உற்சாகம் இன்னும் அதிகரித்தது. அப்போது இந்த மாகாணத்தின் பிரதம மந்திரியா யிருந்த ராஜாஜியின் பெயரை ஏற்று ‘ராஜாஜி மாடல் ஸெண்டர்’ என்று பெயர் சூட்டிக் கொண்டு வேறு சில அபிவிருத்திகளையும் செய்து கொள்ள முற்பட்டனர்.

இந்தக் கிராமத்தின் அழகைக் கண்டு சித்தூரைச் சுற்றியுள்ள வேறு பன்னிரண்டு கிராமங்களும் அபிவிருத்தித் துறைகளை அனுஷ்டிக்க ஆரம்பித்தன; இப்போது அங்கெல்லாம் ஆச்சரியமான முன்னேற்றங்களைக் காண்கின்றோம்.

ஒரு ஸெண்டரிலே சுமார் 112 மைல் தூரம் கப்பி ரஸ்தா ஒன்றை அந்தக் கிராமவாசிகளே உழைத்துப் போட்டுக் கொண்டிருக்கிறார்களென்றால், அது ஆச்சரிய மல்லவா?

இந்தக் கிராமங்களிலே சாலையோரங்களில் புதிய புதிய மரங்கள் நடப்பட்டிருக்கின்றன. ஒரு கிராமத்திலே ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் ஒரு அரசங் கன்றை நட்டிருக்கிறார். அதை வெகு பிரியமாக ஒரு குடும்பம் தண்ணீர் விட்டுக் காப்பாற்றி வருகிறது.

அகில பாரத சர்க்கா சங்கப் பிரமுகர் ஸ்ரீ சங்கர்லால் பாங்கர் வேறு சில செடிகளை நட்டிருக்கிறார். ஸ்ரீ பாங்கரின் பெயரால் ஒரு ‘ஸெண்டரே’ நிறுவப்பட்டிருப்பதும் குறிப்பிடத் தக்கது. புதிதாக நடப்பட்டுள்ள சாலையோரச் செடிகளெல்லாம் அந்தந்தக் கிராமவாசிகளால் அன்புடன் வளர்க்கப்பட்டு வருகின்றன. இன்னும் பத்து வருஷம் கழித்து மேற்படி கிராம வீதிகளில் செல்வதே ஒரு ஆனந்தமாயிருக்கு மென்பதில் ஐயமில்லை.

மேற்படி கிராமங்களில் வீதியோரங்களில் ஏற்கனவே வளர்ந்து நிற்கும் மரங்களிலும், தெருவோரத்திலுள்ள சுவர்களிலும், ‘அன்பே தெய்வம்’, ‘ஈகையே நலம் தரும்’ என்பன போன்ற ஆப்த வாக்கியங்கள் பலவற்றைக் கிராமவாசிகள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

கிராமத்தை அழகுபடுத்துவதோடு மட்டும் வங்கனப்பள்ளிக்காரர்

நின்று விடவில்லை. அநேகமாக ஒவ்வொரு வீட்டிலும் ஒரு ராட்டையோ இரண்டு ராட்டைகளோ சுழன்று கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு வீட்டுக்காரனும் விவசாய காரியங்களைக் கவனிப்பதோடு ஒரு குடிசைத் தொழிலையும் கைக்கொண்டு நடத்தி வருகிறான்.

சில வீடுகளிலே ஈச்சநார் திரிக்கிறார்கள். சில வீடுகளிலே கூடை முறம் முடைவதில் மும்முரமாயிருக்கிறார்கள். பாய் முடைதல் சிலர் தொழில். அந்நிய நாடுகளினின்றும் குழந்தை யுணவுகள் டப்பிகளில் அடைத்து வருகின்றனவே, அவற்றிற்கிணையான 'கேழ்வரகு மால்ட் மாவு' தயாரித்து விற்பனைக்கு அனுப்புவதை இரண்டு வீட்டார் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். ராகி பிஸ்கட், சோள பிஸ்கட் முதலியவற்றையும் சில வீடுகளில் தயாரித்து விற்பனைக்கு அனுப்புகிறார்கள். இரண்டு மூன்று வீடுகளிலே தேனீக் கூடுகள் வைத்துத் தேன் தயாரித்து விற்பனைக்குப் புட்டி புட்டியாக அனுப்புகிறார்கள். அந்தத் தேனீக்களோடு போட்டி போட்டுக்கொண்டு அந்தக் கிராமவாசிகள் உழைக்கிறார்களென்றால், அது மிகையன்று. எவ்வளவு சுறுசுறுப்பு உணர்ச்சி!

தானியங்களைக் குத்த மில்களுக்கு இந்தக் கிராமத்தார் அனுப்புவதேயில்லை. நெல் குத்தும் ஏற்றம் வீட்டுக்கு வீடு வைக்கப்பட்டிருக்கிறது. கையில் உலக்கை தாங்கி நெல்லைக் குத்துவதைவிடச் சுலபமாக இவ்வூர்ப் பெண்மணிகள் இந்த ஏற்ற உலக்கையால் குத்திவிடுகிறார்கள்.

வங்கனப்பள்ளி கிராமத்திலே கதருக்கும் இராட்டினத்துக்கும் உள்ள மதிப்பை மகாத்மாஜி வந்து காண்பாரானால், பரமானந்த மடைவார். அந்தச் சின்ன ஊரிலே ஒரு சின்ன ஆரம்பக்கலாசாலை. அதிலே சுமார் 60 மாணவிகள். அவர்கள் மட்டும் போன வருஷம் நூல் நூற்று 368 கஜம் துணி நெய்திருக்கிறார்கள். அந்தக் குழந்தைகள் அன்றாடம் தாங்கள் நூற்ற நூலைச் சிப்பம் சிப்பமாகக் கட்டிவைப்பதை நாங்கள் பார்க்க நேர்ந்தது. என்ன சந்தோஷமாக அக்குழந்தைகள் வேலை செய்துகொண்டிருந்தன!

**வ**ங்கனப்பள்ளியின் வீதிகளிலே ஒரு எச்சிலிலையோ ஒரு கடிதாசோ பறந்து கொண்டிருக்கவில்லை. ஒவ்வொரு வீதியின் கோடியிலும் ஒரு குப்பைக்குழி வெட்டியிருக்கிறார்கள். ஒவ்வொரு பெண்மணியும் தன் வீட்டுக் குப்பைகளை அந்தந்தக் குழியிலேதான் கொண்டு போய்க் கொட்டுகிறாள். இந்தக் குப்பையை யெல்லாம் எருவாக ஏலம் போட்டு அதனால் கிடைக்கும் பணத்தைக் கிராமப் பொதுக் காரியங்களுக்கு உபயோகப் படுத்துகிறார்களாம்.

கிராமப் பொதுவாக ஒரு பெரிய தோட்டம் காப்பாற்றப் பட்டு வருகிறது. அங்கே ஸ்நானம் செய்யக் கேணிகள் கிராம மக்களாலேயே கட்டப்பட்டிருக்கின்றன. அந்த ஜல மெல்லாம் தோட்டத்திற்குப் பாயுமாறு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நாங்கள் போனபோது இரண்டு பெரிய பானைகளிலே வெந்நீர் காய்ந்து கொண்டிருந்தது. கிராமத்துச் சிறுவர் அங்கே குளித்துக்கொண்டிருந்தனர். எந்தப் பையனும் அந்தத் தோட்டத்திலே போய்க் குளித்துவிட்டு வரலாமாம்.

ஊர்க் குழந்தைகள்—ஹரிஜனங்களுள்பட—சுத்தமாக அன்றாடம் குளித்து வாழவேண்டுமென்பதில், கிராமவாசிகள் எல்லோரும் சிரத்தை காட்டி வருவது குறிப்பிடத் தக்கது.

வெகு அழகாயிருந்த சில வீடுகளில் நுழைந்து அவை யிருந்த சுத்தத்தையும் நேர்த்தியையும் நாங்கள் பாராட்டி விட்டு வெளிவந்த பின்புதான், அவை ஹரிஜனங்களின் வீடுகள் என்று எங்களுக்குத் தெரிய வந்தது. வீடுதோறும் ஒரு காந்திஜி படமோ வேறு எவராவது ஒரு தலைவர் படமோ வைத்து அலங்கரிக்கப் பட்டிருப்பதைக் காணும்போது, தேச சேவகனுக்கு ஆனந்த முண்டாகாது போகுமா?

நமது நாட்டின் ஏழு லட்சம் கிராமங்களும் இந்தக் கிராமங்களைப் போல அழகுடையனவாக ஆக முடியாதா? முடியும்? ஆனால் இந்த வங்கனப்பள்ளி கிராமவாசிகள் எப்படிப் பொதுவாழ்க்கைத் தியாகங்கள் செய்தார்களோ அப்படி ஒவ்வொரு கிராமத்திலும் செய்வதென்று ஆங்காங்குள்ள ஒவ்வொரு குடும்பமும் சங்கல்பம் செய்து கொள்ள வெண்டும். மேற்படி கிராமங்களிலே யுள்ள ஊழியர்கள் போல ஊழியர்களும் ஏற்பட வேண்டும். இந்தத் தியாக புத்தி நாட்டிலே பரவி விட்டால், எந்தக் கனவைத்தான் நாம் நனவாக்க முடியாது?

---

## காலனுக்கு 10 லட்சம் மைல்!

"ஒரு காலனுக்குப் பத்துலட்சம் மைல் உங்கள் காரை ஓடச்செய்யும் 'பெட்ரோல்' எங்களிட மிருக்கிறது" என்று யாராவது விளம்பரம் செய்தால் நம்மால் நம்ப முடியாதுதான்.

ஆனால், இவ்விதமான அபார சக்தி தரும் ஓர் பொருளை, கூரி என்னும் மாது கண்டுபிடித்திருக்கிறாள்; இதன் பெயர் போலோனியம் என்பதாகும். இது சூரியனைப்போல் தன்னிடமிருந்து ஒளிக்கதிர்களை வீசுகின்றது. அக்கதிர்கள் மிக்க சக்தி கொடுக்கக்கூடியவையாக இருக்கின்றன.

இப்பொருளை மோட்டாரின் தீப்பொறிகளை உண்டாக்கும் 'பிளக்' என்பதில் உபயோகப்படுத்திப் பார்த்திருக்கிறார்கள். ஆனால், சுமார் இரண்டரை ரூபாய் எடையுள்ள போலோனியத்தின் விலை 4,00,000 பவுன் ஆகிறதாம்!

*உலக மேதாவிகள் :*

# ஜெர்மன் குயில்: மொஜார்டு

(ஆனந்தன்)

உலக மேதாவிகளில் **மொஜார்டு** ஒருவன். அவனை '**ஜெர்மன் குயில்**' என்பர்; ஐரோப்பிய சங்கீதத்தின் அருளூற்று என்பர்.

ஜெர்மனியில் **ஸால்ஸ்பர்க்** என்னும் ஊரில் **லீபோல்டு** என்னும் பிடில் வித்வான் இருந்தார்; அவர் அறிவாளி, இசைப்புலவர்; உள்ளூர் ஆர்ச்சி பிஷப்புக்குச் சங்கீதப் பணி செய்பவர். அவருக்கு ஒரு மகள், ஒரு மகன். மகள் பெயர் **மேரி**; மகனே நமது **உல்ப்காங் மொஜார்டு**. தந்தை, மகளுக்குப் பியானோ சொல்லித் தந்தார். குழந்தை மொஜார்டு அதைக் கூர்ந்து கவனிப்பான்; அக்காள் வாசித்ததும் தானும் பியானோ மெட்டுகளை அழுத்துவான். "சேட்டை பண்ணாதே" என்றால் கேட்க மாட்டான்; தேன் மலரைச் சுற்றும் வண்டுபோல் அவன் பியானோவைச் சுற்றிக் கொண்டிருப்பான்.

ஒருநாள் சாயங்காலம், லீபோல்டு தமது நண்பர் ஹேக்னருடன் வீட்டுக்கு வந்தான். உள்ளிருந்து இனிய கீதம் வந்து செவியைக் கொஞ்சியது. "நண்பரே, எனது பெண் மேரி இனிமையாகப் பாடுகிறாள். வாரும், கேட்போம்" என்று உள்ளே வந்தார். அங்கே மேரி யில்லை. பின் யார்? நாலுவயது விசுக்கான் மொஜார்டு மஹா வித்வான்போல் பியானோ மெட்டுகளை அழுத்திக் கொண்டிருந்தான்.

"அட பயலே! அங்கென்ன செய்கிறாய்?"

"கேளப்பா; வாசிக்கிறேன்."

"உனக்கென்ன தெரியும்? சுண்டைக்காயா....இறங்கு கீழே...."

"இல்லையப்பா. நான் வாசிப்பதை எழுது; அப்புறம் தெரியும்."

குழந்தை வாசித்தான்; தந்தை இறகு பேனாவை மையில் தோய்த்து ஸ்வர லிபியில் எழுதினர். பாட்டு முடிந்தது; மூக்கில் விரலை வைத்தார். "தெய்வப் பிறப்பு! நான்கு வயதுப் பையனுக்கு இவ்வளவு இனிய பாட்டு எப்படி வந்தது? இது அருளின் அற்புதம்!" என்று நண்பருடன் வியந்தார். அன்றுமுதல் தந்தை தமது குழந்தைக்கு நாதவித்தை கற்பித்தார். மொஜார்டுக்கு, எல்லாம் பழைய பாடம் போலிருந்தது. தந்தை பல்லாண்டுகள் கற்றதைப் பிள்ளை ஒரே ஆண்டில் கற்றான். மறு ஆண்டில் தகப்பனை மிஞ்சிப் போனான். ஆறு வயதில் மொஜார்டு தானே பாட்டுக்கட்டித் தானே மெட்டமைத்து ஸ்வரம் போட்டுப் பாடினான்; வாசித்தான். ஊரெல்லாம் இச்சிறுவன் பாட்டை வியந்தது.

உள்ளூர் ஆர்ச்சி பிஷப் பையனைப் பரிசோதித்தார்; மலையுபதேசம் ஒன்றைக் குறித்துக் கீர்த்தனம் பாடச் சொன்னார். அவ்வாறே பாடிப் பிரார்த்தனைக் காலத்தில் அரங்கேற்றினான் மொஜார்டு. சபை முழுதும் பரவசமானது.

தந்தை தமது மேதாவிச் சிறுவனைக் கூட்டிக்கொண்டு ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்தார். சென்ற ஊர்களிலெல்லாம் இச்சிறுவன் பாட்டைக் கேட்டு ஜனங்கள் மோகித்துப் போனார்கள்.

1762-ஆம் ஆண்டு **மூனிக்கிலும் வியன்னாவிலும்** மொஜார்டின் இசை விருந்து நடந்தது. வியன்னா அரச சபையினர் இக்குழந்தையின் பாட்டைக் கேட்டு மெய்ம்மறந்தனர். அவ்வூர் அரசி இக்குழந்தையை மடிமேல் எடுத்துவைத்து முத்தமிட்டாள். அவளருகே இருந்த மேரி அன்டோனெட் (இவளே பிற்காலம் பிரெஞ்சு ராணியாகிப் புரட்சியில் தூக்குமேடை யேறினவள்) மொஜார்டைத் தன் மடியில் வைத்துக் கொஞ்சிக் குலாவினாள். "நான் பெரியவனானதும் உன்னை மணம் புரிவேன்" என்று அன்டோனெட் இடம் இவ் இசைச் சிறுவன் சொன்னான்! இருவருக்கும் அவ்வளவு அன்புண்டானது.

பிரான்ஸில் வெர்ஸேல்ஸ் அரண்மனையில் மொஜார்டின் கச்சேரி நடந்தது. லூயி அரசனும் அரசியும் பரவசமாகக் கேட்டு மெச்சினர்; அரசி இச் சிறுவனைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு உணவூட்டினாள். பிரெஞ்சுக்காரர் மொஜார்டைத் தலையில் தூக்கிவைத்துக் கொண்டு கொண்டாடினர்.

லண்டனில் மூன்றாம் ஜார்ஜும் ராணியும் சங்கீதப் பிரியர்கள். ஒரு நாள் அரண்மனை சங்கீத மாளிகையில் பெரிய சபை கூடியது; இரண்டு பியானோக்கள் அங்கிருந்தன. விளக்கணைந்தது; ஒரு பியானோவில் ஒருவர் வாசித்தார்; சற்று நேரம் கழித்து மற்றொரு பியானோவிலிருந்து இனிய நாத அலைகள் எழுந்து வீசின; அந்த அலை வெள்ளத்தில் சபையோர் மனம் நீந்தத் தொடங்கியது. "இப்படி வாசிப்பவன் யார்!" என்று எல்லாரும் வியந்தனர். இருட்டில் ஆள் தெரியவில்லை. திடீரென்று இப்பியானோ ஆள், முதல் பியானோக்காரனை நோக்கி "**நீ கிளமெண்டி**தான் (Climenti)" என்றான். 'ஆம்; நீ **மொஜார்டு**தான்" என்றான் கிளமெண்டி. "இருட்டில் வாசித்தாலும் மொஜார்டின் இசை அதற்குரிய ஒளியை வீசும்" என்றனர் சபையோர். விளக்குப் போட்டனர்; பிறகு நள்ளிரவு மட்டும் மொஜார்டும், கிளமெண்டியும் சபை மகிழ நாதவிருந்தளித்தனர். இங்கிலாந்தில் மொஜார்டின் புகழ் உச்சநிலை பெற்றது. அப்போது அவனுக்கு ஒன்பதே வயதுதான்.

பதின்மூன்றாம் வயதில் மொஜார்டு ரோமில் கச்சேரி நடத்தினான். ரோம் மன்னர் அவனை இளவரசன் போல் நடத்தினர். ரோம் சங்கீத புரி; அதை அதிசயிக்க வைத்தான் மொஜார்டு. வாட்டிகன் சர்ச்சில் போப் தமக்கே உரிய ஒரு இனிய பாசுரம் பாடி வந்தார். அதை யாராலும் அபினயிக்க முடியாது;

அப்படி அபினயித்து வெளியே பாடவும் கூடாது. 'மீறினால் ஜாதிப் பிரஷ்டம்' என்று அவர் உத்தர விட்டிருந்தார். மொஜார்டு அப் பாசுரத்தை இரண்டுமுறை கேட்டான். உடனே அதே மாதிரி தானும் பாடிப் பொதுவில் அரங்கேற்றினான். "போப்பின் ஆணையை மீறினான் சிறுவன்; விழும் தண்டனை" என்றனர் பலர். கேட்டார் போப். "இப்படிப்பட்ட மேதாவியை நாம் வெகு மதிக்க வேண்டும், தண்டிக்கக் கூடாது" என்றார். மறுநாளே பெரிய சபை கூட்டி மொஜார்டின் பாட்டை அரங்கேற்றி மெச்சி, அவனுக்குச் 'சொர்ண ஈட்டி வீரன்' (Order of the Golden Spur) என்ற வீர விருதளித்தார்.

ஆஸ்திரிய மன்னர், மொஜார்டு பாடிய "டான் ஜுவான்" என்னும் கதைப்பாட்டைக் கேட்டுச் 'சபாஷ்' என்று மெச்சினார்; மொஜார்டைத் தம்முடன் இருத்தி அருந்தினார். பிரபுக்கள் பலர் உடனருந்தினர்; அவர்களுக்கு நீண்ட பட்டமுண்டு; பட்டங்களைச் சொல்லியே அவர்களைக் குறிப்பிடவேண்டும். மொஜார்டுக்குப் பட்டம் பிடிக்காது. அவன் எல்லாரையும் தனக்குச் சமானமாக எண்ணிப் பெயர் சொல்லி யழைத்தே பேசினான். இது பலருக்கு வெறுப்பாயிருந்தது. அவர்கள் அரசனிடம் "இந்தச் சிறுபயல் எங்கள் பட்ட விருதுகளை மதியாமல் பெயர் சொல்லிக் கூப்பிடுகிறானே! நமது தளகர்த்தர்களுக்கு அதனால் மனக்கசப்பு ஏற்பட்டுள்ளது" என்று புகார் சொன்னார்கள். அரசன், "மொஜார்டு இசையரசன். நான் தினம் ஒரு தளகர்த்தனை உண்டாக்க முடியும்; ஒரு மொஜார்டை உண்டாக்கமுடியாது" என்று அவனது அருமை பெருமைகளை எடுத்து விளக்கிச் சமாதானம் செய்தார்.

தான் சென்ற ஊர்களில் வழங்கும் இசைகளை யெல்லாம் மொஜார்டு கற்றுக் கலையை நாளும் வளர்த்தான். அவன் மற்றப் புலவர் கலைத்திறனைக் கண்டு பொறாமை கொள்ளாமல் அவர்களிடம் உள்ள நயங்களைப் பயின்று தனதாக்கிக் கொண்டான். அவன் நண்பருடன் பேசும்போதும் விளையாடும் போதும், இடையே சீழ்க்கை யடிப்பான்; இனிய கீதம் உதிக்கும். உடனே தனியே சென்று அதை எழுதிப் பாடுவான்; பியானோவில் வாசிப்பான். பன்னிரண்டு வயதில் மொஜார்டு தன் ஊர் அரச குருவின் ஆஸ்தான வித்வானானான். பதவிதான் பெரிது; சம்பளம் மாதம் ஒரு பவுன் ஆறு ஷில்லிங்கே தான்

மொஜார்டின் பிற்கால வாழ்க்கையில் துயரம் குடிகொண்டது. அவனை அபிமானித்த ஆர்ச்சி பிஷப் இறந்தார். அடுத்தவர் மொஜார்டை அவ்வளவாக விரும்பவில்லை; கடுமையாக வேலை வாங்கிக் குறைவான சம்பளமே தந்தார். 'வியன்னாவில் போய்ப் பொதுவில் வாசிக்கக் கூடா'தென்று கட்டுப் படுத்தினார்.

இக் கட்டுப்பாடு புலவனுக்குப் பிடிக்கவில்லை. 24-ஆம் வயதில் மொஜார்டு மூனிக் அரச விருந்தில் ஒரு அற்புதமான கீதம் பாடினான். "இதைப்போன்ற கீதம் நான் கேட்டதே யில்லை; உன் பாட்டு அற்புதம்" என்று மெச்சி அரசர் வெகுமானித்தார். ஊருக்கு வந்ததும் "நீ எப்படி அங்கே போய் வாசிக்கலாம்?" என்று மொஜார்டின் எஜமானாகிய ஆர்ச்சி பிஷப் கண்டித்துத் தம் வீட்டு வேலையாட்களுடன் அமர்த்திச் சோறு போட்டார். மறுமுறை மொஜார்டு வியன்னாவுக்கே சென்று பாடி அரசரின் சன்மானம் பெற்று வந்தான். ஆர்ச்சி பிஷப் கடுங்கோபம் கொண்டு "என் வாசல்படியை மிதிக்காதே; போ வெளியே" என்று புலவனைக் காலினால் எற்றி விரட்டினார். மொஜார்டு "உன் வேலை தேவையில்லை" என்று உதறியெறிந்து வியன்னா சென்று பாட்டு வாத்தியாராகத் தொழில் செய்து பிழைத்தான். அது, கலைப் புலமை, பிரபுக்களுக்கு ஆட்பட்டிருந்த காலம். மொஜார்டு ஆர்ச்சி பிஷப் கட்டளையை மீறியது சிலருக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் அவன் பாட்டை வியந்தனர், நடையை வெறுத்தனர்; உதவி மறுத்தனர்.

மொஜார்டு பரம ஏழையாக வாழ்ந்தான்; ஒரு எளிய பெண்ணை மணந்தான். மழை காலம்; வீட்டில் உணவிராது, கணப்பிராது. இருவரும் ஆடிப் பாடுவர்; "நடனமாடினால் உடம்பில் சூடு பிறக்கும்; கணப்புச் செலவு லாபம்" என்பான் புலவன். பணம் வந்தால் அவன் அன்றே செலவழித்து விடுவான். கேட்ட பேருக் கெல்லாம் அள்ளித் தருவான். இளமையில் ஈட்டிய பொருளெல்லாம் அப்படியே அவன் ஈந்து இழந்தான். வறுமை அவன் உடலை வாட்டியது, மனத்தை யன்று. மனம் இசை வெள்ளத்தில் நீந்தியது; பாட்டில் கவலை கரைந்தது. ஒரு நாள் நண்பனொருவன் ஒரு சரமகவி பாடச் சொன்னான். தனது முழுத் திறமையையும் ஊன்றி மொஜார்டு அக்கவியைப் புனைந்தான்; மறுநாளே கொடிய காய்ச்சல் வந்தது. கவி பூர்த்தியாக வில்லை; மொஜார்டின் உலக வாழ்க்கை பூர்த்தியானது. அப்போது அவன் வயது முப்பத்தைந்து.

---

## உலகில் பெரிய காதணி

ஹைனன் என்ற தீவில் உள்ள பெண்கள் உலகிலேயே மிகப் பெரிய, மிகக் கனமான காதணிகளை அணிந்து கொள்வார்களாம். அவை செம்பு எனும் உலோகத்தால் செய்யப்பட்டவை. ஒவ்வொன்றின் குறுக்களவும் ஒரு அடி இருக்கும். 40 அல்லது 60 கற்கள் பதிக்கப்பட்ட ஒரு காதணி 10 பவுண்டு எடையுள்ளது. காதணி பெரியதா யிருப்பது ஆச்சரியமல்ல; அதை எப்படித்தான் அவர்கள் அணிந்து கொள்கிறார்களோ? அதுதான் ஆச்சரியம்.



# பறித்த பூக்கள்

## அரண்மனைச் செலவு

ஜனங்களின் நன்மைக்காகத் தண்டுவது வரி. ஆனல், இந்திய சமஸ்தானங்களில் அந்தப் பணம் செலவழிக்கப்படும் விபரீத விகிதங்களை 'ஜோதி' எடுத்துக் காட்டுகிறது :

இந்தியாவில் சுமார் 600 சுதேச சமஸ்தானங்கள் இருக்கின்றன. இந்தியாவின் மொத்த விஸ்தீரணத்தில் மூன்றில் ஒரு பங்கு விஸ்தீரணமுள்ள பிரதேசம் சுதேச சமஸ்தானங்கள். இந்தியாவின் மொத்த ஜனத் தொகையில் நான்கில் ஒரு பங்கினர் இந்தச் சமஸ்தானங்களில் தான் வசிக்கின்றனர். சமஸ்தாஞதிபதிகளில் சிலர், தங்களுடைய பிரஜைகளின் நன்மைக்காக எவ்வளவு தொகை செலவழிக்கிறூர்கள் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமா? இரண்டு உதாரணங்கள் பாருங்கள். பிக்கானீர் சமஸ்தானத்தின் மொத்த வருமானத்தில் 100க்கு $1\frac{1}{2}$ விகிதம் ஜனங்களின் வைத்திய வசதிக்கும், $13\frac{3}{10}$ விகிதம் கல்விக்கும், $32\frac{1}{2}$ விகிதம் அரண்மனைச் செலவுகளுக்கும் செலவழிக்கப் படுகின்றது. காஷ்மீர் சமஸ்தானத்தில், 100க்கு $3\frac{1}{2}$ விகிதம் ஜனங்களின் வைத்திய வசதிக்கும், $2\frac{2}{10}$ விகிதம் விவசாய வசதிக்கும், 19 விகிதம் சமஸ்தானப் படைக்கும், 16 விகிதம் அரண்மனைச் செலவுகளுக்கும் செலவழிக்கப் படுகின்றது!

## பிரயாண இன்பம்

பிரயாண சுகத்தை நாம் ஒவ்வொருவரும் பல சமயங்களில் அனுபவித் திருப்போம். ஆனல், அது பற்றி ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன், 'லோகோபகாரி' யில் கூறும் பின்வரும் அழகிய கருத்துக்கள், நம்மில் எத்தனை பேருக்குத் தோன்றியிருக்கும்? அவர் எழுதுகிறூர் :

பிரயாணம் என்றூலே எனக்குப் ஜபத்தியம். டிக்கட்டை வாங்கிக் கொண்டு, மூட்டை முடிச்சுத் தொல்லையின்றி ரயிலில் ஏறி, ஜன்னலோரத்து இடத்தில் உட்கார்ந்து கொண்டுவிட்டால் போதும்—வாழ்க்கைப் போரின் சிறிய குழப்பங்கள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்!

பிரயாணம் ஒரு போதை—இலக்கியத்தைப் போலவும் சங்கீதத்தைப் போலவும். எல்லாச் சுகங்களையும் ஒருங்கே அளிக்கும் நிகாற்ற லாகிரி அது. ஓமர்க் கையாம் எழுதினன் : "இங்கே, இந்த மா நிழலில் ஒரு ரொட்டித்துண்டு, ஒரு சாராயக்குப்பி, ஒரு காவியப் புத்தகம், (காதலியை நோக்கி) பக்கத்தில் பாட நீ—இதெல்லாம் மட்டும் இருந்தால்போதும்; இந்த வஞந்திரம் வானுலகாகிவிடும்!"

நானும் சொல்வேன் : "மூன்றூம் வகுப்பு வண்டி ஜன்னலண்டை இடம்; பக்கத்தில் கூஜா ஜலம், வெற்றிலை பாக்கு; அடுத்த கம்பார்ட்மெண்டில் சிற்றுண்டிச்சாலை இருந்தால் போதும்; கோடிக்கரை அல்ல—உலகத்தின் கோடி வரையில்கூட ரயிலில் போவேன்!" எண்ணிப் பார்த்தால் என்னென்ன அனுபவம் என்கிறீர்கள்?

ஆனல், இதெல்லாம் கூட அவ்வளவாகச் சுற்றுப் பிரயாணத்தின் இன்பமன்று ஏதோ ஒரு ஆனந்தம், ஆகாயத்தில் புறு முழுகிப் பறப்பதில் கொள்ளும் உணர்ச்சி போல, பிரயாண வேகத்திலே சிட்டுக்குருவிபோலக் கவலையின்றி ஈடுபட்டு மிதந்து செல்லும் ஓர் இன்பம்—அது தனிதான்; சந்தேகமில்லை.

## அவலட்சண வர்ணனை

பெண்கள் வம்பளந்தால், கவிகள் தோற்றுப் போகும் வர்ணனையைக் காணலாம். ஸ்ரீ சுந்தா என்பவர் 'ஆனந்தவிகட'னில் எழுதியுள்ள ஒரு கற்பனைச் சம்பாஷணையைப் பாருங்கள் :

கோபத்தின் காரணமாகச் சாமுத்திரிகா லட்சணங்களை எடுத்துக் காட்டுவதைத் தவிர, பொறுமை காரணமாகவும் எடுத்துக் காட்டுவது உண்டு. இதிலும் இலக்கண இலக்கிய நயங்களைக் காணலாம்.

"அவளை எல்லாரும் அழகு அழகு என்று சொல்லறூளே? அவள் காதைப் பார்த்தாயா, சுளகு மாதிரி" என்று ஒருத்தி ஆரம்பிக்கிறூள்.

"அந்தச் சுளகுக் காதுக்கு வைரத்தோடு வேறே!" என்று மேற்படியாளின் தோழி ஒத்துப் பாடுகிறூள்.

"ஐயோடி! அவளோட கண்ணைப் பார்த்தாயா, ஆந்தைக் கண்ணு மாதிரி!"

"அதுக்கு மை வேறே இட்டுண்டு மினுக்கறூள்!"

"நன்ஞச் சொன்னே! அவளோட சோனிக் கழுத்துக்குக் கல் அட்டியல் இல்லாமல் இசையாதாம்!"

"உடம்பெல்லாம் ஓர் அசட்டுப் பருமன் பெருத்துண்டு..."

"வாய் வேறே, காது வரைக்கும் நீண்டிருக்கு."

"ஆமாம், வாயாடறத்துக்குச் சௌகரியமாய் இருக்கணும் இல்லையோ!"

## மோர்ப் பாட்டு

ஆய்ச்சியர் கையிலே ஜலமே மோராகிவிடும் விந்தையைப் பற்றி, பின்வரும் கேலிச் சித்திரம் 'லோகோபகாரி'யில் வெளியாகியிருக்கிறது :

கவிராயர் வீட்டு வாசல் யுத்தகளமாகி விட்டது.

ஒரு புறம் கவிராயர் மனைவி ஒருத்தியாகவே நின்று யுத்தத்தைத் திறமையாக நடத்திக்கொண் டிருக்கிறாள். எதிரிகள், மோர் கொணர்ந்த இரண்டு ஆய்ச்சியர்கள்.

இரண்டு கட்சிக்காரரையும் பட்ச பாதமில்லாமல் விசாரித்தார் கவிராயர். ஆய்ச்சியர் இருவரும் மோரிலே நீர் சேர்க்கப்படவில்லை யென்று வாதித்தார்கள். மனைவியோ நீர்தான் அதிகமாகச் சேர்க்கப்பட் டிருக்கிற தென்று சாதித்தாள்.

கவிராயர் மோரைப் பார்த்தார்; சிரித்தார். ஆ! ஆ! மோரிலே நீர் சேரவில்லை யென்று ஆய்ச்சியர் கூறுவது உண்மைதான்! ஆனால் நீரிலே மோர் சில துளிகளாவது சேரவில்லை யென்று எவ்வாறு துணிதல் கூடும்?

கவிராயர் சிரித்தார். அது ஒரு பாட்டாகச் சுழித்து வந்தது :

காரென்று பேர் படைத்தாய்,
ககனத் துறும் போது!
நீரென்று பேர் படைத்தாய்,
நீணிலத்தில் வீழ்ந்த தற்பின்!
வாரொன்று மென்மயில் நேர்
ஆய்ச்சியர் கைவந்த தற்பின்
மோரென்றும் பேர் படைத்தாய்!
முப்பேரும் பெற்றாயே!

“வானத்திலிருந்தபோது, ‘நீ கார்’, அதாவது ‘மேகம்’ என்று பேர் படைத்தாய். நிலத்தில் விழுந்தபின் ‘நீர்’ என்று பேர் படைத்தாய். மயில் போல் நிற்கும் இப்பேர்ப்பட்ட ஆய்ச்சியர் கை வந்தபின், அந்தக் கை விசேஷத்தால் ‘மோர்’ எனறும் பேர் படைத்தாய். ஆச்சரியம்! ஆச்சரியம்!! ஆச்சரியம்!!! மோர் என்பது ஒன்றா, உன் பெயர்? ஒன்று, இரண்டு, மூன்று அல்லவா? கார், நீர், மோர் என்னும் முப்பேரும் பெற்று முழுப் பெருமையோடு விளங்கும் உன் மகிமையை என்னென்று புகழ்வது! என்னென்று பாடுவது!” என்று குதூகலப்படுகிறார்.

## வாசனை ஊட்டிய விளம்பரங்கள்

அமெரிக்காவில் வாசனை மோகம், ஓர் விசித்திர வழியிலே பாய்ந்திருப்பதை, ‘குமரன்’ எடுத்துக் காட்டுகிறது :

இப்போது அமெரிக்காவில் விளம்பரம் வாசனை பிடிக்கிறது. ‘துல்சா டிரிபியுன்’ என்ற பத்திரிகை, மையுடன் ஆப்பிள் ‘பிளாசம்’ என்ற வாசனைத் திரவியத்தைக் கலந்து தனது விளம்பரங்களை அச்சிட்டது. அந்த வாசனைப் பொருளின் விற்பனை ஏறிற்று. ‘சிக்காகோ டிரிபியுன்’ பத்திரிகை, தேசியப் பூந்தோட்டக்காரர்கள் மகாநாட்டை வரவேற்று வெளியிட்ட அறிக்கையில் ஒரு கொத்து ரோஜாப் பூப் படத்தையும் அச்சிட்டிருந்தது. அந்தப் படத்துக்கு ரோஜா மலரின் இயற்கை வாசனை கொடுக்கப்பட்டிருந்தது. நெருப்பு இன்ஷூரன்ஸ் கம்பெனியார் விளம்பரத்துக்காக மை ஒற்றும் தாள்களைக் கொடுத்தனர். அந்தத் தாள்களில் நெருப்பினால் வெந்த வீடுகளிலிருந்து வரும் துர்நாற்றம் வீசியதால், இன்ஷூரன்ஸ் கம்பெனியின் தொழில் இரண்டு மடங்காக ஏறிற்று!

கார்பன் தாள், டைப்ரைட்டர் ரிப்பன் எல்லாம் வாசனை போட்டு விற்பனைக்கு வந்திருக்கின்றன. மணமுள்ள பென்சில்களையும் மார்க்கட்டில் வாங்கலாம். ஒரு பஸ் சர்வீஸ், தனது பெட்ரோலுடன் வாசனை கலந்து உபயோகிக்கின்றது. ஒரு ரயில் பாதையில் டீசல் எஞ்சின்களுக்கு வாசனை கலந்த எண்ணெயை உபயோகிக்கின்றார்கள். ஹோட்டல்கள், ஆஸ்பத்திரிகள், இதர கட்டிடங்களுக்கு நாற்றமில்லாத பெயிண்டுகளை விரும்புகிறார்கள். சில வைச் சாலைகள் கூட வாசனைத் திரவியங்களை உபயோகிக்கின்றன.

சுவிட்ஸர்லாந்திலுள்ள பெர்னியில் சென்ற வருடம் மணம் வீசும் சினிமாப் படம் பத்திரிகைக்காரர்களுக்காகக் காண்பிக்கப்பட்டது. காதலன் தனது காதலியைப் புல் வெட்டும் வயல்களினூடே அழைத்துச் செல்லும் காட்சியில், புதிதாக அறுக்கப்பட்ட புல்லின் வாசனை வீசியதாம். அவன் ஒரு ரோஜா மலரை அவளுக்குக் கொடுத்தபோது, அந்த மலரின் வாசனை சினிமாக் கட்டிடம் முழுமையும் வீசிற்றாம்.

## ‘தாய்க் கோசு!’

ஜப்பானியரைக் குலை நடுங்கச் செய்துவரும் சாவோ-யூ-டாங் என்ற சீன வீரமாதைப் பற்றி ஏற்கனவே ஒரு விவரத்தைக் கொய்து தந்திருந்தோம். ‘ஹிந்துஸ்தான்’ மேலும் சில விவரங்களை வெளியிட்டுள்ளது :

அவளது தலையைக் கொண்டுவருபவருக்கு 50 ஆயிரம் என் கொடுப்பதாக ஜப்பானியர் வாக்களித்திருக்கிறார்கள். அவளது பலத்தைப் பார்த்து, தாய்க் கோசு என்று அவளுக்கு அவர்கள் பெயர் வழங்கி யிருக்கிறார்கள்.

‘தாய்க் கோசு’வின் உண்மைப் பெயர் சாவோ யூ-டாங். அவள் சீனக் குரங்குப் படையின் தலைவி. அவளது படையில் 30 ஆயிரம் வீரர்களிருக்கின்றனர். எல்லோரும் ஒரு பயங்கர மலையில் தலைநகரை வைத்திருக்கிறார்கள்.

சென்ற 9 வருடமாக அவள் ஜப்பானியரைக் கலக்கி வருகிறாள்.

வயது 65.

யூ-டாங்கிடம் ஒரு நோட்டுப் புத்தகமிருக்கிறது. அதில் தான் சாதிக்கும் காரியங்களை அவள் குறித்து வைத்திருக்கிறாள். அப் புத்தகத்தில் பின்வரும் விவரம் காணப்படுகிறது :

| | |
|---|---|
| அவள் கொன்ற ஜப்பானியர் | 5,000 பேர் |
| இறந்த குரங்குப் படையினர் | 700 பேர் |
| பிடித்த ஜப்பான் துப்பாக்கி | 6,000 |
| ,, பீரங்கி | 150 |
| ,, துப்பாக்கி மருந்து | 1,00,000 சுருள் |
| அழித்த மோட்டார் வண்டிகள் | 230 |

## வாழ்க்கைப் பம்பரம்

இரண்டு இளங் காதலர்களின் சந்திப்பை ‘விநோத’னில், ‘சுழல் காற்று’ என்ற சிறு கதையில், ஸ்ரீ ஏ. முகம்மது ரஷீத் வர்ணிக்கிறார் :

இளமை ஒரு நீர் வீழ்ச்சி; படுவேகங் கொண்ட பெரு வெள்ளம். பள்ளங் கண்டவுடன் பாய்ந்தோடும். குழி கண்டவுடன் குதித்திறங்கும். இதற்கு அவன் விலக்கல்ல, என் அவளும் கூடத்தான்! பொங்கும் நுரையாகக் கரை புரண்டோடும் வாழ்க்கை வெள்ளத்தில், சபலம், ஆசை என்ற சூறாவளிகளால் ஒரு குமிழியைச் செய்துகொண்டார்கள். அந்தக் காற்றடைத்த கொப்புளமும் அழகாகத்தா னிருந்தது......

ஆனால், அவள் எட்டாக்கனி ஆகிவிடுகிறாள். அவன் தவிக்கிறான். அவன் நிலை என்ன? கற்பனை மிக்க கதாசிரியரையே கேட்போமே :

விதிக் கயிற்றைக் கடவுள் மனிதப் பம்பரங்களில் சுற்றி ஓங்கி உலகத்தில் குத்தி விட்டுவிட்டால், பிறகு அதன் ஆட்டத்தை—மயக்கத்தை—சுழற்சியைக் கேட்கவா வேண்டும்? இந்தப் பம்பரம் மேடு பள்ளங்களில் அகப்பட்டுத் தத்தளிக்க வேண்டிய காலம் அது. அதோடு இந்தப் பம்பரம் ஆட்டிவிடப்பட்டு அதிகமான காலமும் நழுவிவிடவில்லை. அதனால் அத்தனை மேடு பள்ளங்களிலும் சமாளித்துக்கொண்டு ஓய்ந்துவிடாமல் ஆடிக்கொண்டிருந்தது......




# மூன்ரும் அங்கம்

## முதற் காட்சி

[சென்னை, திலகர் கட்டம். மாலை ஆறுமணி. சந்திரோதயம். கான்வொகேஷன் சென்று பி. ஏ. பட்டம் பெற்றதும், **ஜோதியும் கண்ணனும் காந்திப்படம்** பார்த்துப் புதிய உணர்ச்சி பெறுதல். அச்சமயம் தினசரிப் பத்திரிகையில் மதுரைச் செய்தியில் **பொன்னு-மங்களம்** படமுடன், அவர்களுக்குச் சீர்திருத்த முறையில் கலியாணமானதையும் படித்துப் பார்த்த **ஜோதியின்** மனம் மாறுகிறது. **மங்களத்தை** மறந்து மகாத்மாவை நினைக்கிருன். கடலைநோக்கித் தனக்குப் புதிய சுதந்தரம் வந்துவிட்டதாகப் பாடுகிருன்.]

**ஜோதி**

கர்ஜனை செய் கடலே—சுதந்தரக்
கர்ஜனை செய் கடலே—ஸமரஸக்
கர்ஜனை செய் கடலே....
சச்சிதா னந்தப் பரம்பொருள் ஒன்றெனக்
கர்ஜனை செய் கடலே—உலகிற்குக்
கர்ஜனை செய் கடலே....
தட்டுத் தடைகளை முட்டி யெறிந்தின்பத்
தாண்டவ மாடிடுவாய்—கடலே
தாண்டவ மாடிடுவாய்—கைகள்கொட்டித்
தாண்டவ மாடிடுவாய்....
கட்டுகள் விட்டு விடுதலை யாம்வழி
காட்டிடுங் கடலே—கவலையை
ஓட்டிடுங் கடலே—ஞானக்கனல்
மூட்டிடுங் கடலே....

விட்டன கட்டுகள், விடுதலை யினிமேல் ;
இந்த நிகழ்ச்சி யிறைவ னிச்சையே !

**கண்ணன்**

அன்பா ஜோதி, அவசரப் படாதே!
மதுரைச் செய்தியில் மாய முள்ளது.
[பத்திரிகையை விரித்து]
காமிராக் காரன் கைவேலை யென்றே
படத்தைக் கண்டதும் பட்டென் றறிந்தேன்,
பாராய் நீயும் ... பதற்ற மின்றி...!

**ஜோதி**

கப்பல் செய்ததைக் கடலிற் போடடா ... !
மதுரை மாயம் மாற்றிய தென்னை.
"உமக்கே மனைவி ; உம்மையே நம்பினேன் ;
உம்மை யன்றி உயிரெனக் கில்லை."
என்ற நங்கை இன்னொரு கயவனைக்
கணவனுய் ஏற்று மணவினை நடந்தது,
படத்தைக் கண்டதும் படபடவென்று
துடித்தது நெஞ்சம் ... துடியிடை யாரின்
காத லெல்லாம் கானலி னீரே.
உதட்டில் அமுதும் உள்ளே நஞ்சும்
கொண்ட மாதரை அண்டேன், சத்தியம் !

**கண்ணன்**

சினமேன் ஜோதி?...எனதுளம் வேறு ...
நானிச் செய்தியை நம்பவே மாட்டேன்.

**ஜோதி**

நடப்ப தெல்லாம் நல்ல திற்கேயாம் ;
ஒருபெண் கொண்ட உளத்தைத் திருப்பி
நாட்டன் பினிலே நாட்டித் தீர்த்தேன்...

நாடோறுடேன நாடிப் பணி செய்வோம்
பாடுவோம் அதன் பாருயர் வீரரை....
சாடுவோம் அதைச் சாடிடுந் தீமையைத்
தேடுவோம் அதன் சேமத்தை யென்றுமே !

**கண்ணன்**

உன்னுணர் வெல்லா முன்பே யறிவேன்.
தியாகமே யுனது திருவாழ் வாகும்.
பொதுநல மேயுன் பொன்மன மாகும்.
அதற்கோர் அருந்துணை யாகு மென்றே
மங்க ளத்தை மருவ நினைத்தாய்...

**ஜோதி**

சொல்லா தேயத் துரோகியின் பெயரை !
இங்கொன் றியம்பி அங்கொன் றியற்றும்
போலிக் காதலைப் பூவெனத் தள்ளினேன்.

### கண்ணன்

மீண்டு முரைப்பேன் மேதகு நண்பா !
அங்கே நடக்கும் அண்ணுவி தர்பார்
திரித்த திந்தத் தினசரிப் புளுகு!
சுந்தரி-பொன்னுவின் சுதந்தரக் கொடுங்கோல்
மருந்து வைத்து மயக்கிச் சிவனைப்
பித்த ளுக்கிப் பிதற்ற விடுத்தது;
மங்களக் கிளியை மாயஞ் செய்தது.
மங்களக் காதல் மாசறு காதலே...

### ஜோதி

கற்புள காதல் சொற்பழு தாமோ ?
காதல் இல்லேற் சாதலை விரும்பும்,
மற்ருேர் போலே சிற்றின் பத்தில்
வாழ்வை யிழக்க மணவினை விரும்பேன்
பொதுநலம் புரியப் புனித சக்தியின்
துணைபெற வேண்டியே மணவினை வேட்டேன்,
அந்த நினைவும் அற்றது ; தனியே
மாசற் றிருந்து மாண்பணி செய்வேன்...
ஆண்டவன் இச்சையும் அதுவென் றறிந்தேன்.

### கண்ணன்

மதுரை சென்று மங்களத் திற்கு
நேர்ந்ததை நேரே நின்று கண்டபின்,
பிறகொரு வழியைப் பேணலாம், ஜோதி !

### ஜோதி

எனக்கொரு வழியை இறைவன் விடுத்தான்,
அதற்கே யன்பெலாம் அர்ப்ப ணித்தேன்,
படித்த வாலிபர் படையணி சேர்ந்து
போர்க்கலை பயில்கெனப் புகன்று *ஷண்முகம்
பட்டம் வழங்கிப் பாங்காய்ச் சென்ருர்.
அவருரை கேட்டதும் ஆயுதம் பிடிக்கவே
துள்ளி யெழுந்தேன். வெள்ளித் திரையில்
கருணை வடிவாம் காந்தியின் தியாக
வாழ்வைக் கண்டதும் மாறிய துள்ளம்.

சத்தியம் வாழு மட்டும்,
　　தருமமே வெல்லு மட்டும்,
உத்தமர் போறுமை யாலே,
　　உயிர்நல மோங்கு மட்டும்,
வித்தகப் பரத நாட்டின்
　　புண்ணியம் விளங்கு மட்டும்,
இத்தலம் வாழு மட்டும்
　　இலகுக காந்தி யெம்மான்.... !

உண்மை கவர்ந்த வுளத்தை யினிமேல்
சிறுநெறி நோக்கித் திருப்பிடேன். உறுதி.
பேசுக பேசின் பெரியார் பேச்சே !

### கண்ணன்

எனக்குமவ் வுணர்வே இதயத் தெழுந்தது,
சத்திய வள்ளலைச் சாசனப் படமாய்ப்
பிடித்த தமிழன் பெருமை வாழ்க !
விண்ணும் மண்ணும் விரிகட லெங்கும்,
கண்ணியும் குண்டும், கனல்பெற வீசி,
அரக்கப் படைகள் அழித்தன வுலகை.
போலாந் துலாந்து, பின்லாந்து பெல்ஜியம்,
நேற்று நிமிர்ந்து நின்ற பிரான்சு,
கொடுமையாய் வீழ்ந்தின் றடிமைக ளாயின.
இடியும் புயலும் எரிமலை யும்போல்
ஆயுத நமன்கள் அடங்கா தெழுந்தன
சூரச் சர்ச்சில் சுடச்சுடக் கொடுத்துத்
தளராத் தனிப்போர் தாங்கி யெதிர்த்தும்,
லண்டனிற் பொழியும் குண்டு மழைகள்
கண்டென் உள்ளம் கலங்கி வருந்தும்.
ஆசையா ணவமாம் அதர்மப் பேய்கள்
இரத்த வெறிகொண் டின்னலே செய்யும்
இந்த வுலகிலும் எம்மான் காந்தி
அருளே வடிவாய் அஹிம்ஸை யறத்தை
வாழ்ந்து காட்டி வாழச் சொல்கிருர் !

### ஜோதி

காந்தியின் பெருமை கடலினும் பெரிதே.
மலையினும் மாண்பு மகாத்மன் உள்ளம்.
வானஞ் சென்றே மழைதரும் கடலே.
காந்திக் கடலோ கருணை மழையை
வையம் வாழ வழங்கு மிங்கே.
காந்தி யென்னும் கருணை வடிவைக்
கண்ட கண்கள் காணுமோ பொய்யை !

மெல்லிய வுடலுக் குள்ளே
　　மேதினி முழுதுங் கோண்டோன்.
சோல்லிய சோல்லின் வாய்மை
　　துலங்கிடத் தோண்டு சேய்வோன்.
வல்லியற் படையும் வேட்கி
　　வணங்கிடும் அஹிம்ஸை வீரன் ;
எல்லையிற் கருணை யன்னுன்
　　எளியர்கோன் வாழ்க மாதோ !

### கண்ணன்

அன்பு சொல்லும் அஹிம்ஸா தருமம்
போர்வெறி மூளையிற் புகுதமாட் டாதே...

### ஜோதி

தீயை நீரும், தீமையை நன்மையும்,
பொய்யை மெய்யும், போக்குவ துண்மை.
அரக்க பலத்தை ஆத்தும சக்தியே
நீக்கிடும் ; அதனை நேரே பாரதம்
விளக்கவே விடுதலை வேண்டு கின்றது.
அஹிம்ஸை ஆத்தும சக்திக் குயிராம்.
அதுவே காந்தியின் ஆருயிர்க் கொள்கை.
அவர்போல் எளிமையும் அன்பும் பூண்டு
வறுமை மடமை யடிமைநோய் தீர
எல்லா வுயிர்க்கும் இனிதே செய்யும்
அறமே யென்றன் ஆயிருர்ப் பணியாம்.

மன்னுயி ரேல்லாம் வாழ,
　　மறவலிக் கோடுமை வீழத்
தன்னுயிர் கோடுத்தான், புத்த
　　தருமமே யுருவே டுத்தான்
கன்னத்தில் அடித்த வர்க்கும்
　　கருணைசெய் ஏசு போன்ருன்
மன்னுல கேல்லாம் போற்றும்
　　மகாத்துமன் வாழ்க மாதோ!

---

* R. K. ஷண்முகம் செட்டியார், கொச்சி திவான், 1940-ம் ஆண்டு பி. ஏ. தேறிய மாணவருக்கு நல்லுரை சொல்லிப் பட்டமளித்தவர் ; அரசியல் அறிஞர்.

### கண்ணன்

பேரிடத் தன்பு வேருடன் ஊன்றினை.
அந்த வேரை அசைக்க மாட்டேன்.
எனினும் பொதுநலம் எளிய தன்று.
அளந்து தெரிந்தே அடிவைத் தேகு!
மதுரைக் கேகி வளர்த்த தந்தை
ஆறுத லாகக் கூறிச் சிலமொழி
மங்கள மென்னும் மாசிலாத் திருவின்
செய்தி யறிந்து செய்வன செய்வாய்!

### ஜோதி

நீசெல் அன்பா, நிசமறிந் தெழுது!
நண்பா சத்தியம்! நானினி யென்றும்
மாதர், மனைவி, மக்கள் என்று
மயங்கி வாழ்வை மண்ணிற் கொட்டேன்.
தேச மெல்லாம் திருமனை யாகும்
தேச பக்தியே திருவார் மனைவி.
தேசத் தொண்டென் ஆசைத் தொண்டாம்.
தேச பக்தியே தெய்வ பக்தியாம்.
நாடு வாழ, நந்தமிழ் வாழ
வீடு துறந்தேன்; வேகமாய்ச் சென்று
தந்தையைத் தேற்று! தங்கையுன் மனைவி.
அவளுடன் கூடி யன்பாய் வாழு!
தோட்டந் தன்னில் இராட்டை சுழல்க;
கதர்த்தறி நெய்க; கல்வி பரவுக;
பெண்மை சுதந்தர பேரிகை முழங்குக;
திருக்குல நேயர் திருவுற வாழ்க;
இந்தப் பணிகளை இயற்றிநீ யாங்கே
மாசில் லாத மனையறம் போற்றுவாய்.
இனியென் கவலை ஈசன் கவலை.
அவனருள் ஆகிய அன்னை சக்தி
நாடாய் நின்றெனை 'வாடா!' வென்றாள்.
கோடி ஜனங்களின் கூக்குரல் கேட்கிறேன்.
எதிரே முழங்கும் எறிதிரை, மணல்மேல்
வந்து வந்து வரையுமோர் செய்தி.
இத்திரைக் கெதிரே எத்தனைத் தலைவர்—
*பாலுந் திலகரும் லாலும், தாசும்
சிதம்பரம், பாரதி சிவாவுடன் ஐயரும்,
ராஜனும், ராயும், ராஜா ஜீயும்,
மாதா வேள்வி மந்திர மொலித்தனர்.
சத்தியாக் கிரகச் சங்கு முழக்கி
நாட்டை யழைத்தார் நமது மகாத்மா.
தன்னலம் விடுத்துப் பொதுநலம் புரிய
தியாகம் செய்யெனக் கூவுது கடலே.

### கண்ணன்

நாட்டறங் காக்க நாடிப் பணிசெய்!
வீட்டறங் காத்துநீ விரும்பிய பணிகளை
வள்ளி யுடனே வழுவறக் காப்பேன்.
வேண்டுது நாடு வீரவா லிபரை.
வீர மணியாய் விளங்குவாய் நீயே!
எனினும் எனது கடிதம் கண்டபின்
மங்களம் பாலுன் மனது மாறுக!

### ஜோதி

உன்சொற் படியே உண்மை யானால்,
"தியாகவாழ் வுடனே தேசப் பணிசெய்!"
என்றவ ளுக்குநீ இயம்பிட வேண்டும்.
தந்தைக் காறுதல் சாற்றிட வேண்டும்.
நண்பருக் கெனது நல்லுரை சொல்வாய்!

### கண்ணன்

எனது கடமை யினிதே செய்வேன்.
உன்னிலை யினிமேல் என்ன வாகுமோ?

### ஜோதி

"பொதுநலம்" என்ற புகழ்பெறுந் தினசரி
எனது சேவையை ஏற்றது நேற்றே.
அதற்கே யெழுதுன் அன்புக் கடிதம்.
பொதுநலம் எனது புதுநல பேரியாம்.
அதன்வழி கொள்கையை அன்புடன் பரப்பிச்
சமயம் வந்ததும் சாந்த மாகத்
தியாகத் தீயில் தீரமாய்க் குதிப்பேன்.
தாயெனை யழைத்தாள்... நீயினிச் செல்வாய்,!

### கண்ணன்

சென்று வருகிறேன்... சீரிய நண்பா!

### ஜோதி

எந்தாய் வாழ்க... வந்தே மாதரம்.

[கண்ணன் செல்லல்; ஜோதி சிந்தையில் ஆழ்ந்து கடலை நோக்குகிறான்.]

கண்டமாய் விளங்கிய கனிதமி ழகத்தை
உண்ட கடலே! உலகையுன் அலைகள்
பாய்ந்து பாய்ந்து பையப் பைய
விண்டு விழுங்கி வீறிடு கின்றவே!
பூமணம் காற்றிற் போவது போலே
காலத் துடனே ஞாலமுஞ் செல்லும்.
காலத் தேரில் காதலோ டேறினேன்,
தியாக பூமியைச் சேர்ந்தே னின்று,
ஆக்கமும் அழிவும், தூக்கமும் விழிப்பும்,
இரவும் பகலும், இறப்பும் பிறப்பும்
இயல் பாம் உலகை எதிரே கண்டேன்.
காலத் தேரின் கணக்கை யறியேன்;
நாளை யெங்கு நடத்துமோ காணேன்.
வாழ்வின் விளக்கை ஊழ்வினை யணைக்குமுன்,
இருளும் வறுமையும் இருக்கு மிடமெலாம்
ஒளியும் உணவும் உதவ முயல்வேன்.
இதயக் கடவுள் என்னை நடத்துக...!

[சிறிது தியானம். சற்றுத் தொலைவில் பொதுக்கூட்டம். தொண்டர் பாட்டு வருகிறது.]

தடுப்பவர்கள் யாரினிஎந்
    தாயின்சேவை செய்வதை....
விடுப்பவர்கள் யாரினி
    விடுதலை வெறியினை....

### ஜோதி

ஆம் ஆம் உண்மை.. அன்னை யழைத்தாள்...

மோகத் தீய ணைந்த தே நீ
    முன்சேல் லென்றேன் அன்னையே
தியாகத் தீயைத் தூண்டு கின்றாள்
    தாவிச் சென்ற ணைகின்றேன்....

எந்தாய் வாழ்க வந்தே மாதரம்...

[கூட்டத்தை நோக்கி ஓடுகிறான்]

* பி. ஸி. பால், லோகமான்ய திலகர், லாலா லஜபதி, சித்த ரஞ்ஜனதாஸ், சிதம்பரம் பிள்ளை, சுப்ரமண்ய பாரதி, சுப்ரமண்ய சிவா, வ. வெ. சுப்ரமணிய ஐயர், டாக்டர் ராஜன், ராஜன் பாபு, பி. ஸி. ராய், ராஜாஜி.

## இரண்டாங் காட்சி

[மதுரை. சிவத்தின் மாளிகை. சமையல் அறை. அப்புவும் சீனுவும் இரகசியமாகப் பேசுகின்றனர். அப்பு திக்குவாய்ப் பரிசாரகன். சீனு குமாஸ்தா; இப்போது சுந்தரியின் ஆள். இருவரும் மங்களத்திடம் பரிவுள்ளவர்கள்.]

### அப்பு

கக கக காரியம் ஆனதும்,
இஇ இங்கே இருக்க மாட்டேன்...
அஅ அஅ அவிசா ரிமடம்...
பப பப பாதகி, ராக்ஷசி...
பபர்த் தாவைப் பைத்திய மாக்கினாள்...
பொபொ பொபொ போட்டா எடுத்து
பெபெ பெபெ பேபரில் போட்டு.
கக கக கலியாண மென்று
திதி திதி திரிசமன் பண்ணினாள்...
மம மம மங்களக் கிளியை
கொகொ கொகொ கொட்டிலில் அடைத்து
பொபொ பொபொ பொன்னு வுடனே...

### சீனு

தெரிந்தது தானே ; செப்புவ தென்ன ?
புலியின் கையில் புள்ளிமான் பட்டது.
பாவம் மங்களம் பட்டினி கிடக்கிறாள்.
பெரியவ ருக்கும் பிடித்தது பைத்தியம்—
பொன்னு செய்த புன்செய லாலே,
சுந்தரி செய்த சூதி னாலே—
தெருத் தெருவாகத் திரிகிறார் எஜமான்.
ஊரெலாம் 'இப்படி உண்டா ! என்றனர்.
மங்களத் திற்கு மணாள னென்று
ஊரை ஏய்க்கப் பேரைப் பண்ணி,
போக்கிரி பொன்னுவைப் பொருந்தி வாழ்கிறாள்.
பொன்னு வுக்கும் பொன்னே குறிப்பு.
நாத்திகன் இவளை நாஸ்தி பண்ணி
முல்லைக் கொடியை மோகமாய் வளர்க்கிறான்.
கொழுநன் வாசலில், கொல்லையில் மங்களம்
வீடு முழுதும் வேசைக் கூத்து...
இந்த வீட்டில் இனியார் இருப்பார் !
அருளினி யில்லை ; இருளே இருக்கும்.

### அப்பு

சொசொ சொசொ சோதியை நினைத்தே
கக கண்ணீர் விடுகிறாள் கன்னி.
கொகொ கொகொ கொலைகார முண்டை
சொசொ சோற்றில் விஷந்தரச் சொன்னாள் !

### சீனு

கணவனைத் துரத்திக் கன்னியைக் கொன்று,
நாக ரிகமாய் நாத்திகப் பொன்னுவைக்
கூடி வாழவே நாடினள் சுந்தரி.
அவரவர் கொடுமையை அனுப விப்பார்.

### அப்பு

நந நநான் விவிட மாட்டேன்...
கொகொ கொல்லைக் ககக் கதவை...

[சாடைகாட்டுகிறான்]

### சீனு

சமயம் பார்த்துச் சந்தடி யின்றி
கதவைத் திறந்துவை! கரிய இரவில்
பின்புறம் வந்து பெண்ணையென் வீட்டில்
கவனமாய்ச் சேர்த்தால், கண்ணன் இருக்கிறான்...
பிறகு நடப்பதைப் பின்னே பார்ப்போம்.
சிவனையும் கண்போல் கவனிக்க வேண்டும்.

### அப்பு

அஅ அஅ அப்படிச் செய்வோம்.

["ட்ரங் ட்ரங்" என்று மின் மணி அழைக்கிறது]

கக கக காப்பி மணியிது...

### சீனு

கூக்குரற் போடுமுன் கொண்டுபோ விரைவாய் !
பின்னே எல்லாம் பேசிய செய்வோம்...
அடக்கம், அடக்கம், அமைதி, அடக்கம்.

[செல்கின்றனர்]

(தொடரும்)

---

## ஜெர்மன் பார்லிமெண்டில் தீ

1933-ஆம் ஆண்டு ஜெர்மனியில் ஹிட்லர் அதிகாரத்துக்கு வந்தவுடனே, அந்த அதிகாரத்தை நிலை செய்துகொள்ள, அவரது நாஜி கட்சியார் பிரமாத முயற்சிகள் செய்தார்கள். எதிர்க் கட்சியினர்களை யெல்லாம் பலவிதக் கொடுமைகள் புரிந்து, அடக்கி ஒடுக்கினார்கள்.

பிப்ரவரியில் ஒருநாள் சாயங்காலம் ஜெர்மன் பார்லிமெண்டான ரீச் கட்டிடம் தீப்பற்றி, பல லட்சம் மதிப்புள்ள பொருள்கள் எரிந்து கரிந்து சாம்பலாயின. இது எதிர்க் கட்சியாரை அடக்கி யழிக்க ஆண்டவன் அளித்த வரம் என்று ஹிட்லர் கூவினாராம். ரீச் நெருப்பு, நம்பர் 2 நாஜியான கோயரிங்கின் சூழ்ச்சியே என்று எதிரிகள் சொன்னார்கள்; தீ எதிரிகள் வேலையே என்று நாஜிகள் பழி கூறினார்கள்.

ஆனால், தீப்பிடித்த அன்று பின்வரும் சம்பவம் நடந்ததாம்: அப்போது ஹிட்லரும் கோயரிங்கும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். ஹிட்லரின் மெய் காப்பாளன் ஓடோடியும் வந்து "ரீச்சில் நெருப்பு" என்று கத்தினான்.

கோயரிங் "அதற்குள் பத்தரை மணியாகி விட்டதா?" என்று கேட்டாராம். அதாவது, கடிகாரத்துக்கும் தீக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதாக, ஏற்படுகிறதல்லவா?

# தினசரி வாழ்க்கை

(அ. ஸ்ரீனிவாசராகவன்)

எத்தனையோ முறை நீங்களும் நானும் அனுபவித்திருக்கிறோம். "என்ன வாழ்க்கையடா இது! காலை முதல் அந்தி வரையில் ஒவ்வொரு நாளும் ஒரே மாதிரியாய், தொலையாப் பெருவிலங்காக மூண்டு விட்டது!" என்று அந்த அனுபவத்தை வெளியிட்டும் இருக்கிறோம். ஆனால், இந்த அனுபவம் நமது தொழிலைப் பற்றியதாகவோ, அல்லது நாம் மேற்கொண்ட தினசரி வேலை ஒன்றைப் பற்றியதாகவோ சாதாரணமாக அமையும். கொல்லனுக்கு உலைக் கூடத்திலும், பழுக்கக் காய்ந்த இரும்பிலிருந்து பறக்கும் பொறியிலும், துருத்தியின் பெருமூச்சிலும் சலிப்புத் தட்டுவது இயற்கை. தோலைத் தைக்க நெளியும் ஊசியும் சரடும் தன் வாழ்க்கையையே தைத்து விடுவதாகச் சில சமயங்களில் செம்மானுக்குத் தோன்றுகிறது. தினந்தோறும் காதக் கணக்காய், அணிவகுத்துச் செல்லும் படையிலே இயந்திரம் போல் நடந்து செல்லும் போர்வீரனுக்கு, உலகமெல்லாம் ஒன்றாகத் திரண்டு தன் கால் பூட்ஸின் பாரமாய் அமைந்து விட்டதாகப் படும் என்று ஆங்கிலக் கவிஞன் ருட்யார்ட் கிப்ளிங் சொல்லுகிறான். பழக்கத்தினால் புதுமை மழுங்கிய வகையில் ஒரு தொழிலையே நாம் செய்து வரும்போது இந்த அலுப்பு ஏற்படுவது ஸகஜம். அப்போதுதான் நமது தினசரி வாழ்க்கையிலிருந்து விடுதலை பெற விரும்புகிறோம். வேறொருவர் வாழ்க்கையைப் பார்த்து அதை அடையலாகாதா என்று பொருமுகிறோம்.

"உங்களுக்கென்ன, சாமி! நினைக்கிறீங்க, பாட்டுப் பாடுறீங்க. சந்தோஷமாய் இருக்கீங்க. எங்க மாதிரி நெருப்பிலே வாடுறீங்களா" என்று கவிஞனைப் பார்த்துக் கொல்லன் பொறாமைப் படுகிறான். கவிஞனோ கொல்லனுடைய கை வன்மையைப் பார்த்து அதிசயிக்கிறான்; அது சாதிக்கும் பொருள்களைத் தேவர்களும் நாடுவார்கள் என்று நினைக்கிறான்; "என் போல் வார்த்தைப் போரிலும், மனக் குழப்பத்திலும் காலத்தை வீணாக்காமல் பயனுள்ள கருவிகளைச் செய்யும் இந்த மாவண்டூர்க் கொல்லனுடைய வாழ்க்கை எவ்வளவு ரஸம் நிறைந்தது" என்று கருதுகிறான்; கொல்லனுடைய உலைக் கூடத்தில் திருமாலும், சிவனும், பிரமனும், குமரவேளும் தங்கள் படைக் கலங்களைப் பெறக் காத்துக் கொண்டிருப்பதாகக் கற்பனை செய்கிறான்; அது ஒரு பாடலாக வெளிப்படுகிறது :

"ஆழியான் ஆழி அரன் மழுத் தா
வென்பான்;
கோழியான் குன்றுருவ வேலென்
பான்-ஊழியான்
அங்கை எழுத்தாணி அருளென்பான்;
மாவண்டூர்ச்
சிங்கன் உலைக் களத்திற் சென்று."

பழக்கத்தின் காரணமாகப் பாலும் புளிக்கும், புளிக்காவிட்டாலும் பால் என்ற தத்துவமே மறைந்துவிடும் என்ற செய்தியை நாடக பாத்திரம் ஒன்றன் மூலமாகக் குறிப்பாக உணர்த்தும் இன்னொரு கவிஞன் சொல்வதைக் கேட்போம். ஸாம்ராட் ஒருவனுடைய அந்தப்புரம். பரந்த நந்தவனங்கள்; நடுவே பளிங்கு மாளிகை; இயற்கையின் அற்புத ஸௌந்தர்யத்தையும், கலையின் எல்லையற்ற அழகையும் ஒன்றாகக் கலந்து நிர்மாணித்த வாசஸ்தலம். 'சீர் சிறக்கு மேனி பசேல் பசேலென, நூபுரத்தின் ஓசை கலீர் கலீரென, சேரவிட்ட தாள்கள் செவேல் செவேலென'த் தெய்வ நாட்டுக் கன்னியர் போல் உலாவி வரும் அந்தப்புர மகளிர். வீணையின் விம்மலும், முழவின் எக்களிப்பும், மகளிர் குரலும் சேர்ந்து நந்தவன மலர்களின் மணத்தோடு மணமாய், தென்றலில் மிதந்து வருகின்றன. இங்கே அமைந்திருக்கிறது ஒருவனுடைய வாழ்க்கை. வேறென்ன வேண்டும் என்று நினைக்கிறோமல்லவா? ஆனால் அவனைக் கேட்போம்

ஸம்ஸ்கிருத மகாகவி காளிதாஸனுடைய 'சாகுந்தலம்' என்னும் நாடகத்திலே அவன் தோன்றுகிறான். சகுந்தலையின் நினைவும், தான் அவளைப் புறக்கணித்து விட்டோமே என்ற இரக்கமும் தன்னை வாட்ட, அந்த வருஷம் வஸந்தோத்ஸவம் வேண்டாம் என்று அரசன் துஷ்யந்தன் கட்டளையிடுகிறான். ஆனால் வஸந்தம் வருவதைத் தடை செய்ய முடியுமா? மாமரங்கள் தளிர்க்கின்றன. 'கள்ளவிழ் சண்பகப் பூமலர் கோதி,' மன நிறைவோடு, குயில்கள் இளவேனிற் காலத்திற்குக் கட்டியம் கூறுகின்றன. அந்தப்புர மாதர் இருவர் மனத்திலே, வஸந்தத்தின் எதிரொலி கேட்கிறது. அவர்கள் நந்தவனத்தில் பூக் கொய்கிறார்கள். அப்போது தோன்றுகிறான் அரசனுடைய கஞ்சுகி. அந்தப்புர மேற்பார்வை அவனுடைய நித்திய கருமம். அவன் வார்த்தையிலும் செய்கையிலும், கோபமும் தளர்ச்சியும் தொனிக்கின்றன. "என்ன சொன்னாலும் உங்களுக்குத் தெரியவில்லையே! என்ன உத்ஸாகம் வேண்டியிருக்கிறது? அரசனுடைய கட்டளை என்னவென்று உங்களுக்குத் தெரியாதா?" என்று சீறுகிறான். வஸந்தத்தின் மந்திர சக்தியும், அழகே வடிவாய்ப் பூக்கொய்யும் மடந்தையர் ஒயிலும் அவன் கண்ணிற் படவில்லை. ஏனென்றால், அவன் அரசனுடைய கட்டளையை நிறைவேற்றும் இயந்திரம். எவ்வளவு மனோரம்யமான அம்சங்கள் நிறைந்த இடத்திலே அவனுடைய தினசரி வாழ்க்கை நடைபெறுகிறது! இருந்தும் அவனுக்குப் பயனில்லை. ஏனென்றால், அது கேவலம் தினசரி வாழ்க்கையாகி விட்டது.

இந்த நாடக பாத்திரத்தின் நிலையிலே இன்னொரு உண்மையையும் காண்கிறோம். சுற்றியுள்ள அழகிலே ஈடுபடக்கூடிய சக்தியை இழந்து விட்டதோடுகூட, அந்த அழகு பிரதிபலிக்கும் பொருள்களையே அவன் கண்டிக்கிறான். அரசனுடைய கட்டளையை நிறைவேற்றும் முயற்சியில் தனக்கு இடையூறு செய்வதாக அவைகளைக் கருதவே அவை அவனுக்குக் கசந்து விடுகின்றன. "மனந்தான் காரணம்: நரகத்தைச் சுவர்க்கமாக்கி விடும்; சுவர்க்கத்தை நரகமாக்கி விடும்" என்று ஆங்கிலக் கவிஞன் மில்டன் சொன்னனே அது நமக்கு ஞாபகம் வருகிறது. இந்த உண்மையைக் கம்பனுடைய காவியத்திலே பல இடங்களில் நாம் காண்கிறோம். தன் அளவற்ற செல்வமும், வீரத்தின் வலிமையால் தான் பெற்ற வாழ்க்கைச் சாதனங்கள் யாவும், தான் சீதையை அடையவில்லையே என்ற ஏக்கத்தில் இராவணனுக்குத் துச்சமாகப் படுகின்றன. சீதையைக் காண, அசோகவனத்திற்கு இராவணன் வருவதைப் பாருங்கள் :

"நான நெய் விளக்க நாலிருகோடி
நங்கையர் அங்கையி லெடுப்ப
மேனிவந்தெழுந்த மணியுடை அணியின்
விரிகதிர் இருளெலாம் விழுங்கக்
கான்முதல் தொடர்ந்த நூபுரம் சிலம்பக்
கிண்கிணி கலையொடும் கலிப்பப்
பானிறத்தன்னகுழாம் படர்ந்தென்னப்
பற்பல மழலையும் பகர"

ஊர்வசி உடைவாள் ஏந்துகிறாள்; 'விஜய வாட்கண்' திலோத்தமை

பாதாரட்சை தாங்கி வருகிருள்; மேன கை அடைக்காய் உதவுகிருள். இந்த உலகத்துச் செல்வம் மட்டுமல்ல, தெய்வ நாட்டு ஐசுவரிய மெல்லாம் இராவண னுடைய தினசரி வாழ்க்கைச் சாதனங்க ளாய் அமைந்திருக்கின்றன. ஆனல் அவை அவனுக்குச் சப்பென்று சாரமில் லாப் பொருள்களாகி விட்டன. 'தேவர் தேவியர் சேவடி கை தொழும், தாவின் மூவுலகின் தனி நாயகன்' தான். ஆனல் பெற முடியாத சீதையின் காதலை விரும் புகிருன்; தன்னுடைய செல்வத்தையும், காதலையும் தூ வென்று சீதை உதறித் தள்ளும்போது "யாவ ரேழையர் நின் னின் இலங்கிழாய்?" என்று கேட்கி ருன். ஆனல் ஏழை சீதை யன்று; இராவணன் தான்.

ஏழ்மை—மிகவும் வருத்தம் தரக்கூடிய நிலை—என்று நாம் சாதாரணமாக எதை ஒப்புக் கொள்ளுகிருேமோ, அதில் அகண்டமான இன்பத்தையும் திருப்தி யையும் பலர் பெறுவதைக் காவியங்க ளிலே பார்க்கிருேம். காட்டுக்குப் புறப்படுமுன் கோசலையிடம் இராமன் கூறுவதை யாரால் மறக்க முடியும்? ஆழி சூழ் உலகமாளும் உரிமை துறக்கி ருன்; சடைமுடி தாங்கி, மரவுரி அணிந்து, பதினன்கு வருஷம் காட்டிலே வாழ உல்லாசமாகப் புறப்படுகிருன். கோசலையின் மனம் கொதிக்கிறது. இந் தச் சமயத்தில் இராமன் பேசுவதைக் கேட்போம்:

"சிறந்த தம்பி திருவுற, எந்தையை
மறந்தும் பொய்யில ளுக்கி, வனத் திடை
உறைந்து தீரும் உறுதிபெற்றேனிதின்
பிறந்து யான்பெறும் பேறென்பது
யாவதோ?"

இங்கே பேசுவது இராமன் இல்லை என்று கூடச் சொல்லி விடலாம்; இரா மன் மூலமாகத் தருமதேவதையே பேசு கிறது.

இது போலவே, காளிதாஸனுடைய 'குமார ஸம்பவ'த்தில் உமையின் மூலமாக, தினசரி வாழ்க்கையில் விருப்போ வெறுப்போ, அந்த வாழ்க் கையின் வெளித்தோற்றத்திலோ அம் சங்களிலோ எழவில்லை யென்றும், நம் முடைய மனத்திலிருந்தே உண்டாகின் றன என்றும் தெளிவாக அறிகிருேம். தன் மகள் சிவனை அடையக் கடுந்தவம் புரியத் தீர்மானித்து விட்டாள் என்று அறிந்ததும், மேன சொல்லுகிருள்:

"குழந்தாய் உன்னுடைய சரீ ரம் எங்கே, தவம் எங்கே? சிரீஷ புஷ்பம் வண்டின் பதங்களைத் தாங் கும்; பக்ஷியைத் தாங்க முடியுமா?"

தாங்க முடியும் என்கிறது உமையின் வைராக்யம். உமையின் தவத்தையும், தபஸ்விகள் செய்யும் நித்திய கருமங்க ளில் ஒன்று தவருமல் அவள் செய்ய முடிந்ததையும் இருபத்திரண்டு அழகிய சுலோகங்களில் காளிதாஸன் வர்ணிக் கிருன். உமையின் சரீரம் தாமரையைப் போல் மென்மையானதுதான்; என்ரு லும் அது காஞ்சனபத்மம் (தங்கத்தாலான தாமரை) யாகிவிட்டது என்று கவிஞன் வியப்படைகிருன்.

நமது தினசரி வாழ்க்கை எவ்வாறு அமைந்திருந்த போதிலும் அதனல் விளையும் சோர்வையும் கஷ்டத்தையும் சமாளித்து அதிலிருந்து இன்பமும் புது மையும் பெற—நம்மைக் காஞ்சனபத்மங்க ளாக்கிக் கொள்ள—ஒரு வழிதான் உண்டு. அது நம்முடைய தினசரி வாழ்க் கையை ஏதாவது ஒரு இலட்சியத்தோடு ஒட்டி நடத்துவதே. சல சல வென்று காற்றில் அசைந்து செந்நெல் தாங்கித் தலை வணங்கும் நெற் கதிர்கள் நிறைந்த வயலைத் தன் மனத்திலே பார்த்துக் கொண்டே, காய்ந்த வயலுக்குத் தண் ணீர் இறைக்கும் உழவனுக்குக் களைப்பு எவ்வாறு தோன்றும்? ஆனல் நீங்கள் கேட்கலாம்: குறிப்பிட்ட காவியக் கதை கள் தினசரி வாழ்க்கையா? அபூர்வமான சந்தர்ப்பங்களில், நம்முடைய வாழ்க் கைச் சாதனங்களை மனம் எவ்வாறு பாவிக்கிறது என்றுதானே இவற்ருல் அறிகிருேம்! 'நரகத்தைச் சுவர்க்கமாக் கலாம்; சுவர்க்கத்தை நரகமாக்கலாம்.' ஆனல் அதற்கு நரகமாவது சொர்க்கமா வது வேண்டாமா? இராவணனின் வீர மும் செல்வமும் வேண்டாம்; அவன் காதலையாவது பெற்ருேமா? இராம னுடைய தர்ம நெறி நமக்கில்லை யென்ரு லும், அவன் பெற்ற அனுபவங்களாவது நமக்கு உண்டா? அரசை இழந்தோமா? சீதையை இழந்தோமா? உணர்ச்சியற்ற, ஊளுத்துப்போன நமது தினசரி வாழ்க் கையில், அர்த்தமற்ற இந்தச் செயல் வளையத்தில், இலட்சியங்களுக்கு இட மேது? என்றல்லவா நினைக்கிறீர்கள்.

கொஞ்சம் இருங்கள். உங்களுக்கு ஞாபகம் இருக்குமே கந்தர்வலோகத் தையும், ஸத்ய லோகத்தையும், தர்ம லோகத்தையும், மதராஸ் வீரராகவ முதலித் தெருவின் பக்கத்தில் அல்லவா தமிழ்க் கவிஞன் பாரதி கண்டது? 'ஜட்கா வண்டிகள், துரைகள் போகும் கோச்சுகள், புழுதி, இரைச்சல், துர்நாற் றம் இவற்றை யெல்லாம் கடந்து, முன் பகுதியிலே பசுமாடு, ராயர் வீட்டம்மாள், குழந்தைக் கூட்டங்கள் முதலிய விபத் துக்களுக் கெல்லாம் தப்பிப் பின் புறத் திலே மெத்தைக்கு' வருகிருர் பாரதி. அங்கே பழைய வாழ்க்கை வளையம்: 'குழந்தைக்குக் காய்ச்சல். மனைவிக்குக் காது வலி. அவருக்குப் பித்தக் கிறு கிறுப்பு. இத்யாதி, இத்யாதி.' இது அவருடைய வெளிப்படையான தின சரி வாழ்க்கை; நம்முடையதைப் போன்றதுதான். ஆனல் அவருக்குக் கவிதையுள்ளம் இருந்தது. பத்திரிகைக் குப்பை, பழம்பாய், புகையிலைக் காம்பு இவற்றின் நடுவிலிருந்து குயிலின் காதல் உலகத்தை அவர் பார்க்க முடிந்தது. "வீதிக் கதவை அடைப்பதும், கீழ்த் திசை விம்மிடு சங்கொலியும் வாதுகள் பேசிடு மாந்தர் குரலும் மதலையழுங் குர லும்,' வீதியிலே ஏழை யொருவன் 'அன் னக்காவடிப் பிச்சையம்மா!' யென்று ஏங்கும் குரலும், அவருடைய மனத்திற் குக் குதிரைகளாய் அமைந்தன, 'சீதக் கதிர்மதிமேற் சென்று தேனுண்ண'.

இம்மாதிரியான இலட்சிய மனோ பாவம் பெற்ருல், தினசரி வாழ்க்கை எதுவாய் இருந்தாலும் ரஸமுள்ளதாகி விடும். களிமண் யானையை இழுத்துச் செல்று 'யானை வருகிறது, வழி விடுங் கள். இல்லாவிட்டாற் கொன்றுவிடும்' என்று சொல்லுகிற குழந்தையைப் பார்த்து நகைக்கிருேம். ஆனல் நமது தினசரி வாழ்க்கையாகிய களிமண் பொம் மைகளில், உயிரும் உணர்ச்சியும் காணும் கவிதை யுள்ளம் படைத்துவிட்டோ மானல் சிறுமை விலங்கு அற்றுவிடும்; தினசரி வாழ்க்கையின் மாருப் பழமையும் கைப்பும் நீங்கிவிடும். இலட்சியங்கள் தோன்றும்; உணர்ச்சி பெருகும்; புதுமை உதயமாகும். தினசரி வாழ்க்கை தெய்வ வாழ்க்கை யாகிவிடும்.

[குறிப்பு: ஆகஸ்டு மீ 24வ யன்று திருச்சி ரேடியோ நிலையத் தில் நிகழ்த்தப்பட்ட பிரசங்கம். நிலையத்தார் அநுமதி பெற்றுப் பிரசுரிக்கப் பெற்றுள்ளது.]

---

ஒரு குதிரை தன் கனத்தைப்போல் ஐந்து மடங்கு அதிக பளுவை இழுக்கும். சிறிய பூச்சிகள் தங்கள் எடையைப் போல் 150 முதல் 530 மடங்கு எடைகளை இழுக்கும். தட்டாத்திப் பூச்சி நாலு நெல் எடை உள்ளது. அது 80 நெல் எடை யைத் தூக்குகிறது. உருளும் வண்டு தன் பளுவைப்போல் 162 மடங்கைத் தள்ளுகிறது.

*செக்காவ் சித்திரம்:*

# ஸலூனில் கருமி

(க. நா. சுப்ரமண்யம்)

**கா**லே: மணி இன்னும் ஏழு அடிக்க வில்லை. ஆனல் அவனுடைய ஸலூன் திறந்திருக்கிறது. நாவிதன் தன் கடையைச் சுத்தப்படுத்திக் கொண்டிருக்கிறன். சுத்தப்படுத்த அங்கு ஒன்று மில்லை; எனினும், அவன் வியர்க்க விறுவிறுக்கச் சுத்தப்படுத்துவதில் ஈடுபட்டிருக்கிறன். ஒரு துணியைப் போட்டு ஒரு இடத்தைத் துடை துடை என்று துடைத்துக் கொண்டிருக்கிறன். அந்த இடம் அவன் துடைப்பதால் பளபள வென்று ஆகிவிடப் போவதில்லை. அது அவனுக்கும் தெரியும்; ஆனல் அவன் துடைப்பதை நிறுத்துவதாக இல்லை. இன்னொரு இடத்தில் கைவிரலால் நோண்டுகிறன். நாற்காலி இடுக்கில் ஓடி ஒளிந்துகொள்ள முயலும் மூட்டைப் பூச்சியைப் பிடித்துச் சுவரில் தேய்த்து நசுக்குகிறன். அந்த நாவிதனுக்கு வயது இருபத்திரண்டுதான் இருக்கும். வெள்ளையாக உடை அணிந்திருக்கிறன். ஆனல், அவன் முகத்தில் எண்ணெய் வழிகிறது.

ஸலூன் ரொம்பச் சின்னதுதான்; மிகவும் குறுகியது. அதன் சுவர்கள் எல்லாம் ஒரே அழுக்கடைந் திருக்கின்றன. ஸலூனின் இரண்டு சிறிய ஜன்னல்களுக் கிடையே ஒரு கதவிருக்கிறது. கதவுக்குமேல் ஒரு சின்ன மணியிருக்கிறது. ஏதாவது அசைவு ஏற்பட்டால் போதும்; அந்த மணி, காரண காரியமில்லாமல், நொண நொண வென்று, சீக்காளியின் மூச்சு அடித்துக் கொள்ளுவது போல் அடித்துக்கொள்ளுகிறது. சுவரில் மாட்டியிருக்கும் நிலைக் கண்ணடி, தன்னைப் பார்ப்பவரின் உருவத்தைத் தயாதாட்சண்யமின்றிக் குறுக்கி, நீட்டி, சர்வ கோணலாக்கிக் காட்டுகிறது. முகக்ஷவரம், மயிர் வெட்டுதல் எல்லாம் இந்தக் கண்ணடி முன்தான் நடக்கும். அந்தக் கண்ணடிக் கருகில், நாவிதனைப் போலவே எண்ணெய் வழிந்த தோற்றத்துடன், ஒரு மேஜை கிடக்கிறது. அதன்மேல் க்ஷவரத் தொழிலுக்கு வேண்டிய சாமான்கள் —சீப்பு, கத்திரி, பவுடர், சோப், பிரஷ் எல்லாத் தளவாடங்களும் காணப்படுகின்றன. அந்த ஸலூனையும், அதிலுள்ள சாமான்களையும் விற்ருல், ஒரு காசு பெருது என்பது நிச்சயம்...

**க**தவுக்கு மேலிருக்கும் ஓட்டை மணி இதோ கதவு அசைவதால், நொண நொண என்று அடித்துக் கொள்ளுகிறது. ஒரு கிழவன் உள்ளே வருகிறன். அவன் ஒரு பெரிய சால்வையைத் தலையின் மேல் போட்டுப் போர்த்திக் கொண்டிருக்கிறன். அவன் நாவிதனின் அத்தை புருஷன். ஒரு காலத்தில் பாங்கியில் காவல்காரனுக இருந்தான். இப்போது பூட்டு-சாவி ரிப்பேர் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறன்.

"என்னப்பா? என்ன? சேமந்தானே?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே வருகிறன் கிழவன். நாவிதன் தன் நிலைக் கண்ணடியைச் சுத்தம் செய்வதில் மும்முரமாக ஈடுபட் டிருக்கிறபடியால், பதில் சொல்லவில்லை.

போர்வையை எடுத்து ஒரு ஆணியில் மாட்டுகிறன் கிழவன். ஒரு தரம் கனைத்துக் கொள்ளுகிறன்; பெருமூச்சு விடுகிறன்; அப்புறம் சொல்லுகிறன்: "உன் கடைக்கு வர்ரதுக்கு எவ்வளவு தூரம் நடக்கவேண்டி யிருக்குது! ஆயாடி! எவ்வளவு தூரம்!"

"வாருங்க! சேமமா?"

"ஏதோ சேமந்தா னப்பா. எனக்கு நடுப்பற, காய்ச்சல் அடிச்சுது..."

"காய்ச்சலா? காய்ச்சலா அடிச்சுது?"

"ஆமாம். நடுப்பற ஒரு மாசம் படுத்த படுக்கைதான். நான் இறந்தே போய்டுவேன் இன்னு எண்ணிட்டேன்... என் மயிர் ஜாஸ்தியா வளந்துடுச்சு. சவரம் பண்ணிக்கத்தான் வேணுமின்னு டாக்டரு சொன்னரு. மறுபடியும் தானே வளருது...அதான் நம்ப மருமவனிடம் போவோ மின்னு இங்கே வந்தேன். வேறே யார் கிட்டேயாவது போறதை விட, உன்னிடம் போறதே சரி இன்னு வந்தேன்...எனக்குன்னு கவனமாய் வெட்டிடுவாய்; காசும் வாங்கிக் கொள்ள மாட்டாய்...உன் கடை ரொம்பத் தூரமாய்த்தான் இருக்குது. இருந்தாலும் என்ன? நடந்தே வந்துட்டேன். நடந்தது கொஞ்சம் சிரமமாத்தான் இருக்குது..."

"இப்படி உக்காருங்க. தலைமயிரை வெட்டுறேன்" என்று ஒரு நாற்காலியைக் காட்டிக்கொண்டே கூறினன் நாவிதன். கிழவன் அந்த நாற்காலியில் உட்கார்ந்து எதிரில் இருக்கும் கண்ணடியில் தன் முகத்தை பார்த்துக் கொள்ளுகிறன். அவனுடைய விகார முகத்தை மேலும் கோரமாக்கிக் காட்டுகிறது அந்தக் கண்ணடி. கிழவன் தோளில் ஒரு வெள்ளைத் துணியைப் போட்டு மூடுகிறன் நாவிதன்; அந்த வெள்ளைத் துணிமேல் திட்டுத் திட்டாக அழுக்கும் மஞ்சள் பொட்டுக்களும் காணப்படுகின்றன. கையில் கத்திரியை எடுத்துக்கொண்டு சுத்தப் படுத்துகிறன் நாவிதன்.

"தலையை மழுங்கச் சிரைச்சுடட்டுமா?"

"சிரைச்சு விடேன்! பூசணிக்காய் மாதிரி ஆயிடும். அதனல் என்ன? பரவாயில்லை. மயிர் அப்புறம் தானே அடர்த்தியா வளர்ந்துடுது."

"அத்தை சேமமா?"

"இருக்கா...சேமந்தான்..."

"ம்...இந்தக் காதை இப்படி மடிச்சுப் பிடிச்சுக்குங்க."

"பிடிச்சுக்கறேன். ஆனல் சாக்கிரதையா வெட்டு. கத்திரிக்கோல் வெட்டறப்போ மயிரையும் பிடிச்சு இழுக்குது. எப்பா! வலிக்கிது..."

"உங்க பெண்ணு சேமமா?"

"என் பெண்ணு? அவ சேமந்தான். சந்தோசமாயும் இருக்கா. போன புதன் கிழமை அவளைப் பரிசம் போட்டுக் கொடுத்துது. நீயேன் அதுக்கு வரல்லே?"

**க**த்திரியின் சத்தம் திடீர் என்று நின்று விடுகிறது. கையைத் தொங்க விட்டுக் கொண்டு, மிரண்டவன் போலக் கேட்கிறன் நாவிதன்: "யாரைப் பரிசம் போட்டுது?"

"என் பெண்ணைத் தான்."

"ஏன்? யாருக்கு?"

"உனக்கு அவனைத் தெரியாது. எங்களுக்கு அடுத்த தெருவிலே இருக்கான் அவன். அவனுக்குச் சொந்தமா அதே தெருவிலே ஒரு வீடும் இருக்குது. அவன் ரொம்ப நல்ல பையன். இந்த விசயத்திலெ எங்கள் எல்லோருக்கும் ரொம்பத் திருப்தி. கலியாணம் இன்னும் இரண்டொரு வாரத்திலே நடக்கும். நீ அதற்கு வராமெ இருந்துடாதே!"

"இது என்னமா இப்படி நடந்திச்சு?" என்று கேட்கிறன் நாவிதன். அவனுக்கு ஆச்சர்யமும் பிரமிப்பும் தாங்கமுடிய வில்லை. "அது...அது எப்படி முடியும்? அவளை...அவளை...என்...

நான் அவள் கிட்ட ஆசை வெச்சிருந்தேனே! அவளை நான் கலியாணம் பண்ணிப்பதாக எண்ணி யிருந்தேனே! இது எப்படி நடந்திச்சு?"

"என்? நாங்க பரிசம் போட்டாச்சு. அவ்வளவு தான். அவன் ரொம்ப நல்ல பையன்."

நாவிதன் முகத்தில் வியர்வை அரும்பி வழிந்து ஓடுகிறது. கத்திரியை மேஜை மேல் போட்டு விட்டுக் கையால் தன் மூக்கைச் சொறிய ஆரம்பிக்கிறான்.

"நான் உங்க பெண்ணைக் கலியாணம் பண்ணிப்பதாக எண்ணி யிருந்தேன்" என்கிறான் மறுபடியும்: "நீங்க இப்படி ஏற்பாடு செய்துட்டது தப்பு. நான்... நான் அவள் கிட்டப் பிரியம் வெச்சிருந்தேன். அவளும் என் கிட்டப் பிரியம் வெச்சிருப்பதாய் ஒப்புக்கொண்டாளே! அத்தையும் சரி யின்னு சொன்னாள்... உங்ககிட்ட நான் ரொம்ப மரியாதை வெச்சிருந்தேனே; எங்க தகப்பனாரை விட இல்லெ பெரியவரா உங்களை மதிச்சிருந்தேன்! இவ்வளவு நாளும், கூலியில்லாமே, உங்க தலை மயிரை வெட்டி யிருக்கேன்...உங்க விருப்பத்துக்கு விரோதமா நான் நடந்துக்கிட்டதே கிடையாது. ஞாபகம் இல்லியா, என் அப்பா இறந்ததும் வீட்டிலிருந்த நாற்காலியையும் பணத்தையும் நீங்கதானே எடுத்துக்கிட்டுப் போனீங்க! திருப்பிக் கொடுத்தீங்களா? இல்லை, நான் தான் எதாவது ஆச்சேபனை செய்தேனா?"

"அது சரி. எனக்கு அதெல்லாம் ஞாபகம் இருக்குது. ஆனால் யோசிச்சுப் பாரு, நீ அவளைக் கலியாணம் பண்ணிக்க முடியுமா? உனக்குப் பணம், பதவி, பவிசு ஒண்ணுங் கிடையாதே! நீ செய்யும் இந்தத் தொழிலிலே வருவாய் ஏது?"

"பரிசம் போட்டிருக்கிங்களே, அவன் பணக்காரனா?"

"அவன் கோவாப்பரடிவ் சங்கத்திலே சேர்ந்தவன். ஒரு ஆயிரத்தைந்நூறு நல்ல இடத்திலே வட்டிக்குப் போட்டு வெச்சிருக்கான்...அதைப் பத்திப் பேசிப் பிரயோசன மில்லை. செய்தது செய்தாயிடுச்சு; அதை மாத்த முடியாது. நீ வேறே ஒரு நல்ல பெண்டாட்டியாய்ப் பார்த்து கட்டிக்கவேண்டியது தான். அப்படி உனக்குன்னு ஒருத்தி அகப்படாமலா போயிடுவா?...சரி, அது கிடக்கு. மயிரை வெட்டறதைப் பாதியிலெ நிறுத்திட்டையே! அட பாக்கியும் வெட்டுங்கறேன்..."

## புருஷ விக்கிரகங்களுக்கு

(வி. ரா. ராஜகோபாலன்)

[ஜன சமூக வளர்ச்சிக்கு, கேலிக்கைகளும் நையாண்டிகளும் அவற்றை யனுபவிக்கும் ஹாஸ்ய உணர்ச்சியும் மெத்த அவசியம். இது ஓர் நையாண்டிப் பாடல். கடற்கரையிலே, ஓர் வாலிபர், சர்வாலங்காரம் செய்து கொண்டு, 'கண்டதும் காதலை' எதிர் பார்த்தவராய் நிற்கிறார். அந்த 'மன்மத'னைப் பார்த்து ஓர் விஷமக்காரி பாடுகிறாள்.]

காலரைத் தூக்கி மேலே
கழுத்தினை மூடிவிட்டுக்
கோலமில் கொக்குப் போன்ற
கொடிக் கழுத்ததனைச் சுற்றிச்
சாலவு மதிகம் நீண்ட
சரிகை மேல்துண்டைச் சாரை
போலவே யணிந்து நிற்கும்
போதுநா னிறக்கின்றேனே!

பூட்சுடன் சூட்டும் ஹாட்டும்
பொலிவுட னணிந்து கொண்டு
கோட்டினி லுள்ள பையில்
கொடி யென இளைத்து நீண்ட
வாட்டமில் கைகள் தன்னை
வைத்தெழில் நாங்கள் காணக்
காட்டி அக்கடலி னோரம்
கடுந்தவம் செய்த லேனோ?

நாவித இளைஞன் ஒரு வினை மௌனமாக நிற்கிறான். அப்புறம் தன் சட்டைப்பையி லிருந்து ஒரு கைக்குட்டையை எடுத்துக் கண்ணை மூடிக்கொண்டு விம்ம ஆரம்பிக்கிறான்.

"வா, அப்பா! இதென்ன இது?" என்று அவனைத் தேற்றப் பார்க்கிறான் கிழவன். "போதும், அளாதே! நிறுத்து. பொம்பளை மாதிரி அள உனக்கு வெக்கமா யில்லை?...மயிரை வெட்டறத்தை முடிச்சுட்டு அழு! வா. நாளியாகுது."

நாவிதன் கத்திரியை எடுக்கிறான். அதை ஒரு நிமிஷம் உற்றுப்பார்த்துக் கொண்டே நிற்கிறான். அப்புறம் மறுபடியும் அதை மேஜைமேலே போடுகிறான். அவன் கைகள் 'வெட வெட' வென்று நடுங்குகின்றன.

"என்னாலே முடியாது" என்கிறான் அவன். "இப்போ என்னாலே உன் தலைமயிரை வெட்டமுடியாது. இப்போ அதுக்கு வேண்டிய பலம் எனக்கில்லை. எனக்கு ரொம்பவும் வருத்தமாயிருக்குது; அவளும் வருத்தப்படுவா. நாங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் நேசம் வெச்சோம்; கலியாணம் பண்ணிப்பதாய் வாக்குச் செய்துக்கிட்டோம். ஈவு இரக்க மில்லாத உன் மாதிரி மனிசங்கள் எங்களைப் பிரிச்சு வெச்சுட்டான்கள். போ! இங்கே நிக்கவேண்டாம். உன்னைக் கண்ணாலே பார்க்கவே பிடிக்கல்லை எனக்கு."

"அப்போ நான் நாளைக்கு வர்ரேன். பாக்கி மயிரை நாளைக்கு வெட்டு நீ."

"சரி"

"நீ அளாதே! நான் நாளைக்கு அதிகாலையிலெ வர்ரேன்."

கிழவனின் தலையில் ஒருபாதி நன்றாக மொட்டை யடிக்கப்பட்டிருக்கிறது. மற்றொரு பாதியில் நிறைய மயிர் வளர்ந்திருக்கிறது. பார்க்கக் கைதி மாதிரி தோற்றம் அளிக்கிறான்! விகாரமாகத்தான் இருக்கிறது. ஆனால் வேறென்ன பண்ணுவது? சால்வையால் முக்காடிட்டுத் தலையை மூடிக்கொண்டு ஸலூனில் இருந்து வெளியேறுகிறான் கிழவன். தனியாக விடப்பட்ட நாவித இளைஞன் துக்கத்தில் ஆழ்ந்தவனாக உட்கார்ந்திருக்கிறான்.

மறுநாள் அதிகாலையில் கிழவன் மறுபடியும் ஸலூனுக்குள் வருகிறான்.

"உனக்கு என்ன வேணும்?" என்று கேட்கிறான் நாவிதன்.

"என் தலை மயிரில் பாதியைத்தானே வெட்டினை நேத்து? இன்னிக்கி மறு பாதியையும் வெட்டிடு."

"சவரக் கூலியை முன்னாலெ கொடு. அப்படிக் கொடுத்தால்தான் வெட்டிடுவேன்" என்றான் நாவிதன்.

ஒரு வார்த்தைகூடப் பதில் பேசாமல் வெளியேறுகிறான் கிழவன். காசு கொடுத்து க்ஷவரம் செய்து கொள்ளுவதா! அதில் துளிக்கூட நம்பிக்கை இல்லாதவன் அவன். இன்று வரையில் அவன் தலையில் ஒரு பாதியில் மயிர் நீளமாகவும், மறு பாதியில் குட்டையாகவும்தான் இருக்கிறது. தானாக வளர்ந்து சமனாகட்டும் என்று இருக்கிறான் அவன்.

தன் மகளின் கலியாண தினத்தன்றும் அதே கோலத்திலேதான் காட்சி யளித்தான் கிழவன்.

---

# செட்டிமார் நாட்டிலே

(கு. ப. ராஜகோபாலன்)

சமீபத்தில் செட்டிமார் நாட்டில் சுற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நாலைந்து வருஷங்களுக்கு முன்பு உத்தியோகத்திலிருந்த பொழுதே எனக்குச் செட்டிமார் நாட்டுத் தொடர்பு கொஞ்சம் உண்டு. ஆனால் நான் அப்பொழுது அங்கே அதிகம் சுற்றினது கிடையாது. காரைக்குடிக்கு மட்டும் தான் போயிருக்கிறேன்.

செட்டிமார் நாடு என்று வழங்கப்படும் பெரும் பொட்டல் பிரதேசத்தில் நம் தமிழ் நாட்டின் ஒரு வகுப்பினர் பெரும்பாலாகக் குடியேறி, தமது ஊக்கத்தால் அங்கே ஊருணிகளையும் குளங்களையும் தோற்றுவித்து, உயர்தரமான கட்டிடங்களையும் எழுப்பி இருக்கிறார்கள் என்ற ஒரு நினைப்பே என் மனதை வெகு நாளாகக் கொள்ளை கொண்ட விஷயம்.

நேரில் பார்த்தபோதுதான் தெரிந்தது. அந்த மண்ணில்தான் அப்பேர்ப்பட்ட ஊக்கமும் செட்டுக்கட்டும் செல்வப் பெருக்கும் ஏற்படும். நதிகள் ஓடி இருகரைகளையும் வளப்பமேறிய வயல்களாகச் செய்த இடங்களில், சுக ஜீவனமும் சோம்பலும் ஊதாரித்தனமுமே அதிகரிக்க இடமேற்படுகிறது.

நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் குடியேறிய பூமி கள்ளர் நாட்டைக் காட்டிலும் காடாரம்பம். அதனால்தான் அந்த வகுப்பினர் திரைகடலோடித் திரவியம் தேட முற்பட்டார்கள். தமிழ்நாடே பெருமை கொள்ளும்படியான பொருள் சேகரம் செய்தார்கள்.

எங்கோ கண்காணாச் சீமை என்பார்களே அந்த மாதிரி நாடுகளுக்குப் போய் உழைத்துப் பாடுபட்டுப் பணம் சம்பாதித்துக்கொண்டு வந்து என்ன செய்தார்கள்? செட்டி நாட்டைச் சிறப்பித்தார்கள்; பொட்டலைப் பொற்களஞ்சியமாக்கினார்கள்.

அது மட்டுமா? அதிலிருந்து பணத்தை வாரி யெடுத்துத் தமிழ் நாட்டிலும் பல திக்குகளில் கொட்டினார்கள். கோவில்களிலும் குளங்களிலும் பாடசாலைகளிலும் பசு மடங்களிலும் சத்திரங்களிலும் செட்டிமாருடைய மிதமிஞ்சிய ஆசை புத்துருவம் பெற்றது. மதத்திற்கும் கலாச்சாரத்திற்கும் சரியான சமயத்தில் செட்டிமார்கள் கை கொடுத்திரா விட்டால், இன்று நாட்டில் எவ்வளவு சீர்கேடு ஏற்பட்டிருக்கும்?

திருக்களார் என்ற சிறிய ஊருக்குப் போயிருந்தேன். அது திருத்துறைப் பூண்டிக்கு அருகில் உள்ள சிவஸ்தலம். ஞானசம்பந்த மூர்த்தியின் வாக்கில் பாடல் பெற்ற ஸ்தலம். அந்த க்ஷேத்திரத்திற்குச் செட்டிமார்கள் புத்துயிர் அளித்திருக்கிறார்கள். கோவில் காலத்தில் பூஜைகள் நடக்கின்றன. கோவிலையே புதுப்பித்துக் கும்பாபிஷேகம் பண்ணப் பட்டிருக்கிறது. வேதகோஷமும் தேவார கோஷ்டியின் இனிய கீத்தமும் அவ்வூரில் காதில் விழுந்துகொண்டே இருக்கின்றன. 'செய்வன திருந்தச் செய்' என்ற வாக்கைத்தான் செட்டிமார்கள் தங்கள் ஒவ்வொரு கோவிலிலும் காட்டுகிறார்கள் என்பது அவர்களுடைய திருப்பணிகளிலிருந்து நன்றாகத் தெரிகிறது.

இந்தத் தலைமுறையில் செட்டிமார்கள் இன்னுமொரு படி மேலே போய் விட்டார்கள். நவயுகத்தின் முற்போக்கான துறைகள் எல்லாவற்றிலும் அவர்கள் தலை கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். உயர்தரப் படிப்பு, இலக்கிய அபிவிருத்தி, சங்கீத முன்னேற்றம், சினிமா, பத்திரிகை—இவற்றிலும் கூட அவர்கள் மும்முரமாக ஈடுபட்டு வேலை செய்கிறார்கள்.

புதுக்கோட்டையிலிருந்து தேவகோட்டை போனபோதும், தேவகோட்டையிலிருந்து காரைக்குடி வழியாக அறந்தாங்கி வரையில் போனபோதும், இந்த எண்ணங்கள் தான் என் மனதில் உதித்துக் கொண்டே இருந்தன. பஸ் மூலமாகவும் கார் மூலமாகவும் சாவதானமாக இஷ்டமான இடத்தில் தங்கிப் பிரயாணம் செய்ததால், நாட்டின் மூலைமுடுக்குகளையெல்லாம் நன்றாகப் பார்க்க முடிந்தது.

இப்பேர்ப்பட்ட ஊக்கமும் செயல் சக்தியும் தாராள புத்தியும் கொண்ட வகுப்பார்களை நம்மிடையே வைத்துக் கொண்டு நாம் எதைத்தான் சாதிக்க முடியாது என்று தோன்றிற்று. இவர்கள் இப்படி இருப்பதற்குக் காரணம் என்ன என்ற கேள்விதான் மறுபடியும் மறுபடியும் அந்தப் பிரயாணத்தின் போது என் மனத்தில் உதித்தது

பொட்டல் பூமி ஒரு காரணம் என்று மேலெழுந்த பார்வையிலேயே தெரிந்தது. ஆனால் முக்கியமான காரணம் வேறொன்று. செட்டிமார் நாட்டு மாதர்கள்தான் அந்தக் காரணம் என்று பிரயாணத்திலேயே தெரிந்து கொண்டேன். அப்பேர்ப்பட்ட செல்வத்தின் ராணிகளாக இருக்கும் அந்த மாதர்களின் ஆடம்பரமற்ற வாழ்க்கை முறையும் செட்டுக்கட்டும் நேர்மையும்தான் செட்டிமார்களுக்கு ஒரு பெருத்த உதவியாக இருந்திருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. இப்பொழுதுதான் அங்கும்—அந்த நிகரற்ற அந்தப்புரத்திலும்—நவநாகரிகம் தனது கோர ஆர்ப்பாட்டத்துடன் நுழைந்து விட்டது.

அதற்கு முன்னால் தனவணிகப் பெண்கள் சில அம்சங்களில் நிகரற்றவர்களாகவே இருந்தார்கள் என்பது இன்னும் சில இடங்களில் நன்றாகத் தெரிகிறது. நல்ல உடற்கட்டும் இயற்கை வாளிப்பும் ஆரோக்கியமும் அவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் கூந்தலை அள்ளிச் செருகும் அழகிலும் சேலை உடுக்கும் செருக்கிலும் ஒரு தனி காம்பீர்யம் இருக்கிறது.

செட்டிமார்களுடைய இல்லற வாழ்க்கையின் உயர்ந்த அமைப்புத்தான் அவர்களைத் தானத்திலும் தர்மத்திலும் ஈடுபடச் செய்திருக்கிறது. அந்த அமைப்பு சீர்குலையாமல் இருக்க வேண்டும் என்பதுதான் என் பிரார்த்தனை.

செட்டிமார் நாட்டுப் பிரயாணம் நான் இதுவரையில் கண்டறியாத ஒரு புதிய அனுபவமாக இருந்தது. செட்டிமார் நாடு பூராவுமே ஒரு பிரம்மாண்டமான மாளிகைபோலவும், நகரங்கள் அதன் பல பகுதிகள் போலவும், பெரிய விடுதிகள் அவற்றின் பாகங்கள் போலவும் நான் எண்ணலானேன். அந்த மாளிகையின் நடுவில் அதன் பெருத்த அங்கணங்களில் தேவமகளிர் போலத் தனவணிக மாதர் நடமாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய அங்கங்களின் இயக்கங்களுக் கிணங்க, நாட்டில் திருப்பணிகள் வளர்வது போலத் தென்பட்டது.

அந்தப் பிரயாணம் பூராவும் ஒரு கனவாக இருந்தது. கடைசியில் காரைக்குடியில் ரயில் ஏறிப் புதுக்கோட்டை தாண்டின பிறகுதான், அந்தக் கனவு மாறிற்று.

---

## 'கிராமக்' காதல்

(தீ)

மச்சினி

வெற்றிலைச் சருகிருக்கு
வெட்டிய பாக்கிருக்கு
மற்றது ஒண்ணிருக்கோ
மச்சானுன் மடிதனிலே

மச்சான்

மச்சினிதன் மனம்போலே
மச்சான்என் மடிதனிலே
வச்சிருக்கேன் வெண்ணெய்
போலே
வாசனைச்சுண்ணம்புதானே.

மசினி

வெண்ணெய்ச்சுண்ணம்புதனை
வெற்றிலையி லேதடவி
கண்ணான மச்சானுக்குக்
கட்டழகி நான் கொடுப்பேன்.

மச்சான்

கட்டழகி சுருள் கொடுத்தால்
கட்டிமுத்தம் நான் கொடுப்பேன் ;
கெட்டபய மவளடி நீ :
கெட்டபய மவனடி நான்.

# உடம்பும் மருந்தும்

நினைத்ததும் விழிப்பு :—தினந்தோறும் எட்டு மணி வரையில் தூங்கிக் கொண்டிருக்கும் ஒருவன், "நாளைக் காலை ஐந்து மணிக்கே எழுந்து ரயிலுக்குப் போக வேண்டும்" என்று எண்ணிக் கொண்டே படுக்கிறான். அப்படியே எழுந்தும் விடுகிறான். இதேமாதிரி, எந்த நேரத்தில் எழுந்திருக்க வேண்டுமென்று உத்தேசித்தாலும் அந்தப்படி தூக்கம் விழிக்கும் சக்தி அநேகருக்கு இருக்கிறது. இதன் காரணம் என்ன?

மனிதன் தூங்கும் போது, அவனது காதுமட்டில், இராக் காவலனைப் போல் நன்றாய் விழித்துக் கொண்டே தானிருக்கிறது. இராத்திரி அந்தந்த நேரத்தில் அடிக்கும் மணிகள், ஊதும் சங்குகள், இதர சத்தங்கள், கூவல்களையெல்லாம், காது நம்மை யறியாமலே நன்றாகக் கவனித்து வைத்துக் கொண்டிருக்கிறது. காலை அஞ்சு மணிக்குப் பால்காரி தெருவிலே கூவும் சத்தத்தைக் கேட்டதும், "இதோ அஞ்சு மணி ஆகிவிட்டது" என்று, காது உடனே மூளைக்குத் தெரிவித்து எழுப்பி விடுகிறது. இதே மாதிரி மற்றச் சிறு ஒலிகளைக் கொண்டு கூட நேரத்தை நிர்ணயித்து, மூளைக்கு அது அறிவிக்கிறது. ஒருவன் நினைத்தபொழுது தூக்கம் விழிக்க உதவுவது செவிப் புலன்தான்.

* * *

உடலின் 'டைனமோ'க்கள் :—பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரஞ்சு தேசத்துத் தலைநகரான பாரிசில் வசித்து வந்த சிறந்த வைத்தியர் ஒருவரை, சகோதர வைத்தியர்கள் ஜாதிப்பிரஷ்டம் செய்தனர். ஏன்? அவ்விதத் தண்டனையைப் பெற, அவர் அப்படி என்ன குற்றம் செய்துவிட்டார்? மனித உடல் ஆரோக்கியமாக வளரவும் நிலை பெற்றிருக்கவும், உடலின் உள்ளே தலை, கழுத்து, வயிறு, அரை இவ்விடங்களில் தசைப் பந்துகள் போன்ற அவயவங்கள் இருந்து, ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான ரசத்தைக் கசிந்து கொடுத்து உதவுகின்றன. இதை முதன் முதலில் கூறியவர் டாக்டர் பிரவுன் சிக்வார்டு என்ற இவரே. அக்காலத்துப் பாரிஸ் வைத்தியர்களுக்கு இதெல்லாம் தெரியாததால் இதைக் கூறிய டாக்டர் பிரவுனை மோசக்காரன் என்று முடிவு செய்து தண்டித்து விட்டார்கள். இவருக்கு இன்று அதே பாரிசில் ஓர் உருவச் சிலை அமைத்திருக்கின்றனர்.

இவர் கூறியவை யாவும் உண்மை என்பதை இன்று உள்ள வைத்தியர்கள் அறிவார்கள். ஹட யோக, ராஜ யோகப் பயிற்சிகளும் பிரம்மசர்யத்தின் விசேஷ நன்மைகளும் நமக்கு நமது முன்னோர்கள் உபதேசித்துச் சென்றனர். அந்தப் பயிற்சிகளால் முக்கியமாக இந்த அவயவங்கள் சரீரத்திற்கு வேண்டிய ரசங்களைக் கசிந்து கொடுக்கின்றன. இந்த ரசங்களைச் சரீரத்தைத் தவிர மற்ற வெளிப் பொருள்களிலிருந்து உண்டாக்க முடியாது. இந்த அவயவங்களைக் காக்கவேண்டிய அவசியமும் இவற்றின் ரசங்களை வீணாக்காமல் காத்துக் கொள்ளவேண்டிய முக்கியமும் இதனால் நமக்கு நன்கு விளங்கும்.

* * *

'திடீர் மாரடைப்பு உண்டா?' :- 'அவனுக்குத் திடீரென்று மாரடைப்பு வந்தது; மாண்டுபோய் விட்டான்' என்று சொல்லுவதை நாம் கேள்விப்பட் டிருக்கிறோம். ஆனால், இது உண்மையல்ல. திடீரென்று மாரடைப்பு நேர்வதில்லை. இருதயத்தினிடம் ஏற்கனவே காட்டிய அசிரத்தையும், அதை ஏற்கனவே சிரமப்படுத்தியதும், அதில் ஏற்கனவே நோய் சேர்ந்ததும் தான் திடீரென்று மாரடைப்பு நேர்வதன் காரணம். முந்தியே பலவீனப்பட்ட இருதயத்தின்மீது திடீரென்று ஏற்படும் பரபரப்பு உணர்ச்சி அதிகப்படிச் சுமையாக ஏறிவிடுவதால்தான், மாரடைப்பு நிகழ்கிறது. இதற்கு, அந்த மனிதனின் தினசரிப் பழக்க வழக்கங்களில் சேர்ந்து விட்ட துரப்பியாசங்களைத்தான் முக்கியமாகக் குற்றம் கூற வேண்டும். இயற்கையிலே இருதயம் மகா உறுதியானது. பிறந்தது முதல் இறக்கும் வரையில்

ஓயாமல் உழைப்பதற்கென்றேமகா உரத்தோடு அமைந்தது. அதைச் சரியாகப் பாதுகாத்தால், தள்ளாடும் கிழப்பருவம் வரையிலும் கூட மகா வலிமையாய் அது இருந்துவரும். மனிதன் தானாவே அதைப் பலவீனப்படுத்திக் கொள்ளுகிறான். உழைப்பைக் குறைத்துக்கொண்டு, உடலின் தேவைக்கு அதிகமான உணவுகளைச் சிலர் உண்ணுகிறார்கள். இன்னும் சிலர் மனச்சள்ளை, உற்சாகம், கவலை, பயம் இவற்றுக்கு இடங்கொடுத்து இருதயத்தின் ஓட்டத்தை அதிகப்படுத்துகின்றனர். இருதயத்தை உணவின் மிகுதியால் திணறச் செய்யாமலும் மனோவேதனைகளினால் வாட்ட முறச்செய்யாமலும் நிதானமாகவும் வைக்கப் பழகினால், அதை வெகு காலம் உழைக்கும்படி செய்து, உடலையும் காக்கலாம்.

* * *

பச்சிலை உண்ணும் சூட்சமம் :— எலும்பை வளர்க்கக் கால்ஸியம் என்ற சுண்ணாம்பு சத்து அவசியம். இந்தச் சுண்ணாம்பு சத்து நாம் பிறக்கும்பொழுது குறைவாகவே நமது உடலில் இருக்கிறது. போதிய அளவு இந்த சத்தைப் பெற ஒரு வருஷம் ஆகிறது. பிறகே நமது கைகளும் கால்களும் பலம் பெற்று நடக்க ஆரம்பிக்கிறோம். இந்த சத்தை நாம் முதலில் தாய்ப் பாலைக் குடித்து அதன் வழியே பெறுகின்றோம். அதனால் நமது தாய்மார் இழக்கும் சுண்ணாம்பு சத்தை அவர்கள் திரும்பப் பெற, தொன்று தொட்டுப் பல வழிகளைக் கையாண்டு வருகின்றனர். சுண்ணாம்பு ரசத்தைப் பெறுவதற்காகப் பசுமையான இலைகளையும் தழைகளையும் கர்ப்பிணிகள் சாப்பிடுவது ஓர் வழக்கம். நமது நாட்டில் வெற்றிலையை அதிகமாகக் கர்ப்பிணிகளும், இளந்தாய்களும் உபயோகிக்கின்றனர். மரங்களை எரித்து அதன் சாம்பலை உணவுடன் கலந்து சாப்பிட்டும் வேண்டிய சுண்ணாம்பு சத்தை முற்காலத்தவர் பெற்றுவந்தனர். இன்று வைத்திய சாஸ்திரம் முன்னேறிச் சுண்ணாம்பு சத்தை மாத்திரைகளாகவும் கொடுத்து உதவி வருகின்றது.

வெட்டிவேர் விசிறி :—இதன் குணத்தைப் பற்றி, சென்னை சர்க்காரின் பிரசுரமான குணபாடத்தில் பின்வரும் பாடல் காணப்படுகிறது :

வாச வெட்டிவேர் விசிறி வன்பித்த கோபமொடு
வீசும் எரிச்சலையும் வீழ்த்துங்காண்—பேசுங்கால்
தாக மகற்றும் சகல மனோக்கியமாம்
மோக மருண் மாதே! மொழி.

அதாவது, பைத்திய தோஷம், தேக எரிவு, விதாகம் முதலியன, வெட்டிவேர் விசிறி கொண்டு வீசிக்கொள்வதால் குணமாகும் என்று கருத்து.

வெட்டிவேரின் ஊறல் கஷாயத்தைக் கால் முதல் அரை ஆழாக்கு வரையில், காய்ச்சல், வயிற்று நோய்களுக்குக் கொடுக்கலாம்.

ஒன்று முதல் இரண்டு சொட்டு வெட்டிவேர் எண்ணெயைச் சர்க்கரையில் கலந்து கொடுக்க, ஊழி நோயில் உண்டாகும் வாந்தியை நிறுத்தும்.

---

# இரு எண்ண மணிகள்

(மொழிபெயர்ப்பு : வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.)

## இயற்கைப் படம்

ஆகாசத்தில் மேகக் கூட்டங்கள் ஆனந்தமாய் விளையாடுகின்றன.

சூரியக் கிரணங்களால் நிழல்கள் வருவித்து, மலைக் கூட்டங்கள் போல் அவற்றை வரிசைப்படுத்தி, கிரணஜோதியில் ஜொலித்து மரக்கலம் போல் வானக்கடலில் ஊடுருவிப் பாய்கின்றன. நீல வானத்தில் வெள்ளியும் முத்தும் விநோத வர்ணங்களுடன் மேக ஜாலத்தால் அமைகின்றன. மை வர்ண மேகங்கள் ஊசி மழைத்திரளை உதிர்க்கின்றன.

வானவில், வளைவு கட்டி உலகத்தைக் கண்டு நகைக்கின்றது. புயல் ஒருகால் புரண்டு கதறினால், வானத்தில் குழப்பம்; மின்னல் மின்சாரமும், இடியும் வெள்ளமும், காற்றை எதிர்த்துக் குமுறுகின்றன.

சோக இரவு முகமூடியை விலக்கிச் சிருஷ்டிக் குழந்தைகளைக் காலைக் கதிரில் தோற்றுவிக்கின்றது. சூரியனின் கதிர், முடிவற்ற மகிழ்ச்சிக் கதிர், மண்ணின் பச்சைப்பயிர் ஆடையைப் போற்றி மெருகிட்டு, உலக சாந்தியை அளிக்கின்றது. இள மரங்கள், தங்கள் காவியக் கூந்தல்களை இங்கிதமாய் அசைக்கின்றன; இன்ப நடம் புரிகின்றன. ஆனந்தத் தென்றல் இலைகளைத் தூங்க வைக்கின்றது.

என்ன ரமணீய இயற்கைப் பட ஜோதி!

—ராபர்ட் பிரிட்ஜஸ்.

## காலக்கோடு

காலம் நம்மை அறியாமல் ஓடுகின்றது; நாம் விழிக்கும்போது காலத்தின் உருவம் கரைந்து மறைகின்றது. ஒருவனின் முழங்கை கால வேகத்தில் ஆடும்போது, ஒரு வாரம் அல்லது ஒரு வருஷம் என்ற கால முதிர்ச்சியை உணர்கின்றான். மனித அனுபவத்துக் கெட்டாத கால மர்ம நிகழ்ச்சிகளை, சூரிய வட்டமோ அல்லது கடிகாரமோ சுட்டிக்காட்ட முடியாது. எந்நேரமும் சிந்தனையில் ஆழும் மனம், அனவரதமும் ஆனந்தமாய் ரசிக்கும் மனம், காலத்தை வளர்க்கின்றது. குழந்தைப் பருவத்தில், காலவரையறை நமக்குப் புலப்படுவதில்லை. விளையாட்டும் உணவும் காலக் கோட்டை மீறியே சம்பவிக்கின்றன. உணவும் ஊக்கமும் மாறி மாறி நம்மை வியக்கச் செய்கின்றன. முதல் முதலாய்ப் பள்ளிக் கூட மணியே, நமது ஜீவிய நேரத்தை வகுத்துக் காட்டுகின்றது. விடுமுறை நாட்கள், மணிச் சுமைகளாய்த் தோன்றுகின்றன. மறுபடியும் பள்ளிக்கூடத்தில் நுழையும் போது, காலஅளவு நம் மனத்தைப் பீடிக்கின்றது. வளர வளர, வாலிபன் காலக் கோட்டை உணர்ந்து, மணியின் வரையறையை மறவாது, கடிகார நோக்கமாய் அலைகின்றான். ஆனால், அவனுடைய நிஜ வாழ்க்கையின் ரகசியத்திற்கும், கடிகாரக் கற்பனைக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. இதுவே உண்மை.

—ஆர். எல். ஸ்டீவன்சன்.

# குழந்தையைத் தாங்கும் அல்லி இலை

டாக்டர் ல. காமேசுவர சர்மா,
எம். ஏ., என். டி. (கலிபோர்னியா)

தென்னமெரிக்காவிலே ஓர் ஆச்சர்யமான அல்லி இலை இருக்கிறது. இயற்கைத் தேவியின் அற்புதச் சிற்பம் என்று அதனைச் சொல்லலாம். இந்த அதிசய அல்லியிலையில் இயற்கையெனும் விசுவகர்மா கையாண்டிருக்கும் நுட்பங்களை ஆராய்ந்து, அநுசரித்து, லண்டனில் **ஜோஸப் பாக்ஸ்டன்** என்ற சிற்பி, ஓர் அருமையான **பளிங்கு மாளிகையைக்** கட்டியிருக்கிறார் என்றால், இவ்வாச்சர்ய இலையின் அமைப்புப் பெருமையை நீங்களே யூகித்துக் கொள்ளுங்களேன்.

அந் நாட்டிலுள்ள சிவப்பு இந்தியர்கள், ஆகாரத்துக்காக இந்த அல்லி விதைகளைப் பொறுக்குவது வழக்கம். அப்போது அவர்கள் தங்கள் குழந்தைகளை நீரில் உள்ள இந்த அல்லி இலை ஒன்றின்மேல் வைத்து விடுவார்களாம். குழந்தையின் நிறை சமமாக எல்லாப் பக்கங்களிலும் பகிர்ந்திருக்கும்படி செய்வதற்காக இலையின் மேல் ஒரு பலகைதான் போட வேண்டும். இந்த முன்னெச்சரிக்கை மாத்திரம் எடுத்துக் கொண்டு விட்டால், ஒரு பெரிய அல்லி இலையானது 150 பவுண்டு இடையுள்ள மனிதனையும் தாங்குமாம். 400 பவுண்டு நிறையுள்ள மணல் திரளை இந்த அல்லி தாங்கியதென்று இன்னொரு ஆராய்ச்சியாளர் சொல்லுகிறார். இவ்வளவு பலமும் மிதக்கும் தன்மையும் பெற்றிருக்கும் இந்த இலையின் பாகங்கள் மிக மெல்லியனவாயும் மிருதுவாயும் இருப்பது ஒரு ஆச்சர்யம். மிகச் சிறு வஸ்து ஒன்றைக் கொஞ்ச உயரத்திலிருந்து போட்டாலே, இந்த இலை பொத்து விடும். இந்த இலை, நீரின்மேல் எண்ணெய் மிதக்கிற மாதிரி அவ்வளவு தளுக்காகத் தண்ணீரில் மிதக்கிறது. இப்படி இருந்த போதிலும், மிருகங்களினால் ஏற்படும் சிதைவையும், அலைகள் வந்து மோதுவதையும் எதிர்த்து நிற்கிறது; அநேக நூறு பவுண்டு நிறையையும் தாங்குகிறது!

இதற்கெல்லாம் இந்த இலையின் அடிப்புற அமைப்பே காரணம். அவ்வமைப்பின் விவரம் 'ஸைண்டிபிக் அமெரிக்கன்' என்ற பத்திரிகையில் 1940-ஆம் ௵ மார்ச்சு மாத இதழில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை இங்கே தருகிறோம். இலையின் அடிப்புறத்தில் நீட்டுவாட்டிலும் குறுக்கு வாட்டிலும் 'கர்டர்'களும் 'உத்திரங்க'ளும் இருக்கின்றன. இலையை விட்டுக் காம்பு கிளம்பும் இடத்திலிருந்து நாலா பக்கங்களிலும் பெரிய நரம்புகள் பிரிகின்றன. இவற்றைத் தான் ஜோஸப் பாக்ஸ்டன் என்பவர் 'கர்டர்கள்' என்கிறார். இவை குறுகலாகவும் ஆழமாகவும் இருக்கின்றன; வெளி ஓரத்தில் கொஞ்சம் தட்டையாக இருக்கின்றன. இந்தக் கட்டிடத்தின்மேல், அந்த மெல்லிய தட்டையான இலை உட்கார்ந்திருக்கிறது.

இலையையும் அடிக் கட்டிடத்தையும் இணைக்கக் கூடிய நெசவு வலை மிகவும் மிருதுவாக இருக்கிறது. ஒரு சிறிய இலையின் மத்தியிலுள்ள பிரதான 'கர்டர்கள்' சுமார் இரண்டு அங்குல உயரம் இருக்கின்றன; ஓரத்தில் அவற்றின் அகலம் ஒரு அங்குலத்திற்கும் குறைந்து விடுகிறது. மத்தியிலிருந்து பாதி தூரத்தில் இவை உயரத்தில் ஒரு அங்குலமும், அகலத்தில் கால் அங்குலமும் இருக்கின்றன. செங்குத்தான நிலையில் இவை, குறுக்குக் கைகளினால் தாங்கப்படுகின்றன. இக் குறுக்குக் கைகள் வெளி வட்டத்திற்குச் சமதூரத்தில் இருக்கின்றன; இவை பிரதானக் கைகளின் பக்கங்களில் உதைந்து கொண்டிருக்கின்றன. இவற்றில் அநேகம், உயரத்தில் ஒரு அங்குலத்திற்கு மேல் இருக்கின்றன. இக்குறுக்குக் கைகளைத் தாங்குவதற்கு, குறுகிச் சாய்ந்த அணைசுவர்கள் இருக்கின்றன. இவ்வணை சுவர்கள் இலையில் நன்றாகப் பதிந்து, குறுக்குக் கைகளைச் செங்குத்தாக இருக்கும்படி செய்கின்றன.

இந்த இலைக்கு இருக்கும் வன்மை, அடிக் கட்டிடத்தின் அமைப்பை மாத்திரம் பொறுத்ததல்ல. திடமாகவும் பெரிதாகவும் காணக்கூடிய இந்த 'கர்டர்கள்' உண்மையில் அதி மிருதுவானவை. இவற்றை மிக நுட்பமான பூதக் கண்ணாடியைக் கொண்டு கவனிக்க வேண்டும். இவை, ஒன்றின் பக்கம் ஒன்றாக ஓடிக் கொண்டிருக்கக் கூடிய காற்றுக் குழாய்களால் ஆனவை. அந்தக் காற்றுக் குழாய்கள், மெல்லிய ஜவ்வுகளினால் பிரிக்கப் படுகின்றன. இவற்றுக்குள் குறுக்கே துவாரங்கள் கொண்ட பிரிசுவர்கள் இருக்கின்றன. பிரதான 'கர்டர்க'ளின் பெரும்பாகமும் காற்றடைந் திருக்கிறது. அதனால் இவை உறுதி உள்ளனவாகவும் லேசாகவும் இருக்கின்றன.

இயற்கையுடன் நெருங்கிப் பழகினால், பெரும் பயனளிக்கக்கூடிய அறிவைச் சுலபமாகப் பெறலாம்; இயற்கையைவிட மேலான சிற்பி உலகத்திலில்லை என்பதற்கு, இந்த இலை ஓர் சான்றாகும்.

## காப்பி புராணம்

காபிச் செடி அபிசீனியக் காடுகளில் வளர்கிறது. அரேபியாவில் தான் காப்பியை முதலில் பயிரிட்டனர். ஓர் டச்சுக்காரன் ஜாவாவுக்கு எடுத்துச் சென்று பயிரிட்டான். ஆங்கிலேயன் ஜமைக்காவுக்கு எடுத்துச் செல்ல, அங்கிருந்து தென் அமெரிக்காவுக்குள் காப்பி புகுந்தது. இன்று உலக முழுதுக்கும் தேவையான காப்பிக் கொட்டையைக் கொடுக்கக்கூடிய அவ்வளவு காப்பி பிரேஸில் தேசத்தில் விளைகின்றது. 1937-38-ஆம் ௵ வரை பிரேஸில் சர்க்கார் 8400 கோடி ராத்தல் காப்பிக் கொட்டையை விலைக்கு வாங்கினார்கள். விலைகள் குறைந்து விடாமல் சரி செய்வதற்காகத் தேவைக்கு அதிகமான காப்பிக் கொட்டையைக் கடலில் கொட்டினார்கள். இப்போது அதைத் தாருடன் கலந்து கட்டிகளாகச் செய்து விறகுக்குப் பதிலாக எரிக்கின்றனர். வாசனைக் கணப்புக்கு, காப்பிக் கொட்டைக் கட்டிகளே ஏற்றவை. காப்பியினின்றும் எண்ணெயும் காபீனும் கிடைக்கின்றன.

பாலர் கதை:

# முதலைப் பாலம்

(மாமி)

ரொம்ப நாளைக்கு முன்னே ஒரு சின்ன முயல் இருந்தது. அது ராமேசுவரத்துக்குப் போயிற்று. கடல் ஓரத்தில் போய் உட்கார்ந்தது.

அலையின் இரைச்சலையும் அகண்ட ஜல வெள்ளத்தையும் பார்த்து ஆனந்தம் அடைந்தது. அக்கரையிலே லங்கை இருப்பதாக, அது கேள்விப்பட் டிருந்தது. லங்கைக்குப் போகவேண்டும் என்று முயல் ஆசைப்பட்டது. "ஆனல், எப்படிப் போவது? என்னல் அவ்வளவு தூரம் நீஞ்ச முடியாதே. என்ன செய்வேன்?" என்று வருத்தப்பட்டது.

இச் சமயம், ஒரு பெரிய முதலை ஜலத்திலே கரை ஓரமாய் வந்தது.



முயலுக்கு உள்ளுக்குள்ளே பயம் உண்டாயிற்று. இருந்தாலும் அதை வெளிக்குக் காட்டவில்லை.

"முதலை சகோதரா! முதலை சகோதரா! நானும் தனியா யிருக்கிறேன், நீயும் தனியாய் யிருக்கிருய். நாம் இருவரும் சிநேகமாய்ப் பேசிக்கொண் டிருப்போமே" என்றது முயல்.

வெயில் காய்வதற்காக வந்த முதலைக்கு இந்தக் குட்டி முயலிடம் இரக்கம் வந்தது. "அப்படியே செய்வோம்" என்றது.

"இந்த அசட்டு முதலையின் மூலம் லங்கைக்குப் போக ஏதாவது தந்திரம் செய்யவேண்டும்" என்று, முயல் மனசுக்குள் நினைத்துக் கொண்டது. பிறகு பேச ஆரம்பித்தது.

"ஆமாம், முதலை சகோதரா! எங்கள் இனத்தார் ரொம்ப ஏராளம். பூமி யெங்கும் இருக்கிருர்கள். உங்கள் இனத்தார்களும் அப்படி ஏராளமா யிருக்கிருர்களோ?" என்று முயல் கேட்டது.

"பூ! எங்கள் இனத்தார் இந்தச் சமுத்திர மெங்கும் இருக்கிருர்கள். அதற்கு மேல் ஆறுகள், ஏரிகள், குளங்களிலெல்லாம் இருக்கிருர்கள். அவர்களைக் கணக்கே பண்ணமுடியாது. பூமியை விடக் கடல் தானே பெரியது. துளி யூண்டு பூமியிலுள்ள உங்கள் இனத்தார் எங்கே? பிரம்மாண்டமான கடலிலுள்ள எங்கள் இனத்தார் எங்கே? ஒப்பிட்டே சொல்ல முடியாத வித்தியாசம் உண்டு" என்று ஜம்பம் பேசியது முதலை.

முயல் ஆச்சர்யம் உற்றதுபோல் பாசாங்கு செய்தது. "ஆமாம்; அவர்களை யெல்லாம் நீ அழைத்து வர முடியுமா? அவர்கள் எல்லாரும் இங்கே யிருந்து வரிசையாக நின்ருல், லங்கை வரையில் நீளமா யிருக்குமோ?" என்று கேட்டது.

"உனக்கேன் இந்தச் சந்தேக மெல்லாம். கொஞ்சம் பொறு; இதோ போய் அவர்களை யெல்லாம் நான் அழைத்து வருகிறேன். நீயே பார்த்துக் கொள்" என்றது முதலை. இப்படிச் சொல்லி, 'விறுக்' கென்று நீருக்குள் மூழ்கி மறைந்தது.

முயலும் உள்ளுக்குள்ளே நகைத்து, கரையிலே காத்திருந்தது.

அரை மணி நேரத்துக் கெல்லாம் முதலை தனது பரிவாரங்களை அழைத்து வந்தது. வரிசையாக, நீரிலே அந்த எல்லா முதலைகளும் நின்று கொண்டன.

"இப்பொழுது பார். லங்கை மட்டிலுமல்ல; அதற்கு அப்பாலும் இருக்கிறோம்" என்றது தலைமை முதலை.

"ஏ அப்பாடா! ஆயிரம் முதலைகள் இருப்பீர்கள் போலிருக்கிறதே!" என்று வியப்பாய்க் கேட்டது முயல்.



"ஆயிரமா! அட முட்டாள் முயலே! ஆயிரந்தானு? எத்தனையோ ஆயிரம்—லட்சம், பத்து லட்சம், கோடி முதலைகள் இருக்கிறோம். நீ வேண்டுமானுல் எண்ணிப் பார்" என்றது முதல் முதலை.

"அப்படியானுல் சரி. நீங்கள் எல்லாரும் துளிக்கூட அசையாமல் நில்லுங்கள். நான் ஒவ்வொருவர் மீதும் தாண்டித் தாண்டி எண்ணிக் கொண்டே போகிறேன். ஆனல், நான் எண்ணி முடியும் வரையில் யாரும் நகரவே கூடாது" என்றது முயல்.

"ஆகட்டும்" என்றது தலைமை முதலை.

முயல் துள்ளித் துள்ளி, தாண்டித் தாண்டி, இந்த முதலைப் பாலத்தின் வழியாக லங்கை போய்ச் சேர்ந்தது.

அங்கே கரையிலே ரொம்ப தூரத்துக் கப்பால் போய் நின்று கொண்டது. பிறகு நகைத்துக் கொண்டே, "அட மதிகெட்ட முதலைகளே! உங்களுக்குக் கொஞ்சம்கூட அறிவு கிடையாது. எனக்குப் பாலமா யிருக்கத்தான் நீங்கள் தகுதி. இல்லாவிட்டால், நான் சொன்னதை யெல்லாம் நம்புவீர்களா? நான் லங்கை வந்து சேர்ந்து விட்டேன். இனி உங்கள் பாலம் தேவை யில்லை. தேவை யிருந்தால் சொல்லி யனுப்புகிறேன். இப்போது போய் வாருங்கள்" என்று பரிகாசமாய்ச் சொல்லிற்று.

முதலைகளுக்கு மகா கோபம் வந்தது. ஆனுலும் என்ன செய்வது? அவற்றுல்தான் கரையில் ஓடிவர முடியாதே! "இரு இரு, திருட்டு முயலே! திரும்பி வரும்போது இந்த வழியாய்த்தானே வரவேண்டும். அப்போது உன்னை அப்படியே கடித்து நொறுக்கி விழுங்கி ஏப்பம் விடுகிறோம், பார்" என்று உறுமின.

"அடேயப்பா, என்ன வீரமடா! நான் திரும்பி வரப் போவதில்லை; இங்கேயேதான் இருக்கப் போகிறேன். மிஞ்சி அவ்வாறு திரும்பிவர நேர்ந்தாலும், அந்தச் சமயம் எனக்கு ஒரு தந்திரம் தோன்றுமலா போகப் போகிறது!" என்று சொல்லி, முயல் காதை நெரித்து, ஆனந்தமாய்த் துள்ளிக் குதித்துக் கொண்டு, ஓடி மறைந்தது.

*நீங்கள் அறிவீர்களா?*

பிரிட்டிஷ் பிரதம மந்திரியா யிருந்தாரே காலஞ்சென்ற ராம்ஸே மக்டானல்டு, அவர் இந்தியக் காங்கிரஸுக்குத் தலைவராய் வர இருந்தது உங்களுக்குத் தெரியுமா? 1911-ஆம் வருஷ கல்கத்தாக் காங்கிரஸுக்கு அவர் தலைமை வகித்திருப்பார். ஆனல், அந்த வருஷம் செப்டம்பரில் அவர் மனைவி மரண மடைந்ததால்தான் அது தவறிவிட்டது.



# எலிக் கலியாணம்

(தே. வி.)

எலிக்கும் எலிக்கும் கலியாணம்;
இரவிலே சுப முகூர்த்தமாம்.
வீட்டெலி வந்தது; காட்டெலி வந்தது;
வெள்ளெலி வந்தது; முள்ளெலி வந்தது;
குண்டெலி வந்தது; சுண்டெலி வந்தது;
எங்கெங்கும் உள்ள எல்லா எலிகளும்
கூட்டமாய்க் கூடிக் குதிலுள் நுழைந்த பின்,
நல்ல விருந் தேழுநாளாய் நடந்தது.
மங்கலமாக மணமும் முடிந்தது.
வாழ்க வாழ்கவே! மணமக்கள் வாழ்க வாழ்கவே!

# புத்தக உலகம்

## பௌத்தமும் தமிழும்

ஆசிரியர் : மயிலை சீனி வேங்கடசாமி. பதிப்பாளர் : கா. ஏ. வள்ளிநாதன், மயிலாப்பூர், சென்னை. விலை ரூ. 1-8-0.

தமிழ் நாட்டிலே ஒரு காலத்தில் பௌத்த மதம் பரவி யிருந்ததையும், பின்பு அது, கனவாய்ப் பழங்கதையாய் மறைந்ததையும், பௌத்தப் பெரியார்களையும், அவர்கள் இங்கு இயற்றிய நூல்களையும் பற்றி, இப்புஸ்தகத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

சாதாரண ஆராய்ச்சிப் புஸ்தகங்களைப் படிப்பதில் சலிப்பு ஏற்படுவதுண்டு. "இந்த அரசன் இந்த வருஷம் இந்தத் தேதியில் இறந்தான்" என்ற ஒரே பல்லவிதான் திரும்பத் திரும்ப வந்து நம் பொறுமையைச் சோதித்துக்கொண்டிருக்கும்.

ஆனல், இந்தப் புஸ்தகத்தில் அப்படி அருசி ஏற்படாமல் பல ரஸமான விஷயங்கள் திரட்டிக் கொடுக்கப்பட்டிருப்பதால், லேசாகப் படித்துக்கொண்டு போகிறேம். தெளிவான நடையில் ஆசிரியர் எழுதி இருக்கிறர். சில புத்த சிலைச் சித்திரங்களும் காணப்படுகின்றன. —'ரதி'

## வாழ்க்கையே வாழ்க்கை

ஆசிரியர் : எஸ். வி. வி. வெளியிட்டோர் : அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை ரூ. 1-0-0.

'ஆனந்த விகட'னில் அவ்வப்போது வெளிவந்து கொண்டிருந்த எஸ். வி. வியின் வாழ்க்கைச் சித்திரங்களில் பன்னிரண்டை எடுத்துத் தொடுத்து அல்லயன்ஸ் கம்பெனியார் இந்தப் புஸ்தகத்தை வெளியிட்டிருக்கிறர்கள். எஸ். வி. வியினுடைய சிரிப்பு, சீமைச் சிரிப்பல்ல; முழு உள்நாட்டுச் சரக்கு. படித்தவர்களோ விஷய மறிந்தவர்களோ மாத்திரம் படித்து அனுபவிக்கக்கூடிய சிலருடைய ஏகபோக உரிமையல்ல.

எஸ். வி. வி. யினுடைய கவனசக்தி வாசகர்களைப் பிரமிக்க வைக்கிறது. கைக்கு வரும் விளையாட்டுச் சாமானை ஆவலுடன் பார்க்கும் குழந்தையைப் போல் வாழ்க்கையின் பழக்க வழக்கங்களை உற்று நோக்கி யிருக்கிறர். பார்த்தது மட்டுமல்ல : பார்த்ததை, சக்தி வாய்ந்த எளிய நடையில் வெளியிட்டுமிருக்கிறர். "அம்மாவுக்கு ஜுரம்", "ருக்மணிக்கு வயிற்றிலே பல்" என்பவை போன்ற சித்திரங்களை எவ்வளவு தாம் திருப்பித் திருப்பிப் படித்தாலும் சிரித்துக் கொண்டேதான் படிக்க முடியும் —'பி.வி.எஸ்.'

## தீனபந்து ஆண்ட்ரூஸ்

ஆசிரியர் : தி. ஜ. ர. வெளியிட்டோர் : அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை : அணு 10.

தம்முடைய திருமேனி தவிப்புண்டு களைப்பெய்தி, பல பாடு படும்போது, ஏசுநாதர், "அறியாமையால் இவர்கள் செய்யும் பிழையை மன்னியும்" என்று திருவாய் மலர்ந்தருளினர். அத்திருக்கூட்டத்தின் வழித் தோன்றிய 'தீனபந்து' ஆண்ட்ரூஸைப் பற்றிய சரித்திரம் இது. இந்தப் புத்தகத்தில் ஆண்ட்ரூஸின் பிறப்பு வளர்ப்பு, வாழ்க்கைக் கனவு, முடிவு முதலிய விஷயங்கள் கச்சிதமாக விவரிக்கப்பட்டிருக்கின்றன.

நம்முடைய சுதந்திரத்தைப்பற்றி ஆங்கிலேயர்கள் தங்கள் மனதில் தோன்றியபடி யெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கும் இந்த நாளிலே, அந்தப் பரம்பரையில் உதித்த ஒருவர் என்ன அபிப்பிராயம் கொண்டிருந்தார் என்பது சந்தர்ப்பத்திற்கு ரொம்பப் பொருத்தமானதே.

ஆசிரியர் தி. ஜ. ர. கங்கை ஓட்டம் போன்ற கம்பீரமான நடையில் விஷயங்களை வெகு அற்புதமாக வர்ணித்திருக்கிறர். ஒரு சிற்பியின் சிருஷ்டியைப் பார்த்து ஒரு மகான், "எது எது, எப்படி இருக்க வேண்டுமோ, அது அதெல்லாம், அவ்விதமே அமைந்திருக்கிறது" என்று சொன்னராம். இக்கலைஞரின் சிருஷ்டியான இப்புத்தகத்தை நாமும் அவ்விதம்தான் சொல்லுகிறேம். ஆங்கிலத்தில் 'தீனபந்து' வைப்பற்றி அநேகம் கட்டுரைகள் படித்திருக்கிறேம். ஆனல் தமிழில் படிக்கையில், டி. கே. ஸி. சொல்வதுபோல், 'தாய்ப் பாஷை யாகையால் பூர்ணமாய் அனுபவிக்க முடிகிறது.'

ஒரு அமெரிக்க இயற்கைநூல் ஆசிரியரைப்பற்றி கவி எமர்ஸன், "அமெரிக்காவில் இவர் பிறக்கக் கூடியவரல்ல; இந்தியாவில் பிறந்திருக்க வேண்டியவர்" என்று கூறினராம். இதற்குக் காரணம் அந்த ஆசிரியரின் வாழ்க்கை நம் கலாச்சாரப் பண்பு நிறைந்ததாய் இருந்ததாம். நம்முடைய தீனபந்துவும், இங்கிலாந்தில் பிறக்காது இந்தியாவில் பிறந்திருக்க வேண்டியவர். ஆனலுந்தான் என்ன? நதி எஙகு உற்பத்தியானலும் சமுத்திரத்தில் தானே சங்கமமாகிறது?

பொது வாழ்வில் ஊக்கமில்லாதவர்களும் இந்தப் புஸ்தகத்தைப் படித்தால் நிச்சயம் மிக்க உணர்ச்சி அடைவார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. —'ரதி'

## இந்திய சமஸ்தானங்கள்

ஆசிரியர் : கே. அருணசலம். வெளியிட்டோர் : சுதந்திர ஜோதி பிரசுராலயம், 289, லிங்கிச் செட்டி தெரு, சென்னை. விலை ரூ. 1-8-0.

தமிழ்ப் பாஷையிலும் சரித்திரங்களை யாவரும் ரசிக்கும்படியாக அமைத்து எழுத முடியும் என்பதை இந்நூல் காட்டுகிறது. இந்நூலின் இடையே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் ஆசிரியரின் ஆராய்ச்சி அறிவை வெளிக்காட்டுவதுடன் வாசிப்போரின் ஞானத்தையும் விசாலப் படுத்திவிடுகிறது. கொடுக்கப்பட்டுள்ள பொருத்தமான மேற்கோள்கள் வாசிப்பவரின் அவாவைத் தூண்டி விடுகின்றன.

பாஷை மிக எளிமையாக அமைந்து பாமர மக்களுக்கும் விளங்கும்படியாக இருந்த போதிலும், விறு விறுப்புக் குறையவில்லை.

சுதேச சமஸ்தானங்கள், ஏதோ பிரிட்டிஷ் சர்க்காருடன் சமத்துவமாய் உடன்படிக்கைக ளெல்லாம் செய்து கொண்டதாக, ஸர் ஸி. பி. ராமசாமி போன்றேர் வேண்டுமானல் ஜம்ப மடித்துக் கொள்ளலாம். ஆனல், அவற்றை பிரிட்டிஷ் சர்க்கார் சூத்திரப் பாவைபோல் இஷ்டப்படி ஆட்டி வைக்க முடியும் என்பதை இந்நூலினின்றும் அறியலாம். நினைத்தால், எந்த இந்திய சமஸ்தானத்தையும் பிரிட்டிஷ் சர்க்கார் கைப்பற்றிக்கொள்ள முடியும்.

"சிந்துவைக் கைப்பற்றுவது நியாயமாகாது. இருந்தபோதிலும் நாம் அப்படிச் செய்தே தீருவோம். அந்த வேலையானது ஒண்ணும் நெம்பர் அயோக்கியத்தனமாகும்" என்று சர் சார்லஸ் நேப்பியரே கூறியிருக்கிறர். (பக்கம் 30)

இந்திய சமஸ்தானங்களும் அதன் அரசர்களும் எந்த நிலையில் இருக்கின்றார்கள் என்பதை மிகத் தெளிவாகக் காட்டுகிறது இந்த நூல். —'மணி'

## மாதவி கங்கணம்

ஆசிரியர்: வே. கா. ராமநாதன், பி. ஏ., பி. எல். வெளியிட்டோர்; அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை: முதல் வால்யூம் ரூ. 2-0-0; இரண்டாம் வால்யூம் ரூ. 1-4-0.

இந்நூல் பிரபல வங்க ஆசிரியரான ஆர். ஸி. தத்தர் எழுதிய ஒரு சரித்திர சம்பந்தமான நவீனம். இதைத் தமிழில் ஒரு சிறந்த வழிநூலாகச் சமைத்தவர் ஸ்ரீ வே. கா. ராமநாதன் என்பவர்.

முதலில் இந்நூற் பொருளைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லலாமென்று எண்ணினேன். இந்நூலின் உள் நுட்பங்களை ஒருவாறு தெரிந்தெடுத்து எழுதலாமென்ற நோக்கத்துடன் கதையைக் கருத்துடன் படித்து வந்தேன். ஆனால், நூல் இறுதியில் வழிநூல் ஆசிரியர் தந்துள்ள 'பின்னுரை'யைப் படித்ததும், இவ்வகையில் நான் எழுதுவதற்கு ஒன்றுமில்லை யென்பது தெரிந்தது. நேயர்கள் தாங்களாகவே நூல் நுட்பத்தைப் படித்தறிந்து கொள்ளலாம். இருந்தாலும்......... ஒரு வார்த்தை!

கதை, அக்பர் காலத்திய இந்திய நிலைமையைச் சித்தரிப்பதாகும். சிறு சிறு ஜமீன்கள் தலைமுறை தலைமுறையாய்ச் சமர் புரிந்து வருவதும், டில்லியில் ஏக சக்ராதிபத்தியம் தழைத்தோங்கும்போது இவை ஒருவாறு மட்டுப்படுவதும், சரித்திர ரீதியாக வர்ணிக்கப்பட்டுள்ளன. தவிர, சமூக அடிப்படையான சாமானிய மக்களது அன்றாட வாழ்க்கை, மதம், கலை இவை சம்பந்தமான ஆசா பாச அபிவிருத்திகள் ஆகியன வெல்லாம் அழகாகக் கதையில் பிரதிபிம்பிக்கப் பட்டுள்ளன.

மேலே கண்டவை, கதையின் பின்னணியேயாகும். குறிப்பாகக் கதாபாத்திரங்களைப் பற்றியும், கதையின் போக்கைப் பற்றியும் அதிகம் கூறத் தேவையில்லை. திடீர் சம்பவங்கள், பெரிய இடத்துச் சதிகள், மனிதப் பிறவிக்கெல்லாம் பொதுவான காதல் காட்சிகள், அபிலாஷை லட்சியங்கள், வாழ்க்கைப் போராட்டத்தின் எதிர்பாராத (விதி வசத்தால் வருவதாகக் கொள்ளப்படும்) வெற்றி தோல்விகள்—இவற்றிற்கு இந்நீண்ட கதையில் குறைவேயில்லை. இதுவரை நாம் கண்டவை யெல்லாம் கதையின் சாமானியச் சின்னங்களாகும். இடையிடையே கதை யருவியின் ஓட்டம் சிறிது குறைந்து, தல்லிய நீர்த் தேக்கங்களில் ஊசலாடுவதுபோல் சின்னஞ்சிறு சித்திரங்கள் பலவும் இக் கதையில் மலிந்து கிடக்கின்றன. எளிய பாமரரின் பாக்கள் பற்றி ஓரிரு இடங்களில் பிரஸ்தாபித்திருப்பதும், ஹிந்துக் குடும்ப வாழ்க்கையில் விதவைச் சகோதரிகள் வகித்துவந்த தனி நிலை பற்றிய விளக்கமும், நவ்ரோஸ் தினத்தன்று ஜனானக் கடைகளில் உயர்குலப் பெண்டிர் பேரம் பேசுவதைச் சித்தரித்துள்ள விந்தையும், எந்த ஆசிரியனும் எளிதில் செய்யக்கூடியவை அல்ல.

முடிவில், மொழி பெயர்ப்பைப்பற்றி ஒரு வார்த்தை. ஒவ்வொரு வாக்கியமும் முதல் நூல் மொழியை மனதிற் கொண்டு மிகுந்த சிரத்தையுடன் எழுதியதாகவே தோன்றுகிறது.

நடையில் சிக்கலோ, தடங்கலோ சிறிதும் இல்லை. சம்ஸ்கிருதப் பதங்கள் அதிகமாக வருவதாகச் சிலர் எண்ணலாம். ஆயினும், 'பரஸ்பர வைரிகளை' மறந்து, உபய கக்ஷியாரும் சமர் ஒழித்து' என்பதில் இருமொழிச் சொற்களும் எவ்வளவு சரளமாய்க் கலந்து விடுகின்றன! இதில் இன்னுமொரு விசேஷம் உண்டு; சம்ஸ்கிருதச் சொற்கள் பழக்கத்தில் வந்தவையும் எளியவையுமாகும்; தமிழ்ப் பதங்களோ, கொடுந்தமிழ்ப் பக்தரையும் பரவசப்படுத்தக் கூடியவை! இதைவிட வேறென்ன வேண்டும்?

—நீலு ராமஸாமி.

---

# சீமைப் போரில் நீலகண்டன் வீரம்

கடல் போரில் வீரங்காட்டிச் சீமைப் பத்திரிகைகளில் புகழப் பெறும் தென்னிந்திய இளைஞர் ஸ்ரீ நீலகண்டன் என்பவர், இந்தியாவிலுள்ள தம் தந்தைக்கு எழுதியுள்ள ஓர் கடிதத்தில் கூறுவதாவது:

சண்டையிலே என்னுடைய ஆடைகளை யெல்லாம் பெரும்பாலும் இழந்துவிட்டேன் என்று நான் சொன்னது உங்களுக்கு ஞாபகமிருக்கும். இப்போது நான் பதினான்கு நாட்களுக்கு ஓய்வு பெற்றிருக்கிறேன். மிகவும் அவசியமான சாமான்களை எல்லாம் மிக மும்முரமாகச் சேகரித்து வருகிறேன்.

கொஞ்சம் 'சந்தோஷமான' செய்தி சொல்லட்டுமா? நேற்று என் தலைவரிடமிருந்து எனக்குக் கீழ்க்கண்ட கடிதம் வந்தது:

"அன்புள்ள கிருஷ்ணனுக்கு.

எப்ரல் மீ ... உ நடந்த சண்டை சம்பந்தமாய்க் கீழ்க்கண்ட விதங்களில் அரிய சேவை செய்ததற்காக,......க்ரூய்ஸர் படையைச் சேர்ந்த உபதளபதிக்கு அனுப்பிய பெயர்களோடு உன்னுடைய பெயரும் போயிருக்கிறது.

"... உஷாராகவும் தைரியமாகவும் மலைவுறாமலும் இருந்ததற்காகவும், கண்காணிப்பு நடத்தித் தகவல் தெரிவித்ததற்காகவும், திருப்பித் தாக்குவதில் கப்பலுக்குப் பெரிதும் உதவி செய்தற்காகவும் தான், அப்படி உன்பெயரும் அனுப்பப்பட்டிருக்கிறது.

இங்ஙனம்
உன் அன்புள்ள,
ஜான் டர்ன்போர்ட், தலைவர்"

இந்தக் கடிதத்திலே இரண்டு இடங்களில் நான் வார்த்தைகளை விட்டிருக்கிறேன். அவற்றைச் சேர்ப்பது தணிக்கை விதிகளுக்கு முரணாகும். எனக்குப் பதக்கம் கிடைக்குமா என்னவென்று இவ்வளவு சீக்கிரம் சொல்ல முடியாது. ஆனால் அநேகமாய்க் கிடைத்துவிடும் போலத்தா னிருக்கிறது. பதக்கம் கிடைக்கா விட்டால் கூட, இப்படிப் பெயர் அறிவிக்கப்படுவதே ஒரு பெரிய கௌரவந்தான்.

நான் மீண்டும் என் பழைய கப்பலிலே போய்ச் சேரமாட்டேன். எந்த நிமிஷமும் வேறொரு கப்பலில் போய்ச் சேருவதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். மறுபடியும் எப்பொழுது கடலுக்குப் போய்ச் சேருவோமோ என்று நான் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறேன். தற்போது யுத்தத்திலே மிகவுங் கஷ்டமான தசையில் நாம் இருக்கிறோமல்லவா? மன்னிக்க வேண்டும். இது மிகவும் ஸ்வாரஸ்யமான தசையுங்கூட.

வீட்டிலே எல்லாருக்கும் என் வணக்கத்தைத் தெரிவிக்கவும். அடுத்தக் கப்பலிலிருந்து நான் மறு கடிதம் எழுதுகிறேன்.

இங்ஙனம்
உங்கள் அன்புள்ள,
மகன்.

விரைவில் வெளிவருகிறது! எதிர்பாருங்கள்!!

சக்தி மலர் ௬

தமிழ் நடை எழுதுவதில் தலைசிறந்து விளங்குமொரு சிலரில் ஒருவரான

தருமபுர ஆதீன வித்வான்

**காழி. சிவ. கண்ணுசாமி, பி. ஏ.**

எழுதிய

# நிர்மல குமாரி

இந்து தேச சரித்திரத்தை யொட்டி யெழுந்த இன்பநவீனம்; வங்க நாட்டுப் பழக்க வழக்கங்களை விளக்கும் ஒப்பற்ற புதுக்கதை: கலப்புமணக் காதலரின் கருத்தொருமித்த காதலின்பம்; ஆற்றொழுக்குப் போல் அழகாய்ச் செல்லும் இனிய எளிய தமிழ் நடையாலியன்ற சிறந்த நாவல்.

கிடைக்குமிடம்:

**சக்தி காரியாலயம்,**

51C/52, அரமனைக்காரத் தெரு, சென்னை.

## முக்கிய அறிவிப்பு

லியோ டால்ஸ்டாயின் 'இனி நாம் செய்ய வேண்டுவது யாது?' என்ற சக்தி மலர் 1, ஆங்கிலத்தில் ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடி பிரஸ்காரர் பிரசுரித்ததும் ஆய்மெர் மாட் என்பாரின் ஆங்கில மொழிபெயர்ப்புமான "What then Must we do?" என்ற புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும் என்பதை இதன் மூலம் சந்தோஷத்துடன் பொது மக்களுக்கு அறிவிக்கிறோம்.

**சக்தி காரியாலயம்,**

51 C, 52 அரமனைக்காரத் தெரு, சென்னை.

# வானிஷ்

**சர்மரோக நிவாரணி**:—இது படை, புழுக்கடி, பித்தவெடிப்பு, முகப்பரு, பனி காலங்களில் ஏற்படுகிற உதடு வெடிப்பு, வேனல் கட்டி, பருக்கள், கரப்பான், சிரங்கு, தேமல், கக்கூஸ்பத்து, தீப்பட்ட புண், மற்றும் தோல் சம்பந்தப்பட்ட எல்லா நோய்களுக்கும் சிறந்த ஔஷதம். நல்ல மணமுடையது. எரிச்சல் இராது. கறைபிடிக்காது.

**இரண்டே நாளில் குணம் தரக்கூடியது**

**பாட்டில் 1க்கு விலை அணா 4.**

மற்றும் எங்களால் தயாரிக்கப்பெறும் நியூபாம், ஸ்கார்போ, நயனோ முதலிய மருந்துகளை வாங்கி உபயோகித்து திருப்தி அடையுங்கள்.

**எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.**

**Dr. V. S. S. MONI,**

L. M. S., M. B. H. (Calcutta)

KARAIKUDI.

## ஸ்ரீ பழநி பஞ்சாமிர்தம்

தமிழர்கள் குலதெய்வமும் கலியுகப் பிரத்தியக்ஷ தெய்வமுமான ஸ்ரீ பழனி ஆண்டவர் அபிஷேக பஞ்சாமிர்த சந்தன விபூதி பிரசாதங்களடங்கிய செட் 1-க்கு ரூ. 3-8-0. பக்தர்கள் நாம நக்ஷத்திரத்தால் விசேடமாக முறையே ஆண்டவர் பாதாரவிந்தத்தில் அர்ச்சனை ஆராதனை செய்து பிரசாதமனுப்ப ரூ. 1-0-0.

மாதக் கார்த்திகை தோறும் வருடக் கட்டளையாக அர்ச்சனை செய்து பிரசாதமனுப்ப ரூ. 7-0-0.

P. நடராஜ பண்டாரம்,

மலைக்கோவில்,

அயன் மிரூஸ், பழனி, S. I

# THREE COLOUR Process Blocks



M.C. APPASAWMY CHETTY & CO.

COLOUR HALFTONE & LINE BLOCK MAKERS

14, Jone's St., Mannady, MADRAS

# இந்த இதழில்—

**அ. சீனிவாசராகவன் (பக்கம் 133)**

திருநெல்வேலி ஹிந்துக் கல்லூரியில் ஆங்கிலப் புரொபஸர். தமிழிலும் நல்ல புலமை யுடையவர். ஆங்கிலமும் சரி, தமிழும் சரி, உளி கொண்டு செதுக்கி மெருகிட்ட சிற்பம் போன்ற மிக அழகான நடை எழுதுவார். உயர்ந்த ரஸிகர். தமிழ் எழுத்தாளர் என்றால், பரம வாற்சல்யம் கொள்வார். மூலை முடுக்கிலேயுள்ள தமிழ் எழுத்தாளர் தொடங்கி, பிரபல பத்திராசிரியர் வரையில் அத்தனை பேருக்கும் நேசர். 'சக்தி'யில் தொடர்ந்து எழுதுவதாக வாக்களித் துள்ளார்.

**பிக்ஷு (பக்கம் 118)**

தமிழ் நாட்டின் தலைசிறந்த எழுத்தாளரில் ஒரு மிக முக்கிய ஸ்தானம் உடைய ஒருவர். அப்பழுக்குச் சொல்ல முடியாத, கலைச்சுவை மிக்க கதைகள் எழுதுவார். பல வசன கவிகளும் எழுதி வைத்திருக்கிறார். கவிதை உணர்ச்சியும், வர்ணமும் அவற்றிலே ஊடுருவி ஒளிர்கின்றன.

**க. நா. சுப்பிரமணியம் (பக்கம் 135)**

மாஜி 'சூறவளி' ஆசிரியர். தமிழிலக்கியச் செல்வத்தைக் கொழிக்கச் செய்ய வேண்டுமென்று பேரார்வம் படைத்தவர். மிக உயர்தரமான ஆங்கிலம், பிரஞ்சு பத்திரிகைகள் போன்ற பத்திரிகைகள் தமிழில் வரவேண்டும்; அந்த பாஷைகளின் உன்னத நூல்கள் போன்ற தமிழ் நூல்கள் மட்டுமன்று—அவையே கூடத் தமிழில் வந்து விடவேண்டும் என்று மிக்க ஆசைகொண்டவர். பாருங்கள், அருமையான ருஷ்ய நடைச்சித்திரமொன்றை, எவ்வளவு அழகாகத் தமிழ்ப்படுத்தி யிருக்கிறார்!

**ஆர். பி. மகாதேவ சிங் (பக்கம் 113)**

சென்ற மாதம் இவரது கேலிப்பாட் டொன்றை வெளியிட்டிருந்தோம். இந்தக் கதைதான் அவரது முதல் கதை. என்ன வர்ணனையாகவும், என்ன உருக்கமாகவும் எழுதி யிருக்கிறார்! இத்தனைக்கும் பரம்பரைத் தமிழரல்ல. வடநாட்டிலிருந்து தமிழ் நாட்டில் வந்து மூன்று தலைமுறையாய்க் குடியேறிய தமிழர். ஆம், தமிழர்தான்; இனியும் அவரைத் தமிழர் அல்லவென்று சொல்ல முடியுமா?

**'தீ' (பக்கம் 138)**

மகா ரஸிகர். இவரது முழுப்பெயரையும் சொன்னால், அநேக எழுத்தாளரும் பிறரும் அறிவர். இம்மாதிரி கிராம்ய அழகு சிந்தும் பாடல்களை வெளியிட்டால், யாராவது என்னவாவது சொல்லுவார்களோ என்ற அச்சமோ என்னவோ, தமது முழுப்பெயரை வெளியிட அவர் இசையவில்லை. அந்த பாரத்தைச் சுமக்க நாம் போதும் என்று எண்ணுகிறார் போலும்!

**வ. சு. (பக்கம் 115)**

பத்திரிகை பூராவும் விஷயச் செறிவு நிறைந்த கட்டுரை, கதைகளையே போட்டு நிறைக்க வேண்டும் என்று ஆசைப்படுபவர். பெரிய பெரிய ஸயின்ஸ் புஸ்தகங்கள், பெரிய பெரிய இலக்கிய நூல்கள் எல்லாமுங்கூட அப்படியே 'சக்தி'க்குள் அடைபட்டு விடவேண்டும் என்று விரும்புபவர். என்ன எழுதித் தரச்சொன்னாலும் சலிப்பின்றி எழுதித் தருவார்.

டெலிபோன் : 2724    த. பெ. நெ. 113.    தந்தி : "Goodwill"

ரப்பர் கேபிள், காப்பர் வயர், மின்சார மீட்டர், பல்பு முதலிய எலெக்ட்ரிக் சாமான்கள், சீலிங் விசிறிகள், டேபிள் விசிறிகள், அமெரிக்கன் கில்பர்ட் அழகிய விசிறிகள்.



கில்பர்ட்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் சென்னை-
134128




டைப்ரைட்டர்

'நாமன்' ஐடியல், எரிகா போர்ட்டபிள் இங்கிலீஷ் தமிழ் டைப்ரைட்டர்கள், பேப்பர், செம்பு, பித்தளை, ஈயம் முதலிய உலோகப் பொருள்கள்.

திரணைக்கம்பி, சதுரம், பட்டா, கலவனைஸ்டு தகடுகள், ஆணி, போல்ட்டு அண்ட் நட் வகைகள், டால்மியா சிமிண்ட், கலர் சிமிண்ட், பெயிண்ட் முதலிய எல்லா சாமான்களும் எங்களிடம் கிடைக்கும்.

**ஸௌத் இந்தியா கார்ப்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்,**

80, செம்புதாஸ் தெரு,    ஜி. டி. மதராஸ்.

**பிராஞ்சுகள் :**

**கல்கத்தா    காரைக்குடி    கோயம்புத்தூர்.**

# யுத்தம்

நடக்கும் சமயத்தில்கூட மார்க்கட் நிலவர
ஏற்றத் தாழ்வினால் பாதிக்கப்படாதது

## லைப் இன்ஷியூரன்ஸ்

அதற்குத் தேய்மானம் கிடையாது; நஷ்டம் கிடையாது; ஆனால், லாபம் கூடுவதால், அதன் மதிப்பு அதிகரிக்கிறது. உடனே சொத்து ஏற்படுத்துகிறது. எதிர்காலப் பாதுகாப்பாகவும் இருக்கிறது. அதன் பெறுமானம் தன் இயற்கை மதிப்புக்கு அதிகமாகவே யுள்ளது.

எவ்விதமான பண நிலையிலிருப்பவர்களுக்கும் யாவருக்கும் ஏற்ற லாபகரமான, பத்திரமான, நாணயமான பாலிஸிகளை **ஹிந்துஸ்தான்** அளிக்கிறது.

இதில்
இன்றே, இப்பொழுதே இன்ஷியூர்
செய்யுங்கள்

## ஹிந்துஸ்தான்

கோவாபரேடிவ் இன்ஷியூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்

*தலைமை ஆபீஸ்:*

“ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்”
ஸுரேந்திரநாத் பானர்ஜி ரோடு,
கல்கத்தா

*மெட்ராஸ் பிராஞ்சு:*

“ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்”
107, அரண்மனைக்காரத் தெரு,
சென்னை


Printed at Shakti Press Ltd., (Shanti Press), 52, Armenian Street, Madras. *Published by*: A. Krishnamurthi, *Managing Editor*: V. Govindan.